281

குண்டூசி

நவம்பர் '52..எட்டு அணா

281
1.53.

நேஷனல் புரொடக்ஷன்ஸ்

மாப்பிள்ளை

டைரக்ஷன் ஸ்டுடியோ

ரூ. 1,000 ரொக்க இனாம்!

நீங்கள் நாடியதெல்லாம் கைகூடும்

எல்லாவிதமான பிரயத்தனம் புரிந்து நீங்கள் மனம் சோர்ந்திருந்தாலும் சரி; இந்த மாய ஜால மோதிரத்தை வாங்கி அணிந்து கொள்ளுங்கள். இதை அணிந்தவுடனே நீங்கள் விரும்பிய நபர் ஆணாயிருந்தாலும், பெண்ணாயிருந்தாலும் தக்ஷணமே வசியமாகி விடுவார். அன்னவர் எவ்வளவு கல்லைப் போன்ற மனம் உடையவராய் இருந்தாலும், ஏழு சமுத்திரங்களுக்கு அப்பால் இருந்தாலும், எல்லாத் தடைகளையும் கடந்து வந்து உங்கள் பேச்சைக் கேட்டு நடப்பார். இஷ்டப்பட்டவரை நீங்கள் மணப்பீர்கள். இதனால் மலட்டு ஸ்திரீக்கும் புத்திர சந்தானம் உண்டாகும். இறந்தவர்களின் ஆத்மாவோடு பேசலாம். பூமியில் இருக்கும் புதையல் உங்கள் கனவில் தோன்றும். லாட்டரி ஆட்டப்பந்தயம், சூதாட்டம், வழக்கு, இவற்றில் ஜெயம் உண்டாகி வெற்றி பெறுவீர்கள். பரீக்ஷையில் தேறுவீர்கள். வியாபாரத்தில் லாபம் உண்டாகும்.

துஷ்டகிரகம் சாந்தம் அடையும். தரித்திரம் விலகும். நல்லதிர்ஷ்டம் உண்டாகும். ஜீவிய காலம் சுகமாகவும் சந்தோஷமாகவும் கழியும்.

மாந்திரீக மோதிரம் விலை ரூ. 1-15-0. ஸ்பெஷல் மோதிரம் ரூ. 3-0-0. ஸ்பெஷல் சக்தி மிகுந்தது ரூ. 3-15-0. மின்சார சக்தியைப்போல் உடனே இது பலன் தரும். இந்த மாய மோதிரம் கிரஹணம் போன்ற சமயங்களில் தயார் செய்யப்படுகிறது. சூரியன் தவறுதலாய் மேற்கில் உதித்தாலும், இம்மோதிரத்தின் சக்தி தவறமாட்டாது. அப்படிப் பலன் இல்லையென்றால், இரட்டிப்பு சார்ஜ் வாபஸுக்கு காரண்டி. பலனில்லை என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனாம்! ஒருமுறை பரீக்ஷித்துப் பாருங்கள்.

விவரங்களுக்கு எழுதவும்:

Principal,

The Bengal Mesmerism House (G.M.)

JULLUNDUR CITY.



COMPLEMENTARY
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 JAN 1953
MADRAS

134137

"Theatre chairs with Dunlopillo cushions and arm rests provide the maximum of seating comfort, and at the same time the highest acoustic absorption yet reached

Latex foam cinema seating

in theatre seats"—Ideal Kinema. Dunlopillo cinema seating is most economical. It has no springs or separate pieces and therefore needs no repairs. Being self-ventilating with millions of cells, it is COOL. It repels bugs. What could be more suitable for a climate such as ours?

TRADE MARK

DUNLOPILLO

NOW MADE IN INDIA BY

DUNLOP

FOUNDERS OF THE LATEX FOAM INDUSTRY

GPX 11A



மூன்றே ரூபாய்க்கு
கைக்கடிகாரம்



மூன்றே ரூபாய்க்கு நீங்கள் ஒரு கைக்கடிகாரத்தைப் பெறலாம். அழகுக்கும், உறுதிக்கும் பத்து வருஷ உத்திரவாதம் உண்டு.

தபால் சார்ஜ் தனி.

JOHNSON WATCH IMPORT Co., (G.M.)
JULLUNDUR CITY.

ரூ. 5-க்கு ஒரு ரேடியோ!



மின்சாரமோ, பாட்டரியோ இல்லாமல் ஸ்பஷ்டமான நாதத்தைக் கொடுக்கும். ஐந்தே ரூபாய்க்கு அது உங்களுடையது ஆகலாம். எங்கள் புதிய திட்டத்தைப் பிரபலப்படுத்தவே அளிக்கிறோம். குறைவான ஸ்டாக்கே உள்ளது. ஏமாற்றத்தைத் தவிர்க்க உடனே விண்ணப்பித்துக் கொள்ளவும்.

AMERICAN TRADING CO.,
Radio House (G.M.)
JULLUNDUR CITY.

குண்டூசி

நவம்பர் 1952

இந்த ஊசியில்

தனிக்கை போர்டு தூங்குகிறதா? 5
வளையாபதி ... பட விமர்சனம் 6
ஏழை உழவன் ... பட விமர்சனம் 8
பராசக்தி ... பட விமர்சனம் 9
ஸி. வி. வி. பந்துலு —வாழ்க்கை வர்ணனை 13
ஸி. வி. வி. பந்துலு ஆர்ட் படம் 17
புஷ்பவல்லி ... ஆர்ட் படம் 18
நுனிப்புல் ... "வெட்டுக்கிளி" 19
காமினி கௌசல் ... பேட்டி 22
மனிதன் ... படக் காட்சிகள் 28
ஏலே, நாலே முக்காலணா! —என். சீதாராமன் 30
குண்டூசியைக் கேளுங்கள் பதில்கள் 32
சினிமா உலக சாலிவாகனன் —"குதூகலன்" 41
கலையும், கழகங்களும் —"புரட்சிப் பித்தன்" 47
பணம் ... படக் காட்சிகள் 48
பொதுஜனம் பேசுகிறார் ... 51
புஸ்தகப் பொழுது ... 57
அஞ்சலி தேவி ...மூவர்ணப் படம் 59
குமாரி துளசி ... ஆர்ட் படம் 60
அபர்ணாவின் அவதி —ஸி. ஆர். ராஜம்மா 61
இது செய்தி ... படச் செய்திகள் 68
பிரம்மலோகம் 71
நடனம் ஆடினார் ... "நந்தி" 76

வருஷ சந்தா:

இந்தியா, இலங்கை ... ... ரூ. 6
வெளி நாடுகள் ... ... ரூ. 9

தனிப் பிரதி:

இந்தியா 8 அணா, வெளிநாடு 12 அணா,
இலங்கை 50 சதம்.

குறிப்பு:—"குண்டூசி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகள், விகடத் துணுக்குகள் முதலியவைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. அவை நிஜ நபர் யாரையும் குறிப்பிடுபவை யல்ல.

ஏமாறுவது யார்? பராசக்தியா? பாமர ஜனங்களா?

குண்டூசி

ஆசிரியர்-பி.ஆர்.எஸ்.கோபால்

நிகரற்ற விநியோகமுள்ள மாத சினிமாப் பத்திரிகை

நவம்பர், 1952

பட்டை—6	ஊசி—2	பிரதி—62

தணிக்கை போர்டு தூங்குகிறதா?

நம் நாட்டில் படங்கள் எவ்வளவு அலங்கோலமாயிருக்கின்றனவோ அதைவிட அலங்கோலமாயிருக்கிறது படதணிக்கை முறை.

'நம் படங்கள் ஆபாஸம் மலிந்தவையாய் இருக்கின்றன' என்று கனம் மந்திரிகள் முதல் சாதாரண மக்கள் வரை அனைவரும் கதறுகிறார்கள். ஆனால், 'சென்னையில் சென்ற ஒரு வருஷத்தில் வெளியாகியுள்ள அத்தனை படங்களும் ஆபாசமற்றவை; ஒரே ஒரு படம் மட்டும்தான் இளம் வயதினர் பார்க்கத் தகாததாய் இருந்தது' என்று சென்னை தணிக்கை அதிகாரி அத்தாட்சி அளித்திருக்கிறார். தணிக்கை முறை என்ன யோக்கியதையில் நடக்கிறதென்பது இதிலிருந்து நன்கு தெரியவில்லையா!

படங்களில், ஆபாசம் அநுமதிக்கப்பட்டுவருவது ஒருபுறமிருக்கட்டும். ஜாதி, மத, சமூக துவேஷம், அரசாங்க நிந்தனை, தெய்வ நிந்தனை முதலியவை யெல்லாம் மறைமுகமாகவும், நேர்முகமாகவும் தமிழ்ப் படங்களில் அடிக்கடி புகுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் தணிக்கை போர்டாரின் கண்களுக்கு இவையெல்லாம் புலப்பட்டதேயில்லை. மக்கள் கூக்குரலிடுவதோ அவர்கள் காதுகளுக்கு எட்டவுமில்லை! 'ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனையும் கடிக்க' முற்பட்டதுபோல நம் படாதிபதிகளில் சிலர் மேற்சொன்ன துவேஷங்கள், அவதூறுகள், நிந்தனைகள் முதலியவற்றை வரவர அதிகமாகப் புகுத்திவருகின்றனர்.

உதாரணமாக, சமீபத்தில் வெளிவந்துள்ள "பராசக்தி" படத்தை எடுத்துக் கொள்ளுவோம். அதில் ஒரு கோவில் பூசாரி அம்பாள் தரிசனத்திற்கு வந்த ஒரு அம்மாளைக் கற்பழிக்க முயலுவதாகக் காட்டியிருப்பதோடு, கோவில்களின் புனிதத் தன்மையைப் பரிகசித்து நாஸ்திகப் பிரசாரமும் செய்யப்படுகிறது. இக்காட்சிகளைப் பார்க்கும் ஆஸ்திகர்கள் மனம் கொதிக்கிறார்கள். குன்றக்குடி ஆஸ்திகர்கள், அவ்வூர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிகபரமாசாரியார் சுவாமிகளின் தலைமையில் கூடி இப்படத்தைக் கண்டித்து, 'தடைசெய்ய வேண்டு'மென்று கேட்டிருப்பது ஆஸ்திக ஹிந்துக்கள் அத்தனை பேருடைய அபிப்பிராயத்தையும் ஒருங்கே பிரதிபலிப்பதாயிருக்கிறது.

ஹிந்து சமூகத்தினரையே இழிவு படுத்திக் காட்டும் இக் சாட்சிகள் (கதைக்கு அவசியமில்லாமல் இருப்பதால்) வேண்டுமென்றே புகுத்தப்பட்டிருப்பதாகத்தான் தோன்றுகிறது. எனவே இக்காட்சிகளை ஆஸ்திகர்களின் கிளர்ச்சி அதிகரிப்பதற்கு முன்பே நீக்கிவிடுவது கண்யமாயிருக்கும்.

இன்னும் இந்தப் படத்தில் நீதிமன்றமும் அவமதிக்கப் படுகிறது. ஆரம்பப் பாடசாலையில் உபாத்தியாயரை எதிர்த்துப் பேசும் அறிவிலிபோல், கதாநாயகன் சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் புறம்பான முறையில் நீதிமன்றத்தில் ஆவேசத்துடன் பிரசங்கம் செய்கிறான். தன் பசியைத் தீர்த்துக் கொள்ளுவதற்காக பைத்திய

மாக மாறி, தெருவில் நின்று வழிப்பறி செய்த தீரனல்லவா இவன்! சமூகத்தி லும் அரசாங்கத்திலும் உள்ள கோளாறு களை நீக்குவதற்கு இப்படத்தில் சில 'பைத்தியக்கார வழிகள்' காட்டப்படு கின்றன.

மொத்தத்தில் "பராசக்தி"யைப் பார்ப் பவர்களுக்கு, "இது நிஜமாகவே தணிக் கை போர்டாரால் அனுமதிக்கப்பட்ட படமா?", "ஒருவேளை இப் படம் காட் டப்பட்டபோது தணிக்கை அதிகாரிகள் தூங்கிவிட்டார்களோ?" என்றெல்லாம் கேட்கத் தோன்றுகிறது.

பணக் கொள்ளைக்காக சில படமுத லாளிகள் எதை வேண்டுமானாலும் படத் தில் காட்டத் துணிகிறார்கள் என்பது பிர சித்தமான விஷயம். இவர்களுக்கு உடந் தையாக இருப்பதற்கா தணிக்கை போர்டு ஏற்பட்டிருக்கிறது? இந்தியப் பிரஜை அத்தனை பேரையும் எழுத்தறி வுள்ளவர்களாகச் செய்வதை நம் இந்திய சர்க்கார் அப்புறம் கவனிக்கட்டும்; முத லில், படிப்பற்ற பாமர மக்கள் (ஏன், படித்தமக்கள் கூடத்தான்) இதுபோன்ற படங்களைப் பார்த்துவிட்டு, தங்கள் தேச பக்தியையும், கடவுள் பக்தியையும் இழ ந்து, மனங் குழம்பி, தவறான பாதையில் சென்று விடாமல் பாதுகாக்க வேண்டி யது மிக அவசரமான விஷயமாகும். இதற்கு முதல்படியாக, கடுமையான சட்டதிட்டங்களுடன் தணிக்கை முறை யை உடனே மாற்றியமைப்பார்களா!

"வளையாபதி" பெரும் காப்பியக் கொலை!

அள்ளித் தெளிக்கப்பட்ட அவசரக்கோலம்!

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான "வளையாபதி" ஒரு முற்றுப் பெறாத காவியமென்றே கருதப்பட்டு வருகிறது. அந்தக் கதைக்கு ஆதாரமாக ஒரு சில ஏட்டுச்சுவடிகளே உள்ளனவாம். அப் படி முற்றுப்பெறாத காவியம், "இது தானா பெருங்காப்பியம்?" என்று கை கொட்டி நகைக்கும் அளவில் இருக் கிறது "வளையாபதி" படக்கதை—இறுதி யில் கடவுளே பிரசன்னமாகி நல்லமுடிவு ஏற்படச் செய்கிறார் என்ற அசல் காவி யத்தின் முடிவை அலங்கோலப்படுத்தி யிருக்கிறார்கள். தெய்வத்தைப் புகுத்து வதில் இஷ்டமில்லாதவர்களாக இருந் தால் அதற்கு வேறு கதையைத் தேடி எடுத்திருக்கலாமே!

அந்தக் காலத்து ஆசிரியர்கள், ஏழை-பணக்காரன் என்பதற்காக தங்கள் மாணக்கர்களிடம் பாரபட்சம் காட் டியதாக எந்தக்காவியத்திலும் காணோம். வளையாபதி திரைக்கதையில்தான் காணப் படுகிறது. தவிர, சத்யவதி வேறு குலத் தவள் என்று சித்தரிக்கப்படுவதுகூட கலப்பு மணத்தை ஆதரிக்கவோ என்றே தோன்றுகிறது. இறுதியில் சிறுவர்கள் இருவர் சேர்ந்து பல வருஷங்களாக மற ந்துபோன உண்மையை துப்பறிந்து வெளிப்படுத்துவதாக கதையை அமைத் திருப்பதை நினைத்து நகைக்கத்தான் வேண்டும். இந்தக் காலத்தில்தான் ஒரு வன் இரு மனைவியை மணக்கக் கூடாது என்ற சட்டம் இருக்கிறது. அதற்காக இம்மாதிரி இக்கட்டான நிலையில் ஒருத் தியை 'க்ளோஸ்' பண்ண வேண்டியிருக் கிறது. ஆனால், வளையாபதி காலத்திலும் இந்த முறையைக் கையாண்டு முதல் மனைவி அந்தரி தற்கொலை செய்துகொள் ளும்படி செய்திருக்க வேண்டாம். மாடர்ன் தியேட்டர்ஸாரின் திரைக் கதை யைப் பார்க்கும்போது, "ஏன் இப்படிக் காப்பியத்தைச் சிதைத்திருக்கிறார்கள்" என்றே எண்ணத் தோன்றுகிறது.

வசனங்களை பாரதிதாஸன் எழுதியிருக் கிறார். கருத்து நிறைந்ததாக இருக்கிறது. ஊன்றிக் கவனிக்கும்போது ஓரளவு நாஸ் திகப் பிரசாரம் பொருந்தியதாகவும் காணப்படுகிறது. "பள்ளிக்கூடத்தை இடித்து பழனி ஆண்டவன் கோயில் கட்டி..." போன்ற சில வசனங்களைத் தவிர்த்திருக்கலாம். 'ஊக்கமது கை விடேல்' என்பதற்கு "ஊக்கத்தைக் கொடுக்கும் மதுவைக் கைவிடாதே" என்று விளக்கம் கூறுவதெல்லாம் அபத் தமான, கேவலமான ஹாஸ்யம். பாட்டு களின் சாஹித்யத்தைப் பற்றியோ, பாட்டுகளின் கவர்ச்சியைப் பற்றியோ விசேஷமாகக் குறிப்பிடும்படி இல்லை.

ஜனவரி "குண்டூசி"யில்

ஒரு பிரபல நாவலாசிரியையின்

தொடர் கதை

ஆரம்பமாகிறது.

மற்றும் நீங்கள் விரும்பக்கூடிய பல நூதனமான அம்சங்களுடன் "குண்டூசி" புது மணம் வீசும்

★

தவறாமல் பிரதிகள் கிடைப்பதற்கு உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள்.

வளையாபதியாக வரும் ஜி. முத்துக் கிருஷ்ணன் "கைதி"யில் தமக்குக் கிடைத்த நல்ல பெயரை இப் படத்தின் மூலம் இழந்து விட்டிருக்கிறார். அவரது தோற்றமோ, நடிப்போ, எதுவும் சுகப்படவில்லை. அவர் சமூகப் படங்களில் நடிப்பது தான் அவரது முன்னேற்றத்துக்கு உதவக்கூடும்.

புளிமூட்டை ராமசாமியின் பாத்திரம், நம்பிக்கைகள் மூடத்தனமானவை என்பதைப் பிரசாரம் செய்யும் நோக்கத்துடன் சிருஷ்டிக்கப்பட்டுள்ளது; அநாவசியமான ஒருபாகத்தில் தோன்றி அருவருப்பை சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்; அவ்வளவுதான். வில்லன்-காமெடியனாக வரும் ஏ. கருணாநிதியிடம் நடிப்புத் திறமை இருக்கிறது. ஆனால், அவர் நடிப்பு மிகையாக இருப்பதாலும், அவர் ஒரு குறிப்பிட்ட நடிகரைப் போல் கோணங்கிகள் செய்வதாலும் சோபிக்க வழியில்லாமல் இருக்கிறது.

சத்தியவதியாக நடிக்கும் தெலுங்கு ஜானகி, தமிழ்ப் படத்தில் நடிப்பது இதுவே முதல் தடவை. அவரது நடிப்பு சோக கட்டங்களில் நன்றாக இருக்கிறது. சிருங்கார கட்டங்களில் சிறப்பாகஇல்லை. முதல் மனைவி அந்தரியாக வரும் டி. ஏ. ஜயலக்ஷ்மி இப்படத்தில் ஏமாற்றமே அளித்திருக்கிறார். இப்படத்தில் இவரது நடிப்பைப் பார்க்கும்போது, 'புருவத்தை மேலே உயர்த்துவதுதான் நடிப்போ?' என்று கேட்கவேண்டியிருக்கிறது. மேக்கப் சரியாக இல்லாததினாலோ என்னவோ கண்கள் குழி விழுந்து சோகை பிடித்தவர்போல் காட்சி அளிக்கிறார். இந்தப் படத்தற்கு ஜீவநாடியாக இருப்பவர் அல்லி பாத்திரமாக வரும் டி. பி. முத்துலக்ஷ்மிதான். இந்தப் படத்தில் இவர்தான் கொஞ்சம் கலகலப்பை உண்டு பண்ணுகிறார். வெடுக் வெடுக்கெனப் பேசித் துடிப்புடன் நடிக்கிறார். தவிர இவரது நடிப்பு சில இடங்களில் மிகையாக இருக்கிறது. மிகச்சிறிய பாகங்களில் தோன்றும் எம். எஸ். எஸ். பாக்கியமும், எஸ். ஆர். லக்ஷ்மியும் குற்றமற்ற முறையில் நடித்துள்ளனர்.

படத்தின் டைரெக்டர்களில் ஒருவரான மஸ்தான் சிறந்த ஒளிப்பதிவாளராக இருந்தும், படத்தின் அந்த அம்சம் சிறப்பாக இல்லை. ஒலிப்பதிவு நன்றாயிருக்கிறது. டைரெக்ஷன் விஷயத்தில் மிகுந்த அக்கறை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. என்றாலும் ஆங்காங்கே குற்றங்கள் மலிந்துகிடக்கின்றன. குழந்தையில்லாது வளையாபதியின் மனம் தவிப்பதைக் காட்ட குலைதள்ளிய ஒரு வாழை மரத்தைக் காட்டியிருப்பது பொருந்தாது. அதற்கு பதில் ஒரு வாழை மரத்தையும் அதன் அடியிலுள்ள வாழைக்கன்று ஒன்றையும் காட்டியிருக்க வேண்டும். அது தான் 'வாழையடி வாழையென' ஒரு குழந்தை என்பதைக் குறிக்கும். அந்தரியிடம் குழந்தையைக் கொண்டுவந்து போடுவதுதான் கதையிலேயே ஒரு முக்கிய கட்டம். அது ஒரு கேலிக் கூத்தாக சித்தரிக்கப் பட்டிருக்கிறது. பதினைந்து வருஷங்களுக்குப் பிறகும் வளையாபதி, அந்தரி, சத்தியவதி எல்லோரும் ஒரே மாதிரியாகவே இருக்கிறார்கள்.

'அவசரக் கோலம் அள்ளித் தெளித்த மாதிரி' மிகவும் அவசரமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு சிதைந்த சிருஷ்டிதான் "வளையாபதி". ஆகவேதான் அது ஒரு மூன்றாம் தரப் படமாக அமைந்துவிட்டிருக்கிறது.

—"ஸ்ரீதாஸன்"

"ஏழை உழவன்" காலம் கடந்த படம்

அஞ்சலி பிரமாதமாக நடித்திருக்கிறார்

ஜமீன்தாரி முறை ஒழிந்துவிட்ட நமது மாகாணத்தில் "ஏழை உழவன்" போன்ற படத்திற்குத் தேவையேயில்லை. ஜமீன்களில் நடக்கும் கொடுமைகளையே முக்கியமாக விளக்குகிறது படக் கதை.

"உழுகிறவனுக்குத்தான் நிலம் சொந்தம்" என்ற கொள்கையைப் பிரசாரம் செய்வதே இப் படத்தின் நோக்கமாக இருக்கிறது.

கதையை சொந்தச் சரக்கு என்று கூற முடியாது..ஏற்கெனவே வெளிவந்துள்ள "தியாகி" படக் கதையைப் போலவே இருக்கிறது இப் படக் கதையும். தவிர இறுதியில் உழவர்கள் நடத்தும் போராட்டம் 'சாத்வீக முறையிலேயே வெற்றி பெருகிறது' என்பது படத்தில் விளக்கமாக இல்லாதது பெருங் குறை. பிரசாத் மீது, லைசென்ஸ் இல்லாமல் துப்பாக்கி வைத்திருந்ததாகக் குற்றம்சாட்டப்படும் பகுதி சரியானபடி விவரிக்கப் படவில்லை. சீதாவைக் கெடுக்க நினைக்கும் நாடக மானேஜர், பிரசாத் அங்கு வருவான் என்பதை எதிர்பார்த்து துப்பாக்கியை அவன் சுட் பையில் போட தயாராக வைத்துக் கொண்டிருந்தாரா? தவிர, நாடகக் கம்பெனி மானேஜரைக் கடைசியில் சிறைச் சாலையில் காட்டுகிறார்கள். எதற்காக அவர் சிறைப்பட்டார் என்பது கதையில் இல்லை.

பாட்டுகள் பல இருக்கின்றன. ஆயினும் ஒன்றிரண்டு தவிர மற்றவை சுகமில்லை. ஜமீன்தாரிணி ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரிமீது பாடுவதும், இறுதியில் பல தொழிலாளிகளையும் வேலையை நிறுத்தும்படி சீதா பாடுவது நன்ருக இருக்கின்றன

ஜமீன்தாரிணியாக கண்ணும்பா உணர்ச்சியுடன் நடித்திருக்கிறார். முன் பகுதிகளைவிட பின் பகுதியில்தான் அவரது நடிப்பு சோபிக்கிறது. எவ்வளவோ தமிழ்ப் படங்களில் நடித்த பிறகும்கூட அவரது தமிழ் உச்சரிப்புகள் சரியானபடி யில்லாதது பெரும் குறைதான். குடியானப் பெண் சீதாவாக அஞ்சலி மிக இயற்கையாக நடித்திருக்கிறார். உழவர்களுக்காக ஜமீன்தாரிணியிடம் வாதாடும் கட்டத்தில் தமது நடிப்பு மூலம் பிரமிக்க வைக்கிறார். ஜமீன் மானேஜரின் ஆசை நாயகியாக லக்ஷ்மிப் பிரபா நன்கு நடித்திருக்கிறார். ஆனல் அவர் நடனம் மட்டும் ஆடி யிருக்கவேண்டாம். மற்றொரு ஜமீன்தார் மகளாக வரும் குமாரி துளசியின் நடிப்பில் இன்னும் அபிவிருத்தி ஏற்பட வேண்டும்.

கதாநாயகன் பிரசாதாகத் தோன்றும் ஸ்ரீராமமூர்த்தி பட உலகுக்குப் புது முகம். இவரது நடிப்பும், பேச்சும் நன்ருகவே யிருக்கின்றன. ஜமீன்தாராக நடிக்கும் வி. வி. பந்துலு சிறப்பாகவே தம் பாகத்தை முடித்திருக்கிறார். மானேஜராக நடிக்கும் லிங்கமூர்த்தியும் தம் பாகத்தை உணர்ந்து நடித்திருக்கிறார்.

ரேலங்கி — முத்துலக்ஷ்மி ஜோடி ஹாஸ்ய பாகத்தைத் திறம்படச் செய்திருக்கிறார்கள். இருவரது நடிப்புமே கொஞ்சம் மிகையாகத்தான் இருக்கிறது. பேயாக வந்து பண்ணும் கலாட்டா சகிக்கவில்லை. ரேலங்கியின் தமிழ் உச்சரிப்புகள் ஒரு மாதிரியாக இருக்கின்றன. இவர்கள் தவிர நடு நடுவே வரும் சாயபு வேஷதாரி ஒரே கலகலப்பை உண்டு பண்ணுகிருர்.

'ஸம்யுக்தா' நடன நாடகம் ஒரு கேலிக் கூத்தாக இருக்கிறது. ராஜபுத்ர நாரிமணியான சம்யுக்தை சுயம்வர மண்டபத்தில் வந்து குறத்தி மாதிரிக் குதிக்க வைத்திருப்பது சரித்திரத்தையே அவமதிப்பதாக இருக்கிறது. "அகல்யா" நடன நாடகம் நன்ருக இருக்கிறது.

டைரெக்டர் நாகபூஷணம் சிரத்தையெடுத்துக் கொண்டு டைரெக்ட் செய்திருக்கிறார். முக்கியமாக,ஆரம்பத்தில்உழவர் உழைத்த பணத்தினுல்தான் ஜமீன்தார் உல்லாஸ வாழ்க்கை நடத்த முடிகிறது என்பதைவிளக்க, நெற்குவியலிலிருந்து பணக் குவியலைக் காட்டி, அதிலிருந்து ஜமீன்தார் பங்களாவைக் காட்டி யிருப்பதும், நகைகளை விற்றுப் பத்திரிகை நடத்தினர்கள் என்பதை உணர்த்த 'நகைகளிலிருந்து சட்டென்று 'ஏழை உழவன்' பத்திரிகை போஸ்டருக்குக் கொண்டு போயிருப்பதும் சிறப்பான அம்சங்கள். உழவுத் தொழில் சம்பந்தமாகக் காட்டப்படும் காட்சிகள் நன்ருகப் படம் பிடிக்கப்பட்டுள்ளன.

மொத்தத்தில், சிறந்த நடிப்புக்காகப் பார்க்க வேண்டிய பொழுது போக்குப் படம் "ஏழை உழவன்." —"ஸ்ரீ"

ஆஸ்திகர்கள் அவசியம் பார்க்கவேண்டிய படம்!

தெய்வ நிந்தனைத் திருப்பணி நிறைந்த "பராசக்தி"

ஒரு குறிப்பிட்ட கொள்கையைப் பிரசாரம் செய்ய விரும்பி செய்யப்படும் ஒரு காரியமானது, அதற்கு நேர்மாறான பலனை அளிக்குமானால், அந்த முயற்சியில் முனைந்தவர்களைக் குறித்து நாம்அனுதாபப்படத்தான் வேண்டும்! அப்படிப்பட்ட ஒரு முயற்சிதான் நானஷல் பிக்சர்ஸின் "பராசக்தி". ஆஸ்திகத்தை அழித்து, நாஸ்திகத்தை வளர்த்துவிட நினைத்து செய்யப்பட்ட முயற்சியான "பராசக்தி", நாஸ்திகம் நசித்.து, ஆஸ்திகம் பலப்படவேதான் வழி செய்திருக்கிறது. ஆகவேதான், 'ஆஸ்திகர்கள் அவசியம் பார்க்க வேண்டிய படம்' என்று குறிப்பிட்டேன்.

ஏதோ ஒரு பராசக்தி கோயில் பூசாரி, கோயிலின் உள்ளேயே ஒரு அபலையைக் கற்பழிக்க முயற்சிக்கிறான் என்று கதை ஒன்றைக் கையாண்டு, அதை மனதில் கொண்டு வசனங்களை எதுகை மோனை பிரஸங்களுடன் 'தீட்டி', கடவுளை மனம் கொண்ட மட்டும் தூஷணை செய்யப்படுகிறது இப்படத்தில். இதைப் பார்த்து, வெறுப்புற்று ஆஸ்திகர்கள் நாஸ்திகர்களாக மாறி விடுவார்கள் என்பது சம்பந்தப் பட்டவர்களின் எண்ணமாயிருக்கலாம். ஆனால், அது வீண் கனவாக முடிந்ததோடு மட்டுமின்றி ஆஸ்திகத்தை பலப்படுத்தி விட்டது. 'எத்தகைய பதிதனாயினும், இவ்வளவு அக்கிரமமான காரியத்தை தெய்வ சன்னிதியில் செய்யத் துணிவு கொள்ள மாட்டான்' என்பது அவர்களுக்குத் தெரியும். அது மட்டுமல்ல; "அடடா, நாம் இனி பிரதினமும் கோவிலுக்குப் போயாக வேண்டும். அப்படிப் போனால்தான் எங்காவது பதினாயிரம் இடத்தில் ஒரு இடத்திலாவது இப்படி நடப்பதா யிருந்தாலும் அதைத் தடுக்க முடியும்" என்ற எண்ணம் தான் நிலைத்து அவர்களது ஆஸ்திக மனப்பான்மை ஸ்திரப்படுகிறது. இந்த ஒரு "பராசக்தி"யில்லை; இதைவிட விஷமப் பிரசாரம் நிறைந்த படங்கள் அநேகம் வந்தாலும் நம் மக்களின் ஆஸ்திக மனத்தைக் கலைத்துவிட முடியாது!

'பராசக்தி வெறுங் கற்சிலை' என்று அழுத்தம் திருத்தமாக பிரசாரம் செய்கிறார் கதாசிரியர். ஆனால், படக் கதையிலேயே பல இடங்களில் பல்டி அடித்திருக்கிறார். பராசக்தியின் சன்னிதியிலே கல்யாணியைக் கற்பழிக்க முயன்றானே பூசாரி, அவனால் அது முடிந்ததா? பூசாரியின் தயவிலே ஜீவனம் நடத்தும் அவன் கையாள், சரியான தருணத்தில் தூக்கத்திலிருந்து எழுந்து, ஆலட்சிய மணியை அடிக்க—அதனால் பூசாரியின் காரியம் கைகூடாமல் போக-வழி செய்தது பராசக்தியின் அருள் தானே. அதுமட்டுமா? பூசாரி உடலெல்லாம் ரண காயம் ஏற்பட்டு ஊர் சிரிக்க, உயிர் தப்பினான். 'தெய்வம் நின்றுதான் கொல்லும்' என்பதற்கு இதைவிட வேறு சான்று வேண்டுமா? கல்யாணி ஆற்றுப் பாலத்திலிருந்து குழந்தையைக் கீழே வீசுகிறாள். அதே தினம், அதே நேரம் விமலா உல்லாஸப் படகில் வருகிறாள்; வீசி எறியப்பட்ட குழந்தை தவறாமல் அந்தப் படகில் வந்து விழுகிறது: அவ்வளவு உயரத்திலிருந்து விழுந்தும், ஒரு சிறு காயம் கூடப் படாமல் குழந்தை உயிர் பிழைக்கிறது.—இதெல்லாம் பராசக்தியின் அருளில்லாமல் சாதாரணமாய் முடியக்கூடிய காரியங்களா?

அருமைத் தங்கை கல்யாணி. அவள் கல்யாணத்திற்கு வரமுடியாத அருமை அண்ணன்மார் மூவர், சிங்கப்பூரில் தவிக்கின்றனர். ஒருவன் மட்டும் பணத்துடன் கிளம்புகிறான். அதற்குள் தங்கை கல்யாணி ஒரு குழந்தைக்குத் தாயாகி, அதே தினம் கணவன், தந்தை இருவரையும் இழந்து கதியற்றவளாகி இட்லி சுட்டு விற்றுப் பிழைக்கிறாள். பணத்துடன் வந்த அண்ணன் குணசேகரன், சென்னை நகர் அடைந்து, ஒரு விலைமகளால் ஏமாற்றப்பட்டு பணத்தைப் பறிகொடுக்கிறான். பிறகு, காரியப் பைத்தியமாக மாறி தங்கையைத் தேடிவந்து, தன்னை இன்னாரென்று காட்டிக்கொள்ளாமலே அவளுக்கு உதவி வருகிறான். காமுகன் ஒருவனது செயலினால் கல்யாணி அங்கு விட்டுக் கிளம்பி, ஒரு பிளாக்மார்க்கெட் பேர்வழியிடம் சிக்கித் தப்புகிறாள். இதற்கிடையில் சிங்கப்பூரிலிருந்து நடையிலேயே கிளம்பிய சந்திரசேகரன், ஞானசேகரன் ஆகிய மற்ற இரு சகோதரர்களும் வழியில் குண்டு

வீச்சு சமயம் பிரிந்து விடுகின்றனர். தமிழ்நாட்டை அடைந்த சந்திரசேகரன் நீதிபதியாகி விடுகிறான். ஞானசேகரன், முடவனாகி பிச்சைக்காரர்களை ஒன்று சேர்த்துக் கொண்டு புரட்சி பண்ண ஆரம்பிக்கிறான். பூசாரியினால் கற்பழிக்கப் படவிருந்த கல்யாணி தப்பி பசியால் துடித்த குழந்தையை ஆற்றில் வீசிவிட்டு தானும் தற்கொலை செய்து கொள்ள முயன்று கைதாக்கப்படுகிறாள். நீதிபதி சந்திரசேகரன் முன், அந்தக் குற்ற விசாரணை ஆரம்பமாகிறது. குற்றவாளி தன் தங்கை என அறிந்த நீதிபதி மூளைக் கலக்கம் அடைகிறார். தங்கையைத் தேடிவந்த குணசேகரன் பூசாரி செய்ய நினைத்த அட்டூழியத்தை அறிந்து அவனை வாள் கொண்டு தாக்கி கைதாகிறான். வழக்கு நடைபெறுகிறது. குழந்தை உயிர் தப்பிவிடவே கல்யாணிக்கு விடுதலை கிடைக்கிறது; பூசாரியைத் தன் தற்காப்புக்காகவே தாக்கியதாக குணசேகரனுக்கு மன்னிப்புக் கிடைக்கிறது. குடும்பம் ஒன்று சேர கதை சுபமாக முடிகிறது. இதுதான் படக் கதை. கதையில் ஒரு புதுமையுமில்லை. படக் கதைக்கும் பெயருக்கும் 'குலாம் காதருக்கும் கோகுலாஷ்டமிக்கும்' உள்ள சம்பந்தம்தான் இருக்கிறது. பராசக்தியின் மீது வசை புராணம் பாடப்படுகிறதே, அதற்காக இந்தப் பெயர் கொடுத்தார்களோ என்னவோ?

நாடகமாகப் பிரபலமானது இந்த "பராசக்தி". நாடகம் நடிக்கப்பட்ட போதே இந்த நாடகத்தைத் தடை செய்ய வேண்டுமென கிளர்ச்சிகள் நடந்தது உண்டு. நாடகக் கதையை திரைக்கு ஏற்றபடி, முக்கியமாக கடவுளையும் சர்க்காரையும் சமூகத்தையும் தாக்கு தாக்கென்று தாக்க இடம் வைத்து—மாற்றி அமைத்திருக்கிறார் மு. கருணாநிதி. தமது உத்வேகத்தில் அதற்காக வரம்பைக் கூட கடந்து கீழ்த்தரமான இளவுக்கு சென்றிருக்கிறார். பல நூறு ரூபாய் நோட்டுகளைப் பறிகொடுத்த—சூட்டும் கோட்டும் அணிந்த—படித்த நாகரிக வாலிபனுக்கு உடனே போலீஸில் புகார் செய்யத் தோன்றாதது ஆச்சரியமே. இதற்காக அந்தப் பாத்திரம் கதையின் பின் பகுதியில் கூறும் சமாதானம் சிரிக்கத்தான் செய்கிறது. இறுதியில், நீதிமன்றக் காட்சியில் கல்யாணிமீதும், குணசேகரன்மீதும் வழக்கு நடக்கும்போது, மைனர் வேணு, பிளாக்மார்க்கெட் நாராயண பிள்ளை, ஏமாற்றிப் பணம் பறித்த விலைமகள் இவர்களெல்லாம் அங்கு எப்படி, ஏன் வந்தார்கள் என்பதைப் படம் பார்ப்பவர்களின் கற்பனா சக்திக்கே விட்டிருக்கிறார்கள்!

மக்கள் பக்தியுடன் காவடி எடுத்துச் செல்லும் வழக்கத்தைக் கிண்டல் செய்யவே 'பாடைக் காவடி' எடுப்பதாக உள்ள கட்டம் புகுத்தப்பட்டிருக்கிறது. கதையின் தொடர்ச்சிக்கும் இதற்கும் சம்பந்தமே கிடையாது. இது விஷமத்தனமான—விஷமான அறிவிலிகளின் செயலாகும். இதைவிட மக்களின் மனதைப் புண்படுத்தும், கீழ்த்தரமான குரூரமான கற்பனை இருக்கவே முடியாது.

இப்படத்தின் வசூல் வெற்றிக்கு ஒரு காரணம் படத்தின் வசனங்கள். உணர்ச்சி ததும்பும் நடையிலே படத்தின் வசனங்களை எழுதியிருக்கிறார் மு. கருணாநிதி என்பது மறுக்க முடியாத உண்மை கடவுளை இழிவு படுத்தும் இடங்களிலும் சர்க்காரையும் சமூகத்தையும் விளாசும் கட்டங்களிலும் மட்டுமின்றி, படம் முழுவதிலுமே வசனங்கள் உள்ளத்தைத் தொடும் முறையில் இருக்கின்றன.

"இட்லி விற்றுப் பிழைப்பது தமிழ் நாட்டில் தாலி அறுத்தவர்களின் தாசில் உத்தியோகம்" என்கிறார் வசன கர்த்தா. அவருக்குப் பழக்கமான, அவருக்குத் தெரிந்த ஒரு சில விதவைகள்தான் உலகம் என்று நினைத்திருக்கும் அவரது குறுகிய நோக்கத்தையே இது காட்டுகிறது.

'பரஸ்திரீயை நாடிப் போவேன்' என்று ஒரு கணவன் சொல்லும்போது, 'நானும் வேறு புருஷனைத் தேடிக் கொண்டு போகிறேன்' என்று ஒரு ஸ்திரீ சொல்லுவது தமிழ் நாட்டுப் பெண்மணிகளையே அவமதிப்பதாகும் என்பதை தமது ஆவேசத்தில் வசன கர்த்தா மறந்து விட்டார் போலும்!

பைத்தியத்தின் வாயிலாக பஜனைகள்' வருண ஜபம், காவடி எடுத்தல் இவைகளைப்பற்றியெல்லாம் பிதற்ற வைத்திருக்கிறார். ஆம்; எல்லாம் ஒரே பிதற்றல்தான்.

அர்த்த மற்ற முறையிலே காந்திஜி செய்த காரியம் ஒன்றும் இழுக்கப்படுகிறது. 'பிள்ளைக் கறி சமைத்த சிறுத்தொண்டர், ஏழு குழந்தைகளைக் கிணற்றில் தள்ளிய நல்லதங்காள், இந்தக் கதைகளைத் தடை செய்யாத அரசாங்கம் குழந்தையைக் கொல்ல முயன்ற கல்

யாணியைக் குற்றம் கூறுவது தவறு என்று வசனகர்த்தா கூறுவது அர்த்த மற்ற வாதம். அக்கதைகள், நடந்த காலத்தையும் அப்பொழுதைய சூழ்நிலையையும் பற்றி நிதானமாக ஆழ்ந்து யோசித்தால் அவருக்கே அது தெரியவரும்.

புதிய முகம் கணேசனைத் திரையுலகில் அறிமுகப்படுத்தியதற்கு தமிழ்ப்பட ரஸிகர்களின் பாராட்டுதலுக்கு உரியவர்கள் நாஷனல் பிக்சர்ஸார். இப் படத்தில் நடிப்பில் முதல் ஸ்தானத்தை குணசேகரனாக வரும் கணேசனுக்குத்தான் அளிக்க வேண்டும். நல்லதொரு கதாபாத்திரத்தில் தோன்றி பிரமாதமாக நடித்து ரஸிகர்களின் ஏகோபித்த பாராட்டுதலைப் பெற்றுவிட்டார் அவர். காரியப் பைத்தியமாக மாறும் கட்டத்திலிருந்து இவரது நடிப்பில் காணப்படும் விறுவிறுப்பு படிப்படியாக முன்னேறி, படத்தின் இறுதிக் கட்டத்தில் உச்சநிலையை அடைகிறது. வசனங்களை அழுத்தம் திருத்தமாக உணர்ச்சியுடன் பேசுகிறார். இவரது எதிர்கால வெற்றிக்கு இப்படம் நல்ல சூசனையாகும். சிற்சில இடங்களில் மட்டும் நாடக மேடை வாசனை வீசுகிறது.

நீதிபதியாக வரும் ஸஹஸ்ரநாமத்திற்கு படத்தில் அதிக சந்தர்ப்பங்கள் இல்லையெனினும், உள்ளவரை வெகு நன்றாக நடித்துள்ளார். நீதிமன்றத்திலே, குற்றவாளி தன் தங்கை என அறிந்ததும் அவரது நடிப்புப் பிரமாதம். பிச்சைக்காரர்களை மகாநாடு கூட்ட அழைக்கும் சகோதரன் ஞானசேகரனாக வரும் எஸ். எஸ். ராஜேந்திரனது நடிப்பும் நன்றாகவே இருக்கிறது. தன் தங்கையைப் பற்றி அறிந்து துடிக்கும்போதும், இறுதியில் தன் குடும்பத்தினரைக் காணும் கட்டத்திலும் அவரது நடிப்பு மயிர்க்கூச்செறியச் செய்கிறது. நடிகர்களில் இம்மூவரைத் தவிர, மற்றவர்களுக்கு அதிகமாக வேலையில்லை. பிளாக் மார்க்கெட் நாராயண பிள்ளையாக வரும் வி. கே. ராமசாமி இப் படத்தில் தம் பெயரைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார். புஸ்தகங்களின் பெயரைக் கொண்டே இவர் கல்யாணியிடம் பேசுவதாக உள்ள இடம் தமாஷாக இருக்கிறது. ஆனால் அது உபயோகிக்கப்படும் கட்டம், புத்தக ஆசிரியர்களை இழிவு படுத்துவதாகவே படுகிறது.

நடிகைகளில் கல்யாணியாக வரும் ஸ்ரீரஞ்சனி நன்கு நடித்திருக்கிறார். கதாபாத்திரத்திற்கு ஏற்ற ஒரு நடிகையைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். தன் தமையன்மார் கல்யாணத்துக்கு வராமை குறித்து வருந்தும் போதும், நீதிமன்றக் காட்சியில் வாதாடும் கட்டத்திலும் இவரது நடிப்பு நன்கு சோபித்துள்ளது. விதவையாக சித்தரிக்கப்பட்டுள்ள இவர் பாடாமலிருந்திருந்தால் அந்தக்கதாபாத்திரத்தின்மீது மேலும் இரக்கம் ஏற்பட்டிருக்க இடமுண்டு. தவிர படத்தின் விறுவிறுப்பும் பாதிக்கப்பட்டிருக்காது. குணசேகரனைக் காதலிக்கும் விமலாவாக பண்டரி பாய் கச்சிதமாய் நடித்திருக்கிறார். குணசேகரனுடன் வாதாடும் கட்டங்களில் உணர்ச்சியுடன் பேசி, நடித்திருக்கிறார். மற்ற பெண் கதா பாத்திரங்

வீட்டிலேயே சினிமா

இந்த நூதன சினிமா புரொஜக்டர் (யந்திரம்) மூலம் ஆடும், பாடும், நடிகர், நடிகைகளைத் தியேட்டரில் காணுவது போல் காணுங்கள். இது இரும்பினால் ஆனது; டார்ச் அல்லது மின்சாரத்தினால் இயங்குவது. ஒரு ரோல் பிலிம் இனாம். விலை ரூ. 12-8-0. பிலிம் ரோல் கெஜம் ஒன்றுக்கு அணா 8. தபால் செலவு ரூ. 2-8-0 தனி.

கடிதங்களை ஆங்கிலத்தில் எழுதவும்.

AMERICAN TRADING Co., (G. M. 2)
JULLUNDUR CITY.

களுக்கு படத்தில் அதிகமாக வேலை இல்லை.

பாட்டுகள் அனைத்துமே கருத்து நிறைந்தவையா யிருக்கின்றன. முக்கியமாக "கா......கா......கா......", "தேசம் ஞானம்" ஆகிய இரு பாட்டுகளையும் குறிப்பிட வேண்டும். பாரதியாரின் "நெஞ்சு பொறுக்குதில்லையே" என்ற பாட்டையும் சரியான கட்டத்தில் பாட வைத்திருக்கிறார்கள். பாட்டுகள் யாவும் இனிமையாகப் பாடப்பட்டுள்ளன.

ஸ்டுடியோ சம்பந்தப்பட்ட வேலைகள் திருப்திகரமாக உள்ளன. ஒலி—ஒளிப்பதிவுகள் தரமா யிருக்கின்றன. முக்கியமாக ஒளிப்பதிவு பாராட்டப்பட வேண்டிய முறையில் இருக்கிறது. ஆடம்பரமான செட்டுகள் எதுவுமில்லை.

டைரெக்ஷனைக் குறித்து பிரமாதமாய்க் குறிப்பிட எதுவும் இல்லை. பல இடங்களில் நாடகம் போலவே நகருகிறது. நாடகங்களிலே, அடுத்து வரும் பெரிய காட்சி ஒன்றுக்கு முன், அது தயாராகும் வரை காலம் கடத்த, வேறு ஒரு காட்சி இருக்கும். அதுபோல படக் கதையின் காட்சிகள் அமைந்துள்ளன. விமலா தன் காதலன் குணசேகரனுடன் காதல் விளையாட்டில் ஈடுபட்டிருப்பதாகக் கனவு காண்கிறாள். கனவுக் காட்சியிலே "புதுப் பெண்ணின் மனதை" என்ற ஒரு பாட்டையும் பாடி விளையாடுகின்றனர். இதை விமலா மட்டுமே கனவு காண்கிறாள். ஆனால், படத்தின் இறுதியிலோ குணசேகரன் இதே பாட்டை முணு முணுத்துப் பாடுவதாகக் காட்டப்பட்டிருக்கிறது. இது எப்படி சாத்தியம்?

"பராசக்தி" ஒரு படமல்ல. பிரசங்க மேடை; அங்கே மதம் இழிவுபடுத்தப்படுகிறது; பிரார்த்தனைகள் கிண்டல் செய்யப்படுகின்றன; ஹிந்து மதக் கோட்பாடுகள் நையாண்டி செய்யப்படுகின்றன. படத்தைப் பார்த்துவிட்டு வெளியே வந்தால், ஒரு குறிப்பிட்ட கட்சியின் மகாநாட்டுக்குப் போய், அவர்களது தீப்பொறி பறக்கும் பேச்சுகளைக் கேட்டு விட்டு வந்த உணர்ச்சியே ஏற்படுகிறது. மொத்தத்தில், இப் படத்தை 'நஞ்சு கலந்த பால் அன்னம்' என்றுதான் நான் குறிப்பிட விரும்புகிறேன். நடிப்பு அம்சம் சிறந்து விளங்கும் படத்திலே, கட்சிப் பிரசார விஷ(ம)ம் புகுத்தப்பட்டிருக்கிறது.

"ஜாம்பவான்"

மனதிற்கு மகிழ்ச்சி அளிப்பது!

காரம், மணத்தில் நிகரற்றது!

எங்கும் கிடைக்கும்



ஸி.வி.வி. பந்துலு

வாழ்க்கை வர்ணனை

நேயர்களே நான் இப்பொழுது காசி க்ஷேத்திரத்திற்கு, காசு பணம் செலவில்லாமல் அழைத்துப் போகப் போகிறேன்; புண்ணியம் தேடிக் கொடுப்பதற்காக அல்ல; ஒரு ஆச்சரியகரமான சம்பவத்தை நேரில் காட்டுவதற்காக.

சர்யங்கால நேரம். கதிரவன் தன் கடைசிப் பொற்கிரணங்களை கங்காதேவி மீது வீசிக் கொண்டிருக்கிறான். சிவந்த மேனியும், குடுமித் தலையும், அழகிய தோற்றமும் உடைய, சுமார் பதினேழு வயதான ஒரு வாலிபன், தன் கருமமே

ஊேயே! அவன் மந்தி ரத்தில் கட்டுப்பட் டிருக்கிருனு,என்ன!

பௌர்ணமிச் சந்திரன் பால்போலக் காய்கிறது. அங்குமிங்கும் சில குடிசைகள் காணப்படுகின்றன. அதோ, சில வங்காளி பிராம



..ந்த குமார்

கல்யாண பண்ணிப்ப

கண்ணுகை, தனது சந்தியா வந்தனங்களை முடித்துக் கொண்டு கரையேறுகிருன்.

அதோ, யாரோ ஒரு வங்காளி அவனை அணுகுகிருனே! வாலிபனின் பக்திசிரத்தையை அந்த வங்காளி புகழ்ந்து பேசுகிருன். வாலிபனுக்குப் பரம சந்தோஷம். அவன் நெற்றியில் வங்காளி விபூதியை இடுகிருன். என்ன ஆச்சரியம்! வாலிபன் ஸ்மரணை இழந்துவிட்டதாகத் தோன்றுகிறதே! அவனை அந்த வங்காளி வண்டியிலேற்றி எங்கோ கொண்டு போகிருனே!

ஊர்வசியின் காதல்

இப்பொழுது வாலிபன் இருப்பது பிரயாகை. அவனுக்கு பிரக்ஞையும் வந்துவிட்டது. அவனை வேறு ஒருவனிடம் ஒப்படைத்துவிட்டு வங்காளி விரைந்து செல்கிருன். இந்தப் புதிய ஆள் வாலிபனை ஒரு டோங்காவில் காட்டு மார்க்கமாக எங்கோ ஏழெட்டு மைல் அழைத்துப் போகிருன். பிறகு கால் நடையாகவும் அழைத்துச் செல்கிருனே! இரவு மணி பன்னிரண்டாகிவிட்டது! வாலிபன் ஒரு வார்த்தைகூடப் பேசவில்

உஷா கல்யாணம்



நவ ஜீவனம்

ணர்கள் இவர்களை வரவேற்கிறார்கள். வாலிபனுக்கு ஸ்நானத்தை முடித்து, ஒரு சிவப்பு வஸ்திரத்தை அணியச் செய்கிறார்கள், நெற்றியில் விபூதியும் குங்குமமும் இட்டுக்கொள்ளுகிறான் வாலிபன். இதெல்லாம் எதற்கான ஆயத்தம் !

அதோ, ஒரு பள்ளத்தாக்கு ; படிகள் கூடத் தென்படுகின்றன. இரண்டு வங்காளிகள் அந்த வாலிபனைப் படிகள் வழியாய் அழைத்து செல்லுகின்றனர். அதோ அது காளிகோவில் போலல்லவோ இருக்கிறது. ஆம் ; இவர்களும் அதன் வாயிலை அடைந்துவிட்டனர். வங்காளிகள் வாலிபனை கோவில் பூசாரியிடம் ஒப்படைத்து விட்டுப் போகின்றனர். எல்லாம் ஒரே மர்மம் ! பயங்கரம் ! இனி என்ன நடக்கப் போகிறதோ !

இப்பொழுது வாலீபன் காளிகா தேவியின் முன் (கழுத்தில் பூமாலையுடன்) நிற்கிறான். பூசாரி அவன்மீது ஜலத்தைத் தெளித்து அம்மனை வலம் வந்து நமஸ்கரிக்கச் சொல்கிறான். வாலிபனோ மறு பேச்சின்றி, மெய் மறந்த நிலையில் ஸ்லோகங்களை சொல்மாரியாய் பொழிகிறான்.



மேடையில்

ஐயய்யோ! இவன் யார்? எங்கிருந்து வந்தான்! கையில் வாளுடன் வாலிபனருகில் நிற்கிருனே ஒரு முரடன்! அப்படியானுல் வாலிபன் நரபலியாகப் போகிருனு! வாலிபனும் அந்த முரடனைக் கவனித்துவிட்டான்! பூசாரியோ, அந்த வாள்காரனிடம், ''உம், சீக்கிரம் ஆகட்டும்'' என்று உத்தர விடுகிருன்! வாலிபனே ''ஓ வென்று அலறுகிருன்! பாவம், பயத்தால் அவன் மூர்ச்சையாகி விட்டானே!

என்ன ஆச்சரியம்! கோவிலிலிருந்த வாலிபன் இந்தக் காட்டு ரஸ்தாவுக்கு எப்படி, யாரால் கொண்டு வரப்பட்டான்! பொழுது விடிந்த பின்னும் வாலிபன் ஏன் எழுந்திருக்கவில்லை? அடாடா, அவனது கைகால்களெல்லாம் கட்டப்பட்டிருக்கின்றனவா! அட, பாவமே! நல்ல வேளை! ரஸ்தா வழியாக இருவர் வருகிருர்கள்; வாலிபனின் கட்டுகளை அவிழ்த்து வீடுகிருர்கள். வாலிபன தன் வேஷ்டி நுனியில் ஏதோ முடிந்திருப்பதை அவிழ்க்கிருன்! 1912ம் வருஷத்திய புதிய ஐந்து ரூபாய் நாணயங்கள்! அவற்றை அவன் முடிந்து வைக்கவில்லை! பின் யார்தான் முடிந்துவைத்தது. எல்லாம் ஒரே மாய ஜாலமாகவல்லவா இருக்கிறது!

அதோ, வாலிபன் சென்னைக்குப் புறப்படுகிருன். அவனுடனேயே

மாணிக்க வாசகர்

நீங்களும் சென்னைக்குத் திரும்பி வந்துவிடுங்கள்.

மேலே நீங்கள் கண்ட சம்பவம் உங்களுக்கு மிக ஆச்சரியத்தை விளைவிக்கவில்லை போலிருக்கிறதே! இல்லை, ''இதை விட ஆச்சரியமான பல மாயா ஜாலங்

[தொடர்ச்சி 73-ம் பக்கத்தில்]

ஸி. வி. வி. பந்துலு

புஷ்பவல்லி

நுனிப்புல்

வெட்டுக்கிளி

நக்ஷத்திரங்கள் சிலரின் மரியாதைக் குறைவான நடத்தையைப்பற்றிக் குறிப்பிட்டு சில ஊசிகளுக்கு முன்பு எழுதியிருந்தேன். அதில், சமீபத்தில் ஒரு பிரபல பாடக நக்ஷத்திரம் மரியாதைக் குறைவாக நடந்துகொண்ட கீழ்த்தரமான சம்பவத்தைப்பற்றிக் குறிப்பிட மறந்துபோய் விட்டேன். இந்தப் பாடக நக்ஷத்திரம் நடித்து, கடைசியாக வெளிவந்த படம் ஒன்றைப்பற்றி, ''குண்டூசி''யில் விமர்சனம் வெளிவந்திருந்தது. விமர்சன கர்த்தா ''ஜாம்பவான்'' அதைக் 'கேட்க வேண்டிய படம்' என்று எழுதியிருந்தார். அந்த விமர்சனத்தில், 'நக்ஷத்திரத்தின் தோற்றத்தில் முன்னவ்வளவு கவர்ச்சி இல்லை' என்று உண்மையை ஒளிக்காது குறிப்பிட்டிருந்தார். ''ஜாம்பவானி''ன் வெறுப்பு விருப்பற்ற அந்த விமர்சனத்தைப் பாராட்டி பல நேயர்கள் எழுதியிருந்தது, அவர்கள் அனைவரது அபிப்பிராயமும் அதுவேதான் என்பதை நன்கு வெளிப்படுத்திற்று. அந்த விமர்சனத்தைப் படித்துவிட்டு, அந்த நக்ஷத்திரம் ரொம்ப ரொம்பக் குதியாகக் குதித்தாராம். ''விட்டேனு பார்; துலைத்து விடுகிறேன்'' என்று துள்ளிக் குதித்துக் கறுவினுராம். மேலும், மரியாதைக் குறைவான பாஷையிலெல்லாம் பேசினுராம். ஆனுல், அவர் அப்படிப் பேசின பொழுது தமது 'நிதானத்தில்' இல்லை என்பதை அறியும்போது, நாம் அதை அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. தன் நிதானமிழந்தவன் எதையும் பேசுவது சகஜம்தானே! அதற்கு மதிப்புக் கொடுத்து பொருட்படுத்த முடியுமா? 'இங்கிதம் தெரியாத கட்டுப்பட்டி' என்றுதான் அவரைப்பற்றி நான் முடிவு கட்டி அனுதாபப்படுகிறேன்.

• • •

இதே படத்தைப்பற்றி, பம்பாயிலிருந்து வெளிவரும் பிரபல ஆங்கில சினிமாப் பத்திரிகை ஒன்றிலும் விமர்சனம் வெளிவந்திருந்தது. அதில் இந்த நக்ஷத்திரத்தின் தோற்றத்தைப்பற்றி எந்த முறையில் குறிப்பிடப்பட்டிருந்தது தெரியுமா? ''தங்கசாலைத் தெரு டாபர் மாதிரிக் காட்சியளிக்கிறுர்'', ''அந்தக் காலத்து சீமாட்டியின் 'கோச்' வண்டி ஓட்டும் காசாரிபோல் இருக்கிறுர்''—இப்படியெல்லாம் விமர்சனத்தில் குறிப்பிட்டிருந்தார். இந்த மாதிரியெல்லாம் விமர்சனம்

மதருஸ் ஆர்ட் புரடக்ஷன்ஸ் தயாரித்து வரும் ''ரோஹிணி'' தமிழ்ப் படத்தில் மாதுரி தேவி கதாநாயகியாக நடிக்கிறுர்.

எழுதுவதை நான் ஆதரிப்பதாகவோ பாராட்டுவதாகவோ நினைத்துவிட வேண்டாம்; 'அது முறையில்லை, மட்ட ரகம்' என்றுதான் கருதுகிறேன். ஆனால், அவரிடம் காணப்பட்ட குறைகளை மிகவும் நாசுக்காகவே நாம் குறிப்பிட்டிருந்ததற்குப் பொங்கிவிழுந்த அந்தப் பாடக நக்ஷத்திரம், பம்பாய் ஆசிரியரை என்ன செய்தார் என்று கேட்கிறேன்?

• • •

"குண்டூசி" பத்திரிகை எவ்வளவோ தடவைகளில் இந்த நக்ஷத்திரத்தின் பெருந்தன்மையையும், அவரிடமுள்ள உயரிய அம்சங்களையும் பாராட்டி எழுதியிருக்கிறது. இந்த நடிகரே சுயநிலையில் இருக்கும்போது "குண்டூசி"யின் முந்திய இதழ்களைப் புரட்டிப் பார்த்தால், அந்த உண்மையை உணர்வார். அப்படியிருக்கும் போது அவரிடமுள்ள குறைகளை எடுத்துக் கூற மட்டும் "குண்டூசி" பத்திரிகைக்கு உரிமையில்லையா என்று கேட்கிறேன்? 'அணைக்கும் கைக்கு அடிக்கும் உரிமையும் உண்டு' என்பது ஏனோ இவரைப் போன்ற வேறு பலருக்கும் புத்தியில் எட்டுவதில்லை!

• • •

"இன்றைக்கு என்ன பூ விற்கலாம்" என்று யோசிக்கிறாரோ? பிரசாத் டைரெக்ஷனில் தயாராகும் "பூங்கோதை" தமிழ்ப் படத்தில் அஞ்சலி தேவி.

இவரைப்போல் வேறு சில நக்ஷத்திரங்களுக்கும்கூட "குண்டூசி" பத்திரிகை மீது கோபந்தான். அவர்கள், எப்பொழுதுமே தங்களைப் பற்றி "குண்டூசி"யில் உயர்வான அபிப்பிராயமே வெளிவந்து கொண்டிருக்க வேண்டுமென விரும்புகின்றனர். அது நடக்கக் கூடாத விஷயம். 'உள்ளது உள்ளபடி' எழுதத்தான் "குண்டூசி" பத்திரிகைக்குத் தெரியும். எமது பத்திரிகையின் நோக்கம் அதுதான். பிறர் மனம் நோகுமே என்பதற்காக மட்டத்தை "ஆஹா...ஓஹோ..." என்று உயரத் தூக்கி வைத்துவிடும் வித்தை அதற்குத் தெரியாது. ஒரு நக்ஷத்திரத்தின் நடிப்போ, பாட்டோ, தோற்றமோ நன்றாக இல்லையென்றால் அதைத் துணிச்சலாக எழுதத்தான் செய்யும். இந்த அம்சங்கள் சிறப்பாக இருக்கும்போது யாரைக் கேட்டு பாராட்டி எழுதுகிறோம்? இதை சம்பந்தப்பட்டவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். 'உள்ளது உள்ளபடி' எழுதுவதனால் குறிப்பிட்ட அந்த ஒரு நக்ஷத்திரத்தின் வெறுப்புக்கு மட்டுமே ஆளாக வேண்டி வரும். அப்படியில்லாமல், மனச்சாட்சியை மூட்டை கட்டி வைத்துவிட்டு, சரக்கில்லாத நக்ஷத்திரத்தை இந்திரன்–சந்திரன் என்றெல்லாம் வர்ணித்துவிட்டால் ஆயிரக் கணக்

கான ரஸிகர்களின் வெறுப்பை அல்லவா வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டிவரும்! இந்த இரண்டில் எது மேல்?

• • •

ஒரு விஷயம் சொல்லி விடுகிறேன். அது அவர்கள் மனதில் பட்டால் நல்லது; பதியாவிட்டால் அது அவர்களுடைய துரதிருஷ்டம். பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சினாலும் அஞ்சலாம். ஆனால், "குண்டூசி"யோ, "ஜாம்பவானே", "வெட்டுக்கிளி"யோ இந்த உருட்டல் மிரட்டல்களுக்காக பயந்து தங்கள் கொள்கையை மாற்றிக்கொள்ளப் போவதில்லை. அப்படி பயப்படுகிறவரா யிருந்தால், "குண்டூசி" எப்பொழுதோ உள்ளது உள்ளபடி எழுதுவதை நிறுத்திக் கொண்டிருக்க வேண்டும். குத்துண்ட பிறகுதான் அவரது பேனா இன்னும் கூர்மையாகி யிருக்கிறது. பத்திரிகை உலகில் பிரவேசித்து முதன் முதலில் பேனாவைக் கையில் எடுத்துக் கொள்ளும் போது, 'விருப்பு வெறுப்புகளில்லாது, உண்மையையே எழுதுவது என்ற எங்கள் தீர்மானமான அபிப்பிராயத்தை எந்தக் காரணம் கொண்டும் மாற்றிக் கொள்வதில்லை' என்று பிரதிக்ஞையும் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும் சொல்லி வைக்கிறேன்.

• • •

கடைசியாக ஒரே ஒரு விஷயத்தையும் கூறிவிட்டு முடித்து விடுகிறேன். மரியாதை படித்துக் கொள்ள வேண்டியவர்களின் எண்ணிக்கை, வேறு எந்தத் தொழிலையும்விட சினிமாத் தொழிலில் தான் அதிகமாக உள்ளது. ஆகவே, சினிமா உலகில் 'மரியாதை வாரம்' கொண்டாடுவதில் பயனில்லை! அது போதவே போதாது. குறைந்தது "மரியாதை மாத"மாவது கொண்டாட வேண்டும். முடியுமானால் 'மரியாதை வருஷம்' கொண்டாடினால்கூட நல்லதுதான். ஆனால், ஒரு விஷயம். 'மரியாதை வாரமோ', 'மரியாதை மாதமோ'—ஏன், 'மரியாதை மாமாங்கமோ'—கொண்டாடி விட்டால் மட்டும் போதுமா? கொண்டாடுவதனால் வந்துவிடுகிற பழக்கம் இல்லை அது. அதனால் மரியாதைப் பழக்கம் வந்துவிடுமா?

மரியாதை தெரியாத நக்ஷத்திரங்களே! உங்களுக்குத்தான் சொல்லுகிறேன். 'மரியாதைப் பள்ளிக்கூடம் எங்கே?' என்று தேடிக்கொண்டு போக வேண்டாம். அது பலன் அளிக்காது. மரியாதை என்பதைத் தெரிந்துகொள்ள பள்ளிக்கூடமோ, வாரம் கொண்டாடுவதோ தேவையில்லை. அது தானாகவே அமையவேண்டியது. பிறவியிலேயே இந்த குணம் அமைந்துவிடுகிறது வெகு சிலருக்கு; சூழ்நிலையினாலும் பழக்கத்தினாலும் படித்துக் கொள்கிறார்கள் பலர். இந்த இரு வழிகளிலும் மரியாதையைப் பழகிக்கொள்ளாதவர்கள் ரொம்ப பேர். அவர்களுக்கு அக் குணம் வரவே வராது. ஆகவே, அவர்களிடமிருந்து மற்றவர்கள் விலகிக்கொள்வதே நல்ல மரியாதை!



உமா-ஓம் கூட்டுத் தயாரிப்பான "பணக்காரி"யில் டி. ஆர். ராஜகுமாரிக்கு சுடப் பழக்கித் தருகிறார் எம். ஜி. ராமச்சந்திரன்.



காற்றினிலே நக்ஷத்திரப் பேட்டி

காமினி கௌசல்

''ஹிந்தி தெரிந்த இடங்களிலெல்லாம் நன்கு தெரிந்த பிரபல நக்ஷத்திரமான காமினி கௌசலை, இன்று உங்களுக்கு அறிமுகப் படுத்துகிறேன். தனிப்பட்ட சிறந்த திறமைகள் பெற்ற நடிகை அவர். அவரது கபடமற்ற பார்வை, இனிய குரல், எளிய தன்மை இவை அனைத்தும் அவரது கலைப் பணிக்குத் துணை புரிகின்றன. நல்ல அழகுடன்கூட, ஒரு சிறந்த நடிகைக் குரிய பல அம்சங்களும் கடவுளருளால் அவரிடம் பொருந்தியிருக்கின்றன, ''ஷாஹீத்'' படத்திற்கே உயிரளித்தது அவரது பாத்திரம்தான். அதேபோல, அவர் நடித்த பல படங்களிலும் நாம் அவரது நடிப்பைக் கண்டு வியந்திருக்கிறோம்.

சிறந்த நடிகையாக இருப்பதுடன், அவர் பதிப்பிரேமை மிகுந்த மனைவியாகவும் இருக்கிறார். அவர் கலையை விரும்பும் அளவுக்கு குடும்ப வாழ்க்கையையும் விரும்புகிறார். அவரும் அவரது கணவரும் இன்பமயமான குடும்ப வாழ்க்கை நடத்துகின்றனர். உங்கள் மனம் எனக்குத் தெரிகிறது. அவர் யார்–அவருக்கு எந்த ஊர்–பட உலகுக்கு அவர் எப்படி வந்தார்–எந்தெந்தப் படங்களில் நடித்திருக்கிறார்–அவரது பொழுது போக்கு என்ன—அவரது விருப்பு வெறுப்புகளென்ன ?— இப்படிப் பல கேள்விகளைக் கேட்க நீங்கள் துடிக்கிறீர்கள். இதோ அவரே பதல் சொல்லப் போகிறார்''— இப்படிக் கூறிவிட்டு பேட்டியாளர் பால்ராஜ் தமது பேட்டியை ஆரம்பித்தார்.

பால் :—காமினிஜி ! உங்கள் நேரத்தை நான் அதிகம் வீணாக்கமாட்டேன் ; ஒரு சில கேள்விகள் மட்டுமே கேட்க விரும்புகிறேன். கேட்கட்டுமா ?

காமினி:—உண்மையில், ரஸிகர்களுடன் உறவாட, இப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். கேட்கவேண்டியதை தாராளமாய் கேளுங்கள்.

பால் :—உங்கள் முதல் படம் எது ?

காமினி :—எனது முதல் படம் எனது சகோதரர் தயாரித்த "தி ட்ராஜடி" என்பது. அதில் என் சகோதரர்கள், சகோதரிகள் ஆக அனைவரும் நடித்திருக்கிறோம்.

பால் :—அந்தப் படம், உங்கள் சகோதரரால் உங்கள் வீட்டிலேயே தயாரிக்கப் பட்டதோ ?

காமினி :—ஆம் ; அப்பொழுது எனக்கு வயது ஆறு. அது எங்கள் ஆசையைப் பூர்த்தி செய்துகொள்ளத் தயாரிக்கப் பட்ட படம் !

பால் :—அப்படித்தான் இருக்குமென நினைத்தேன். ஏனெனில், நீங்கள் நடித்த அப்படிப்பட்ட படம் ஒன்றும் வெளிவரவில்லையே ! உங்களுக்கு படவுலகிலே புகுந்துவிட வேண்டுமென்ற எண்ணம் ஆறுவது வயதிலேயே ஏற்பட்டுவிட்டது என்பதையே அது குறிக்கிறது.

காமினி :—அப்படிச் சொல்ல முடியாது. நான் குழந்தையாயிருந்தபோது நான் வயதடைந்ததும் படத்தில் நடிக்கக்கூடுமென யாருமே நினைக்கவில்லை. எனக்கே அது எப்படி நடந்தது என்பது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

பால் :—அது எப்படி நடந்தது ?

காமினி :—குழந்தைப் பிராயத்திலேயே எனக்கு நடிப்பதில் மிகவும் பிரியம். மேடைகளிலும், ரேடியோ நாடகங்களிலும் நடித்துப் புகழ் பெற்றிருந்தேன். ஸ்ரீ. சேடன் ஆனந்த் என்பவர்—'' நீசநகர்'' என்ற தமது படத்தைத் தயாரிப்பதில் முனைந்திருந்தவர்—அது சம்பந்த

காமினி கௌசல்

மாக லாகூர் வந்திருந்தார். அந்தப் படத்தில் என்னை நடிக்க அனுப்பும்படி கேட்டார். அந்த சமயம்தான் என் மூத்த சகோதரி ஒரு கார் விபத்தில் இறந்து போய், அவளுடைய குழந்தைகள் என்னிடம் வளர்ந்து வந்தன. நான் நடிப்பதற்கு பம்பாய் போனால், தாயற்ற குழந்தைகள் தகப்பனிடமே பம்பாயில் வளர சௌகரியம் இருக்கும் என்ற அபிப்பிராயத்தால் என் பெற்றோர்கள் சம்மதித்தனர். நான் நடித்த முதல் படம் "நீச நகர்" தான். இது இந்தியாவில் வெற்றி பெறவில்லை. எனினும், வெளிநாடுகளில் வெகுவாகப் பாராட்டப்பட்டது.

பால் :—நீங்கள் நடித்துள்ள படங்களில் எந்தப் படத்தில் உங்கள் நடிப்பை நீங்கள் அதிகமாய் விரும்புகிறீர்கள்?

காமினி :—பல இந்தியப் படங்களில் நடிகைகள் தங்கள் திறமையை வெளிப்படுத்தத் தக்க கதாபாத்திரத்தைப் பெறுவதில்லை. அப்படிக் கிடைத்த சந்தர்ப்பங்களில் "ஷா ஹீத்" "அர்ஸூ" ஆகிய இரு படங்களும் என்வரை எனக்குத் திருப்தியாகவே இருந்தது.

பால் :—எந்த மாதிரி கதாபாத்திரமாக நடிக்க உங்களுக்கு விருப்பம்?

காமினி :—ரஸிகர்கள், நான் சோக பாத்திரமாக நன்றாக நடிப்பேன் என்று நினைக்கிறார்கள். ஆனால் எனக்கு இன்பியல் கதைகளில் நடிப்பதே ஆனந்தமாக இருக்கிறது. எனது புதுப் படமான "ஜங்கரி"ல் எனக்குப் பிடித்தமான கதாபாத்திரம் கிடைத்திருக்கிறது. நானும் அதில் மிகவும் ரஸித்து நடித்து வருகிறேன்.

பால் :—நீங்கள் சொந்தமாகப் படம் தயாரித்து விட்டீர்கள். எப்பொழுது டைரெக்டராகப் போகிறீர்கள்?

காமினி :—நடிப்பதற்கு ஓரளவு திறமையிருந்தால் போதும். ஆனால் டைரெக்டராவதற்குக் கடும் உழைப்பு, திறமை, உயர்ந்த லட்சியம் இவைகள் அத்தியாவசியம். இதுநாள் வரை எனக்கு நடிக்கவே சரியாக இருந்தது. இப்பொழுது டைரெக்ஷன் மீது எனக்கு நாட்டம் சென்றிருக்கிறது. கூடிய சீக்கிரத்திலே நான் ஒரு டைரெக்டர் ஆவேன்.

பால் :—நீங்கள் ஆங்கிலப் படங்கள் பார்ப்பது உண்டா? உங்கள் அபிமான நக்ஷத்திரங்கள் யார்?

காமினி :—நான் அடிக்கடி ஆங்கிலப் படங்களைப் பார்க்கிறேன். முக்கியமாக இன்கிரிட் பெர்க்மென், சார்லஸ் போயர், ஜேம்ஸ் ஸ்டுவர்ட் இவர்களது நடிப்பு எனக்கு ரொம்பவும் பிடிக்கும்.

பால் :—உங்களுக்குத்தான் ஓயாது ஒழியாது வேலை இருக்கிறதே. நீங்கள் அத்துடன் உங்கள் குழந்தைகளை எப்படி கவனித்துக் கொள்கிறீர்கள்?

காமினி :—நான் சோம்பேறித் தனமாகப் பொழுதை வீணாக்குவதில்லை. நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் நான் வீட்டில்தான் இருப்பேன். தினசரி காலையிலும், மாலையிலும் நான் என் குழந்தைகளுடன் தான் இருப்பேன். என் குழந்தை ராகுவிடம் எனக்கு அன்பு அதிகம். நான் மணிக்கணக்காக அவனுடன் என் பொழு

தெலுங்கு, தமிழ் ஆகிய இரு பாஷைகளில் தயாராகி வரும் ஏவி. எம். மின் ''செல்லப்பிள்ளை'' படத்தில் பண்டரிபாய் கையில் குடத்தை வைத்துக்கொண்டு கண் பார்வையை எங்கோ செலுத்துகிறாள்.

தைக் கழிப்பேன். அவன் பொம்மைகளுடன் விளையாடுவதைப் பார்க்கும் சமயமெல்லாம் எனக்கு என் குழந்தைப் பருவ நினைவுகள் வரும்.

பால் :—உங்கள் குழந்தைப் பருவம் கூட மகிழ்ச்சிகரமான தாகவும், ருசிகரமானதாகவும் இருந்திருக்கும். அதைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்.

காமினி :—எனது பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளும் தங்களது உறவினர்களின் குழந்தைகளும் நன்றாகப் படிக்க வேண்டுமென்ற அபிப்பிராயம் உள்ளவர்கள். நாங்கள் சகோதர சகோதரிகள் ஐவரும், வேறு எங்கள் வயதுள்ள சில குழந்தைகளும் ஒன்றாக வளர்க்கப்பட்டோம். பாட்டு வாத்தியாரும், நடன ஆசிரியரும் தினமும் வருவார். பையன்களுக்கு, போட்டோகிராபி, தச்சு வேலை இப்படிப்பட்ட வேலைகளுக்கான சாதனங்களும், எங்களுக்காக சமையல் பண்ண பொம்மைப் பாத்திரங்கள், தையல் இயந்திரம் முதலியனவும் இருந்தன. எனக்கு பூனை, கிளி இவைகளை வளர்ப்பதில் பிரியம் அதிகம். நான், பூனைகள், நாய்கள், அணில்கள், கிளிகள், மைனக்கள், இப்படிப் பலவற்றை வளர்த்து என் வீட்டையே ஒரு மிருக, பக்ஷி காட்சிசாலை மாதிரி வைத்திருந்தேன். எனது குழந்தைப் பருவ ஆனந்த நாட்கள் என் உள்ளத்தே பசுமையாக யிருக்கின்றன.

பால் :—இந்தியாவில், நீங்கள் எந்தப் பகுதியைச் சேர்ந்தவர் ?

காமினி :—நான் பஞ்சாபைச் சேர்ந்தவள். எனது தந்தை, ஷிவ்ராம் காஷ்யப் சர்க்கார் கல்லூரியில் பாட்டனி பகுதி பேராசிரியராக இருந்தார்.

பால் :—அதுதான் போலும் நீங்கள் மிருகங்களை வளர்த்து வந்தீர்கள். உங்கள் பள்ளிக்கூட, கல்லூரி வாழ்க்கையைக் குறித்துச் சொல்லுங்கள்.

காமினி :—நான் லேடி மேக்லகன் பள்ளியிலும், எமிலி கன்னரிட் கல்லூரியிலும் கல்வி கற்றேன். மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் முதல்தரமாகவும், பி.ஏ. (ஹானர்ஸ்) பரீக்ஷையில் பஞ்சாபிலேயே மூன்றாவதாகவும் தேறினேன். காலேஜ் விவாதங்களிலும், வியாசப் போட்டியில் கலந்து கொள்வதிலும், நாடகங்களில் நடிப்பதிலும் நான் மிகவும் பற்றுதல் கொண்டிருந்தேன். நீச்சுப் போட்டியில் பல பரிசுகள் பெற்றிருக்கிறேன். ரேடியோவில் முதலில் சிறுவர் பகுதியிலும், பின்னர் பெரியவர்கள் பகுதியிலும் நான் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறேன்.

பால் :—நீங்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் இருக்கிறீர்கள் ! நீங்கள் எப்பொழுது அபாரமான சந்தோஷம் அடைகிறீர்கள் ?

காமினி :—பிரதி வருஷமும், பிப்ரவரி மாதம் 25ம் தேதி நான் என் பிறந்த நாளை வெகு கோலாகலமாகக் கொண்டாடுகிறேன். அது எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. ஆனால் அதைவிட எனக்கு மகிழ்ச்சி அளிப்பது ஏப்ரல் மாதம் 30ம் தேதி—அதாவது என் ராகுவின் பிறந்த தினம் அது.

பால் :—நீங்கள் எந்த வருஷத்தில் பிறந்தீர்கள்?

காமினி :—நான் இதற்கு மட்டும் பதில் கூற முடியாது.

பால் :—ஏன்?

காமினி :—நீங்கள் எப்பொழுதுமே ஒரு ஸ்திரீயின் வயதை மட்டும் கேட்கக் கூடாது!

பால் :—சரி, உங்களை நான் கட்டாயப் படுத்த மாட்டேன். படத்தொழிலுக்கு வந்த பிறகுதான் நீங்கள் நடனம் கற்றுக் கொண்டீர்களா?

காமினி :—இல்லை, ஏற்கெனவேயே கூறியுள்ளபடி, நான் என் குழந்தைப் பருவத்திலேயே நடனம் பயின்றேன். எனக்கு எட்டு வயதிருக்கும். அசோக் குமாரும், லீலா சிட்னிஸும் லாகூருக்கு வந்திருந்தார்கள். அவர்கள் வரவை ஒட்டி பிளாஸா தியேட்டரில் ஒரு மாபெரும் வரவேற்பு வைபவம் நடந்தது. அந்த சந்தர்ப்பத்தில் நான் அங்கு நடனமாடினேன். இப்பொழுதும்கூட தினசரி காலையில் நான் ஒரு மணி நேரம் நடனம் பழகுகிறேன்.

பால் :—நீங்கள் பாடுவது உண்டா?

காமினி :—பிரமாதமாகப் பாட மாட்டேன். குஷியாக, எனக்குள்ளே முணுமுணுத்துப் பாடிக்கொள்வேன். சிறு வயதில் நான் சதா சினிமாப் பாட்டுகளைப் பாடுவது வழக்கம்.

பால் :—இப்பொழுது ஒரு பாட்டைப் பாடக் கூடாதா?

காமினி :—தயவுசெய்து என்னைப் பாடும்படி மட்டும் கேட்காதீர்கள். நான் பாட ஆரம்பித்தால், எல்லாப் பாடகிகளும் பாடுவதையே நிறுத்திவிட்டு. என் இனிய குரல்மீது அசூயைப் படுவார்கள். அவர்கள் பொறாமைப்படுவதை நான் விரும்பவில்லை. ஆகவே தயவுசெய்து தொந்தரவு பண்ணாதீர்கள்.



தற்போது தமிழ் நாடெங்கும் காண்பிக்கப்பட்டு வரும் ''ஏழை உழவன்'' படத்தில் ஸ்ரீராம மூர்த்தியும், குமாரி துளசியும்.

பால் :—சரி, நீங்கள் பாடவேண்டாம்.

காமினி :—நான் பாடவே மாட்டேன் என்று சொல்லவில்லை, இன்னொரு சமயம்...ஒருக்கால்.......

பால் :—காமினிஜி! மணமான பெண் ஒருத்தி வீட்டு வேலைகளை அவளே கவனிப்பதா, அல்லது வேலைக்காரர்களிடம் விட்டு விடுவதா?

காமினி :—நீங்கள் என்ன கேட்கிறீர்கள் என்பது எனக்குப் புரியவில்லை.

பால் :—சமையல் செய்வது, குழந்தைகளைப் பார்த்துக் கொள்வது, இவைகள்.

காமினி :—வெளியே வேலைக்குப் போவதற்குமுன் குடும்ப வேலைகள் ஒழுங்காக நடைபெறுகின்றனவா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். என் தாயார் அல்லது மாமியார் குடும்ப வேலைகளை கவனித்துக் கொள்கின்றனர். அவர்கள் இல்லாவிட்டால் எனக்கு வெளியே வேலையில் மனம் செல்லவே செல்லது.

பால் :—உங்கள் பொழுது போக்குகள் எவை?

காமினி :—பாடுவது, நடனம் ஆடுவது, நடிப்பது, நீச்சல் அடிப்பது இவைகள் என் பொழுது போக்குகளாக இருந்தன. இப்பொழுது அவைகளே என் தொழிலாகி விட்டன. குழந்தைகளுடன் விளையாடுவது, வீட்டு வேலைகளை கவனிப்பது, சமயம் கிடைக்கும்போது நேர்த்தயான பலகாரங்கள் தயார் செய்வது இவை எனது பொழுது போக்குகளாகிவிட்டன.

பால் :—நீங்கள் எந்த பக்ஷணம் நன்றாகச் செய்வீர்கள்? உங்கள் வீட்டுக்கு வர எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தால் நீங்கள் அவைகளை எனக்குக் கொடுப்பீர்களா?

காமினி :—பேஷாக! நீங்கள் கேட்கவே வேண்டியதில்லை. விருந்தாளிகளுக்கு அறுசுவை உண்டி அளிப்பதை நான் கடமையாக நினைக்கிறேன். முடிந்தபோது அவசியம் வாருங்கள். நான் உங்களை உபசரிக்கிறேன்.

பால் :—அப்படியானால் அவசியம் வருகிறேன். உங்களது இலட்சிய விருப்பம் என்ன?

காமினி :—உலகத்தைச் சுற்றுவது; எனது குழந்தைகளுக்கு மிகச் சிறந்த கல்வி அறிவு புகட்டுவது.

பால் :—கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் சினிமாவுலகுக்கு வரலாமா, கூடாதா?

காமினி :—ஆவலும், திறமையும் இருந்தால் கண்டிப்பாக வரலாம். ஆனால் அதற்கு முன் அவர்கள் மேடை நாடகங்களிலும், ரேடியோ நாடகங்களிலும் நடித்து, தங்களுக்கு அதற்கான திறமையிருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ளுவது நல்லது.

பால் :—நீங்கள் இடையில் இரண்டு வருஷங்கள் இத்தொழிலுக்கு வராதிருந்தது ஏன்?

காமினி :—எனது கணவருக்கு விடுமுறை கிடைத்தது. அவர் ஐரோப்பா முழுதும் சுற்றிப் பார்க்க விரும்பினார். எனக்கும் அந்த அவா இருந்தது. ஆகவே நானும் அவருடன் போனேன். நாங்கள் பெரிய நகரங்களை யெல்லாம் பார்த்தோம். மனம் கொண்ட மட்டும் சுற்றிப் பார்த்தோம். எனக்கு அப்

பொழுதுதான் ராகுல் பிறந்தான். அதனுல்தான், படத்தில் நடிக்க முடியாமல் இருந்தது.

பால் :—நீங்கள் பார்த்த இடங்களையெல்லாம் பற்றிச் சொல்லுங்களேன்.

காமினி :—ஐரோப்பிய சுற்றுப் பிரயாணத்தைப்பற்றி நான் சொல்ல ஆரம்பித்தால் நாளைக்குக்கூட சொல்லி முடியாது. கட்டடங்கள், வாழ்க்கை நடத்தும் விதம், குணுதிசயங்கள், உடைகள், அவர்கள் பொழுது போக்கு, ஒவ்வொன்றும் போற்றும்படி இருந்தன. எந்த வேலையையும் அவர்கள் அரை குறையாகச் செய்வதில்லை. பிறர் கண்டு போற்றும்படி செய்கிருர்கள். நாங்கள் சிறந்த நாடகங்களைப் பார்த்தோம். அங்குள்ள ரோடுகள் சுத்தமாகவும் வழவழப்பாகவும் இருக்கின்றன. ஆகவே, காரில் போவது வெகு சுகமாக இருக்கிறது. அவர்கள் நம்மை நடத்தும் விதம் ஆச்சரியமாக இருக்கிறது. ஒரு கடைக்குப்போய் வெகு நேரம் அங்குள்ளவைகளைப் பார்த்துவிட்டு ஒன்றும் வாங்காது வந்தால்கூட அவர்கள் முகம் சிணுங்குவது கிடையாது.

பால் :—அங்குள்ளவர்கள் புடவைகளை வெகுவாக விரும்புவதாகத் தெரிகிறதே.

காமினி :—ஆம். அவர்கள் என்னை நிறுத்தி என் புடவையைப் பார்ப்பார்கள். நம் நாட்டு உடையை அவர்கள் அதிகம் விரும்புகிருர்கள்.

பால் :—படங்கள், குழந்தைகள், வீடு இவைகள் தவிர வேறு எதை நீங்கள் மிகவும் விரும்புகிறீர்கள் ?

காமினி :—நீச்சலடிப்பதை நான் விரும்புகிறேன். எனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம், ஜுகுவுக்கோ, அல்லது நீச்சல் சங்கத்துக்கோ என் கணவருடன் போய்விடுவேன். என் குழந்தைகளுக்கான உடைகளை சித்தரிப்பதிலும், தைப்பதிலும் கூட எனக்கு விருப்பம் உண்டு.

பால் :—படத் துறையில் பிரவேசிக்க நினைக்கும் பெண்களுக்கு உங்கள் புத்திமதி என்ன ?

காமினி :—அவர்களுக்கு நான் என்ன புத்திமதி கூற முடியும் ? நான் ஒன்று

''வஞ்சம்'' என்ற தமிழ்ப் படத்தில் சுதாகரும், சூர்யகாந்தமும் தோன்றும் இந்தக் காட்சி சேர்க்கப்பட்டிருக்கிறது.

மட்டும் கூற முடியும். 'நீங்கள் நடிக்க முற்பட்டால் நமது படங்களின் தரத்தை உயர்த்தப் பாடுபடுங்கள். உங்கள் மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.'

பால் :—ரொம்ப வந்தனம். அபிமானிகள் பேட்டியை ரொம்பவும் ரசித்திருப்பார்கள் என நினைக்கிறேன். காமினிஜி ! உங்களை இனித் தாமதிக்க வைக்க விரும்பவில்லை. நமஸ்தே !

காமினி :—நமஸ்தே !

பால் :—காமினிஜி ! நீங்கள் சொன்ன ஒரு விஷயத்தை மறந்துவிட மாட்டீர்கள் என நினைக்கிறேன்.

காமினி :—எந்த விஷயத்தை ?

பால் :—நீங்கள் தயாரிக்கும் பக்ஷணங்களைக் கொண்டு என்னை உபசரிப்பதாகச் சொன்னதை. நிச்சயமாக ஒரு நாள் உங்கள் இடத்திற்கு வந்து குதிப்பேன்.

காமினி:—(சிரித்தபடி) நான் மறக்கவே மாட்டேன். நீங்கள் எப்பொழுது வேண்டுமானுலும் வரலாம்.

[பிரபல லிப்டன் டீ கம்பெனியாரின் ஏற்பாட்டில் ஒலி பரப்பப்பட்ட பேட்டி இது.]

ஜூபிடர்-லாவண்யா
தயாரிப்பு
மனிதன்
டைரெக்ஷன்:
கே. ராம்நாத்
Parthan

துரிதமாய் தயாராகி
வரும் ''மனிதன்!''
பொங்கல் வெளியீ
டாக இருக்கும்.
டி. கே. ஷண்முகம்
டி. கே. பகவதி,
மாதுரி தேவி, கிரு
ஷ்ண குமாரி, வி.
வி. வி. பந்துலு,
பிரண்ட் ராமசாமி,
ஆகியோர் முக்
கிய நடிகர்கள்.



எலே. நாலே முக்காலணு!

ஜாவர் என். சீதாராமன்

"எல்லோருக்கும் வோட் உரிமை; எல்லோருக்கும் இந்நாட்டு மன்னர் பதவி" என்று சொல்லும் இந்த ஜனநாயக சூழ்நிலையில், 'சாதாரண மனிதன்', 'தெருவில் இருக்கும் (திண்டாடும்) மனிதன்', 'சராசரி மனிதன்' என்ற பதங்கள் அடிக்கடி அடிபடுவது சகஜமாய் விட்டது. இது அரசியலில்! ஆனால், சினிமாவின்—அதாவது சினிமாப் படத் தயாரிப்பில் உள்ள சக்கரங்கள் எல்லாம் எப்போதும் ஒரே திசையில் தான் நகருகின்றன. அந்த திசைதான் 'நாலே முக்காலணு மனிதன்' இருக்கும் திசை. நாலே முக்காலணு மனிதனு! அது யார்? அவன் எங்கே இருக்கிருன்! எப்படிப் பேசுகிருன்! அவன் தன்மை என்ன?—இவை யெல்லாம் சிக்கலான கேள்விகள். அத்வைதத்தை அலசிய சங்கரரையும் திண்டாட வைக்கும் கேள்விகள்! வைஷ்ணவ பெருமான் வேதாந்த தேசிகனையும் வியர்க்க வைக்கும் கேள்விகள். ஆராய்ச்சியை ஒதுக்கிவிட்டு நாம் கூறினுல், 'நாலே முக்காலணு ஆசாமி நாலே முக்காலணு வகுப்பில் உட்கார்ந்து படம் பார்ப்பவன்' என்று அர்த்தம் கொள்ளலாம். அது பூரணவும் சரியான அர்த்தமாகாது. அது கிடக்கட்டும்.

'நாலே முக்காலணு' என்று ஒரு பெருங் கூட்டம் இருப்பதாக நினைத்து, நம்பி நம் படத் தயாரிப்பாளர்கள், பட டைரெக்டர்கள், பட வசன கர்த்தாக்கள் (அடியேன் உட்பட) பட நடிகர்கள் படும் பாடு தாளம் படாது; தறி படாது.

ஒரு படம் முடியும் தறுவாயில் ஒருவர் வருவார்; கணைப்பார்; காப்பி சாப்பிடுவார்; படத் தயாரிப்பாளரிடம் மெதுவாக வீணையின் நாதம் போல், "ஸார். படம் நாலே முக்காலணுவுக்குப் புரியுமோ?" என்று ஒரு சிறிய கேள்வியைக் கேட்டு விடுவார். உடனே படத் தயாரிப்பாளர் குட்டிக்கரணம் போட்டு விடுவார். புது எழுத்தாளர்களைக் கொண்டு படத்தை அடையாளம் தெரியாதபடி மாற்றி விடுவார். படமும், ஒரு துணியில் ஒன்பது முறை மாற்றி ஷர்ட் தைத்தால் எப்படி இருக்குமோ அப்படி ஆகிவிடுகிறது.

ஒரு படத்தில்,நாலே முக்காலணு விரும்பும் அம்சங்கள் இவையிவை என்று சில நாலே முக்காலணு நண்பர்கள் கணக்கிட்டு வைத்திருக்கிருர்கள். அது கீழ் வருமாறு:

(1) படத்தில் அதிகமாக பெண்மணிகள் வந்து போய்க் கொண்டிருப்பது.

(2) குறைவான ஆடைகளிலும் நிர்வாண நிலைகளிலும் பெண்மணிகள் தோன்றுவது.

(3) எப்போதும் கண்ணீர் சிந்தும் பெண், அல்லது குரங்கு போல் குதித்துக் கொண்டிருக்கும் பெண்.

(4) ஹாஸ்ய நடிகன்: தலையை மொட்டையடித்து, அவனைத்தேள்கொட்டியவனைப் போல் அலற வைப்பது.

(5) கதாநாயகனை உயர்வான இடத்தில் இருத்தி, வசனங்களைவெடிக்கச்செய்வது.

(6) வயதான தகப்பனை அவன் மகன் தூஷிப்பது.

(7) கதாநாயகனும் கதாநாயகியும் கதை முடிவதற்குள் ஒரு முறையாவது ஒரு கனவு கண்டு விடுவது.

இன்னும் இது போல் பல. இந்தக் கணக்குப் பிரகாரம் தயாரித்த படங்கள் பல தவிடு பொடியாகி விட்டன. நாலே முக்காலணு என்பவன் நாலே முக்காலணு வகுப்பில் மட்டும் இருப்பவனல்ல. அவன் ரூ. 1–14–0 வகுப்பிலும் காணப்படுகிருன். எந்த வகுப்பிலும் காணப்படுகிருன் நாலே முக்காலணு. நாலே முக்காலணு என்று ஒன்று தனியாக இருப்பதாக எண்ணி, படம் தயாரிப்பதை விட நம் உணர்ச்சிகளையே நம்பி படம் தயாரித்தால் அது தோல்வியடைய முடியாது. ஏனென்ருல், எல்லோரும் ஒரளவுக்கு நாலே முக்காலணுதான்.

'நாலே முக்காலணு' நீ எங்கேடா! என்று தவித்து நாலு மூலையிலும் தேடும் படத் தயாரிப்பாளன் ஒரு குரலுக்கு செவி கொடுப்பதில்லை. அந்தக் குரல்தான் அவன் அந்தராத்மாவின் குரல். அது எப்போதும் 'இங்கே பாருடா!' என்று சொல்லிய வண்ணம்தான் இருக்கிறது!

சென்னை கிரௌன், வெலிங்டன் இரு தியேட்டர்களிலும்

மற்றும் தமிழ் நாடெங்கும்

குண்டூசியைக் கேளுங்கள்



கலை சம்பந்தமாக உங்களுக்கு என்ன சந்தேகம் இருந்தாலும் 'குண்டூசி' யிடம் கேளுங்கள். இலவசமாகவே பதில் பெறலாம். யாருடைய மனமும் புண்படாதபடி தமாஷாகவே பதிலளித்து, தமிழ் சினிமா, நாடக, சங்கீத, நடன உலகை சீர்திருத்துவதே இப்பகுதியின் நோக்கமாகும். —ஆசிரியர்.

டபிள்யூ. எம். வாஹித் (கொழும்பு-3)

"சம்சார"த்தில் நடிக்கும் வனஜாவுக்கு விவாஹம் ஆகிவிட்டதா? அவரது விலாஸத்தைத் தெரிவிக்க முடியுமா?

வனஜா இன்னும் 'குமாரி'யாகத்தான் இருக்கிறார். விலாஸம்:—நெ. 8 மர்ரேஸ் கேட் ரோடு, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை-18.

த. செல்லப்பா (ஸ்ரீவைகுண்டம்)

"குண்டூசி"க்கு வெள்ளி விழா நடந்து விட்டதா?

அதற்கு இன்னும் சில வருஷங்கள் செல்ல வேண்டும். என் தலை இப்பொழுது பாதிப் பங்குதான் வெளுத்திருக்கிறது!

கே. சத்தியநாராயணன் (சோவை)

எஸ். பாலச்சந்தரின் விலாஸத்தை தயவு செய்து தெரிவிக்கவும்.

மயிலாப்பூரில், நடுத் தெருவுக்குச் சென்று, "பாலச்சந்தரின் வீடு எது?" என்று கேட்டால், யாரும் சொல்லி விடுவார்கள்.

"சின்னராஜும்" (கீழநத்தம்)

காலஞ்சென்ற நடிகர் சின்னப்பாவைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

திரைப் படத்தில் காதலனாகவும், சினிமா உலகில் வில்லனாகவும் விளங்கி வந்தார் மா'பெரும்' நடிகர் பி. யு. சின்னப்பா. அவரது மறைவால் காலியான ஸ்தானத்தை அடைய பல நடிகர்கள் இப்பொழுது முயன்று வருகின்றனர்!

"குண்டூசி ரஸிகன்" (கீழநத்தம்)

மாஜி "சிங்களக் குயில்" தவமணி தேவியின் விலாஸத்தைக் கூற முடியுமா?

சினிமா உலகிலிருந்து பறந்து போய் விட்ட இந்தக் "குயில்" எங்கிருக்கிறதோ, யார் கண்டது? வேண்டுமானால் அதைக் கண்டு பிடிப்பதற்கு ஒரு புறாவின் காலில் ஒரு சீட்டெழுதிக் கட்டி யனுப்பிப் பாரும்!

"ஜூபிடர் பிரியன்" (மதுரை)

தமிழ்ப் பட உலகில் முதன் முதலில் 'இரவல் குரல்' முறையை புகுத்திய படத் தயாரிப்பாளர் யார்?

எனக்குத் தெரிந்த வரையில், ராயல் டாக்கீஸாரின் "சக்குபாய்" படத்தில் தான் முதன் முதலில் இந்த முறை கையாளப்பட்டது. காலஞ் சென்ற டி. எஸ். கிருஷ்ண வேணிக்கு (பேபி ராஜாமணியின் தமக்கை) வி. ஆர் தனம் குரல் இரவல் தந்திருக்கிறார்.

"க" (மருவத்தூர்)

பானுமதி, வைஜயந்தி மாலா இருவருள் அழகில் சிறந்தவர் யார்?

இருவரும் சிறந்த அழகிகளே. வேண்டுமானால், வைஜயந்தியை 'கவனத்தைக் கவரும் அழகி' என்றும், பானுமதியை 'மனதைக் கவரும் அழகி' என்றும் நாம் கூறலாம்.

"சுகுமார் பிரியன்" (மதுரை)

டி. ஆர். மஹாலிங்கம், கே. ஆர். ராமசாமி, எம். ஜி. ராமச்சந்திரன், நாகேஸ்வர ராவ் இவர்களில் சிறந்தவர் யார்?

'இரட்டை மண்டை நாகேஸ்வர ராவ் ஒற்றைப் பாஷை (தெலுங்குப்) படங்களில் மட்டுமே இனி நடித்துக் கொண்டிருக்கலாம். 'சதுர மூஞ்சி' ராமச்சந்திரனே ஏதோ இயந்திரத்தால் இயக்கப்பட்டவர் போல சோகக் களையுடன் தோன்றி வருகிறார். மிகை நடிகர் ராமசாமியோ, சினிமா உலகம் தம்மை உதறி விடாமலிருப்பதற்காகத் துடிக்கும் துடிப்பு அவரது நடிப்பில் மட்டுமன்றி பாட்டிலும் கூடபுகுந்து கொள்ளுகிறது. மஹாலிங்கமோ நடிப்பிலும் பாட்டிலும் மேதை வரம்பை எட்டிவிட்ட மனோபாவத்துடன் உருப்படாமல் போய்க் கொண்டிருக்கிறார். இனி, நீரே சொல்லும்; யார் சிறந்தவர் என்று.

பி. பெரியசாமி (நார்ட்டன் பிரிட்ஜ்)

படத்தில் நடிப்பதற்கு ஒருவர் எதுவரை படித்திருக்க வேண்டும்?

நடிப்பிற்கும் படிப்பிற்கும் உச்சரிப்பில் நெருங்கிய சம்பந்தம் இருந்தாலும், நடைமுறையில் நடிப்பதற்குப் படிப்பு இன்றியமையாததல்ல. ஆனால், படிப்பும் இருந்தால் நடிப்பு விசேஷமாய் சோபிக்கக் கூடும்.

வெங்கிட்டு (அயன்புரம்)

"சின்னதுரை" உண்மையில் சினிமாவா? அல்லது தெருக் கூத்தா?

"அவர்கள் தயாரித்து வெளியிட்டது என்னவோ சினிமாப் படம் என்று தான்"—என்பது எனக்கு நிச்சயமாய்த் தெரியும்!

வி. ஆர். ராமசாமி (நுவரெலியா)

"கல்யாணி" படத்தில் பி. எஸ். சரோஜா பைத்தியத்தைக் காதலிப்பதாக நடிக்கிறாரே. உண்மையாகவே

ஏவி. எம். சீக்கிரமே வெளியிடவிருக்கும் "செல்லப் பிள்ளை" தமிழ்ப் படத்தில் கே. ஆர். ராமசாமியும், சாவித்திரியும் கனகுஷியாக இருக்கும் கட்டம் இது.



மனைவியை ஷூட்டிங் பார்க்க அழைத்துப் போக மாமனாரிடம் அனுமதி கேட்கிறார் மாப்பிள்ளை, நேஷனல் பிக்சர்ஸாரின் "பராசக்தி" படத்தில் துரைசாமி, ஸ்ரீரஞ்சனி, வெங்கட்டராமன் முதலியவர்கள் தோன்றும் இக்காட்சியைக் காணலாம்.

அவர் ஒரு பைத்தியக்காரனைக் காதலிப்பாரா? எனின், எனக்கு உடனே தெரிவிக்கவும்?

இது தெரிந்தவுடன் நீர் உம்முடைய விலாஸத்தை அவருக்குத் தெரிவிக்கலாம் என்ற எண்ணமோ!

ஜே. ஏ. சாமுவேல் (திருவனந்தபுரம்)

எம். வி. ராஜம்மாவின் விலாஸத்தைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

நெ. 5, கோபால கிருஷ்ணா ரோடு, தியாகராய நகர், சென்னை-17-என்று நீர் எழுதலாம்.

டி. ஜவஹர் (பாலக்காடு)

எம். கே. டி. பாகவதர், டி. ஆர். மஹாலிங்கம், ஹொன்னப்ப பாகவதர் இவர்களில் சிறந்தவர் யார்?

சிறந்தவர் என்பதற்குப் பதில் "ஜனங்கள் மறந்தவர் யார்?" என்று நீர் கேட்டிருக்கலாம். ஹொன்னப்பாவை ரஸிகர்கள் மறந்து விட்டனர். எம். கே. டி.யை மறந்து விடும்படி அவர் நடந்து கொண்டு வருகிறார். ஆனால், மஹாலிங்கமோ ரஸிகர்கள் மறந்து விட முடியாதபடி மோசமாக "சின்ன துரை"யை வெளியிட்டிருக்கிறார்!

வயிரவ சுந்தரம் (ராமச்சந்திரபுரம்)

"ஆத்ம:சாந்தி"யில் நடிகர் நடிகைகளுக்கு குரல் இரவல் கொடுத்திருப்பவர் யார் யார்?

சந்தேகம் வேண்டாம்; மனிதவர்க்கத்தைச் சேர்ந்த ஆண் பெண்கள் தாம்!

அ. ரோன்ஸார் (பாண்டிச்சேரி)

பிரபல நடிகர் டி. எஸ். பாலய்யா பல ஆண்டுகளாக சினிமாவில் நடித்துச் சேர்த்த பணத்தை என்ன பண்ணுகிறார்? அவரும் ஏன் மற்ற நக்ஷத்திரங்களைப் போல் படம் தயாரிக்க முன்வரவில்லை?

உமது இந்தக் குறை சீக்கிரமே நீங்கி விடும். பாலய்யா சினிமா உலகை உள்ளும் புறமும் அறிந்தவர். ஆதலால், அவர் இப்பொழுதுதான் ஆற அமர



வேம்புவின் டைரெக்ஷனில் துரிதமாய்த் தயாராகி வரும் கஜானனா புரொடக்ஷன்ஸாரின் "மாமியார்" தமிழ்ப் படத்தில்—பி. ஆர். பந்துலு, மனோஹர், சூர்யகாந்தம், பி. எஸ். சிவபாக்கியம் ஆகியவர்கள் தோன்றும் இந்தக் காட்சியைக் காணலாமாம்.

யோசித்துத் திட்டம் வகுத்து வருகிறார்; எல்லிஸ் ஆர். டங்கன் டைரெக்ஷனில் அவர் சீக்கிரமே ஒரு தமிழ்ப் படத்தைத் தயாரிக்கப் போகிறார்.

டி. டி. ஆன்டோனி (வால்பாறை)

"ஆன்" ஒரு கம்யூனிஸ்ட் படமா? அல்லது அதை எடுத்தவர் ஒரு கம்யூனிஸ்டா? அரிவாளும், சுத்தியலும் அந்தப் பட விளம்பரங்களில் காணப்படுவதால் இதைக் கேட்கிறேன்.

தொழிலாளர்களின் ஆதரவு மூலம், தாம் பெரிய முதலாளி ஆவதற்காக டைரெக்டர் மெஹ்பூப் இச் சின்னத்தைக் கொண்டிருக்கலாம். ஆனால், "ஆன்" தமிழ்ப் படத்தைப் பார்த்தவர்களுக்கு தமிழ் உச்சரிப்புகள் தலையில் சுத்தியலால் அடித்ததுபோல் இருந்தன. "அதைப் பேசியவர்களின் நாக்கை அரிவாளால் அறுத்தால் என்ன?" என்று கோபம்கூட வந்திருக்கும் அவர்களுக்கு.

எம். அப்துல் ரஹீம் (கூட்டிமேடு)

"கல்யாணம் பண்ணிப்பார்" கதையை எழுதிய 'சக்ரபாணி' என்பவர் விஜயா புரொடக்ஷன்ஸ் சம்பந்தமான சக்ரபாணிதானா?

ஆம்; நீர் நினைத்தது சரிதான்.

கே. கங்காதரன் (குளித்தலை)

வைஜயந்தி மாலா என் தமிழ்ப் படத்தில் நடிப்பதை நிறுத்தி விட்டார்?

நிறுத்தவில்லை; நடித்துக் கொண்டுதானிருக்கிறார் — ஏவி. எம்மின் "பெண்" தமிழ்ப் படத்தில்.

பி. எஸ். ஆறுமுகம் (சிவகங்கை)

கே. ஆர். ராமசாமி தோன்றும் "சொர்க்க வாசல்" எப்பொழுது திறக்கப்படும்?

'வைகுண்ட ஏகாதசிக்கு மறுநாளன்று'—என்று நான் பதில் கூறப்போவதில்லை!

வதேயில்லை. அதுமட்டுமல்ல; "c/o ஸென்ட்ரல் ஜெயில், சென்னை" என்று கூடச் சேர்த்து எழுதுகிறான்! நீர் இதற்கென்ன சொல்லுகிறீர்?

மைசூர் நவஜோதி ஸ்டுடியோவில் தயாராகிவரும் சிலோன் ஸ்ரீஷண்முகாபில்ம்ஸின் "அனாதை" படத்தில் பி. சுலோசனா.

டி. எஸ். ராமன் (திருத்துறைப்பூண்டி)

வி. வி. சடகோபன் சினிமா உலகத்தை விட்டு விலகியது ஏன்? அவரது விலாஸம் என்ன?

என்னைக் கேட்டால் அவர் சினிமா உலகிற்கு வந்தது தான் தவறு என்பேன். சங்கீத உலகில் நேராக கவனத்தைச் செலுத்தி, சீக்கிரமாகப் புகழ் பெற முயலாமல் அவர் கொஞ்ச காலம் சினிமா உலகில் சஞ்சரித்துத் தம் காலத்தை வீணாக்கிக் கொண்டிருந்தாரல்லவா? "ஜெகதீஸ்வரா தெரு, தியாகராயநகர், சென்னை-17" என்ற விலாஸப் பல்லவியை நீர் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளும்.

ராமமூர்த்தி (ராயவரம்)

எனக்கு.......ஸ்டுடியோவிலிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது. அதில் ஒரு நம்பரைக் குறிப்பிட்டு "இனிமேல் எழுதும் கடிதங்களை இந்த நம்பரைக் குறித்து எழுதவும்" என்று தெரிவித்திருக்கிறார்கள். என்னை அவர்கள் நடிகனாக ஏற்றுக் கொள்ளுவார்கள் என்பதுதானே இதன் அர்த்தம்?

நம்பர் போட்ட கடிதங்களைப் பற்றி நீர் பிரமாதமாய் நினைத்துக் கொண்டு விட்டீர் என்று தெரிகிறது! என் தெருவிலிருக்கும் ஒருவன் தம் உறவினன் ஒருவருக்கு எழுதும் கடிதம் ஒவ்வொன்றிலும் நம்பர் போடத் தவறு

கே. சுப்பய்யா (ரிஷபம்)

நம் நடிகர்கள் பலருக்கு கத்திச்சண்டை போடப் பழகிக் கொடுத்திருக்கிறார் ஸ்டன்ட் சோமு. அவருக்குக் கத்திச் சண்டை பழக்கிக் கொடுத்தவர் யார்?

ஏன்; அவருடைய கையிலுள்ள கத்திதான்!

"அமரன்" (மதுரை)

சங்கீதம் ஒரு கலை என்றால் அதன் உண்மை நிலையை நாம் எப்பொழுது உணர முடியும்?

அதை ஒருவர் அபஸ்வரமாகப் பாடிக் கொலை செய்யும் போதுதான்!

அ. சு. மூர்த்தி (கடலூர் ஓ. டி.)

டைரெக்டர் ஏ. எஸ். ஏ. சாமியை நான் நேரில் சந்திக்க விரும்புகிறேன். அவரது வீட்டு விலாஸத்தைத் தெரியப் படுத்தவும்.

இப்பொழுது நான் இந்த "ஆ-சா-மி" யின் வீட்டு விலாஸத்தைக் கொடுத்தால்கூடப் பயன்படாதய்யா! அவர் எங்கேயாவது "ரிக்ஷாக்காரனு"டன் உறவாடிக் கொண்டிருப்பார்!

சி. அழகர்சாமி நாயுடு (மதுரை)

தமிழில் எடுக்கப்படும் படங்களில் அநேகமாக ஆந்திரர்களை நடிக்க வைப்பதின் நோக்கம் என்ன?

"தமிழர்களுக்குத் துளிக்கூட சொரணை இல்லை—என்று நிரூபிப்பது நம் பட முதலாளிகளின் நோக்கம் அல்ல"—என்று மட்டும் நான் சொல்லிவிட முடியும்.

எம். வி. எஸ். (சேலம்)

நாகர்கோவில் மஹாதேவன் தற்போது என்ன செய்கிறார்? அவரது விலாஸத்தைத் தெரிவிக்க முடியுமா?

ஸ்ரீ கிருஷ்ண பிக்சர்ஸ் தயாரித்துக் கொண்டிருக்கும் ''மருமகள்'' தமிழ்ப் படத்தில் சுதாகர், பேபி சரஸ்வதி ஆகிய இவ்விரு குட்டி நக்ஷத்திரங்களையும் சந்திக்கலாம்.

பாலய்யா உட்கார்ந்திருக்கும் ஜோரைப் பார்த்தால், அவர் இது ''என் வீடு'' என்று சொல்லாமலே தெரிகிறதல்லவா? அவருக்குப் பக்கத்தில் நிற்பவர் ராம சர்மா.

நிச்சயமாய் முடியாது! வெகு சாதுரியமாகப் பேசி எங்கள் காரியாலயத்தில் வாங்கிக் கொண்ட எழுபத்தி ஐந்து ரூபாயைத் திருப்பித்தர முடியாமல் இந்த 'திரிலோக சஞ்சாரி' தற்போது எந்த லோகத்தில் தலை மறைவாய் இருந்துவருகிறாரோ!

என். சுந்தரராஜன் (மதுரை)

தமிழ்ப் படங்களிலே இதுவரையில் புகுத்தப்படாத அம்சம் எது?

சொல்லட்டுமா? முழு நிர்வாண நடனக் காட்சிகள்தாம்!

எஸ். வி. வரத தேசிகன் (புதுச்சேரி)

திவான் பகதூரில் நடித்த ஜே. சுசீலா தற்போது ஏன் சினிமாவில் நடிக்க வில்லை?

பாவம், அவர் "ஜே. சுசீலா, சுசீலா தேவி, தேவி சுசீலா" என்று தம் பெயரை மூன்று முறை மாற்றி வைத்துக் கொண்டு பார்த்தார். ஆனால், அதிர்ஷ்டம் என்னவோ ஒரே மாதிரிதானிருந்தது! துருப் பிடித்த இரும்பிற்காவது பழைய இரும்புக் கடைக்காரனிடம் இடம் கிடைக்கும். ஆனால் துருப் பிடித்த நக்ஷத்திரங்களை யாரும் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டார்களே!

டி. ஏ. முகம்மது ஹாஸன் (தஞ்சாவூர்)

"அண்ணி", "கல்யாணம் பண்ணிப் பார்" இவைகளில் எதில் ஜி. வரலக்ஷ்மியின் நடிப்பு நன்கு அமைந்திருக்கிறது?

"அண்ணி"யில் தான் என்று நான் கருதுகிறேன்.

எஸ். செல்லையா (சங்கரன்கோவில்)

எம். கே. தியாகராஜ பாகவதர், எம். எஸ். சுப்புலக்ஷ்மி, கே. பி. சுந்தராம்பாள் ஆகியோரில் சிறந்த பாடகர் யார்? வரிசைக் கிரமமாய் கூறவும்.

எம். எஸ். எஸ்., எம். கே. டி., கே. பி. எஸ். — என்று வரிசைப் படுத்திக் கொள்ளும்.

உமா பிக்சர்ஸ்-ஓம் பிலிம்ஸ் கூட்டுத் தயாரிப்பான "பணக்காரி" தமிழ்ப் படத்தில் நடிக்கிறார் யோக மங்களம். டால்ஸ்டாயின் "ஆனு கெரினினு" வைத் தழுவிய கதை இது.

ஏ. அய்யாத்துரை (எட்டியாந்தோட்டை, இலங்கை)

டி. ஆர். ராஜகுமாரி, பானுமதி, மாதுரிதேவி, அஞ்சலி தேவி இவர்களில் யாருக்கு நடிப்பில் முதல் ஸ்தானம் அளிக்கலாம்?

தற்போது பானுமதியின் நடிப்பையே பெரும்பாலான ரஸிகர்கள் அதிகமாய் விரும்புகிறார்கள் என்று தெரிகிறது.

மிஸஸ் சுப்ரமண்யம் (பீமண்ணன் பேட்டை)

இரவல் குரல் கொடுத்து வரும் பால சரஸ்வதியும், "பில்ஹணா" வில் நடித்த பால சரஸ்வதியும் ஒருவரேதானா?

ஆம்; ஒருவர்தான்.

எஸ். பார்வதி (சென்னை)

மாஸ்டர் சேதுவின் விலாஸத்தைத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

"நெ. 2 வாஸு தெரு, கீழ்ப்பாக்கம், சென்னை."

எம். எஸ். முக்தார் (கொழும்பு)

'சினிமாப் பார்க்காதே' என்று ராஜாஜி கூறுகிறாரே. இது நடக்கக் கூடியதா?

இந்த வருஷத்தில் வெளிவந்துள்ள பல மோசமான படங்களைப் பார்த்த ரஸிகர்கள்—ராஜாஜியின் உபதேசமின்றியே—படம் பார்ப்பதை நிறுத்திவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. தற்போதைய படங்கள் கருத்திலும், காட்சியிலும் சகிக்க முடியாத அளவு மோசமாய் இருப்பதை யாராவது மறுக்க முடியுமா?

நீங்கள்தான் பட முதலாளி என்று வைத்துக் கொள்ளுங்கள். மேலே படத்தில் உள்ள பெண்மணி சினிமாவில் நக்ஷத்திரம் ஆகவேண்டும் என்று கேட்டால் தேர்ந்தெடுப்பீர்களா? என்ன, தயங்குகிறீர்களே! உண்மையில், இவர் ஒரு நக்ஷத்திரம்தான்! இதுபோல, நக்ஷத்திரங்களைத் தேடிப் பிடிக்கும் சிரமம் நம் படாதிபதிகளுக்கே இருக்கட்டும். நீங்கள் இந்த ஊசியில் எங்கோ ஒரு பக்கத்தில் வெளியாகியிருக்கும் இவரது பெயரைமட்டும் தேடிக் கண்டு பிடியுங்கள்.

கே. வி. ரங்கசாமி (குப்பம்)

என் நண்பர் ஒருவர் எந் நேரமும் சினிமா நக்ஷத்திரங்களின் போட்டோக்கள்மீதே தம் கவனத்தைச் செலுத்தி வருகிறுர். அவரது கவனத்தை வேறு வழியில் திருப்ப ஒரு உபாயம் சொல்லவும்.

அவர் விரும்பும் நக்ஷத்திரங்களை அவர் முன் நேரிலேயே கொண்டுபோய் நிறுத்தி விடும்!

நண்பன் (தம்பின், மலாயா)

இந்தியாவில் ரொம்பவும் ஆபாசமான சில பத்திரிகைகள் வந்து கொண்டும், மறைந்து கொண்டும் இருக்கின்றன. இவைகளை அடியோடு ஒழிப்பதற்கு முயற்சி எடுத்தால் என்ன?

ஆரம்பத்திலேயே இதுமாதிரிப் பத்திரிகைகளை நசுக்குவதற்கு நம் சர்க்கார் முயற்சி எடுத்திருந்தால் இவ்வளவு மானக்கேடும், மனஸ்தாபங்களும் ஏற்பட்டிராது என்பது உண்மையே. இப்பொழுதுதான் அவர்கள் ஓரளவு நடவடிக்கை எடுக்க முற்பட்டிருக்கிறுர்கள்.

ஜே. அப்துல் ரஹிமான் (கமலாபுரம்)

எம். ஆர். சந்தானலக்ஷ்மி முதல் கணவரை விட்டு விட்டு இரண்டாவது விவாஹம் செய்து கொண்டு விட்டதாகக் கேள்விப் படுகிறேன். உண்மையா?

இல்லை; அப்படி யார் சொன்னது? சினிமா நடிகைகள் கணவன் இல்லாமலேகூட வாழக் கூடியவர்கள் என்பது உமக்குத் தெரியாதா; என்ன?

வி. வி. மணி (பம்பாய்)

எஸ். வரலக்ஷ்மி படங்களில் பாடுவது சொந்தக் குரலில்தானு?

ஆம்; சொந்தக் குரலில் தான்.

வீட்டில் சினிமா புரொஜக்டர்

இந்த சிறு புரொஜக்டர் மின்சாரம் (ஏஸி–டிஸி) அல்லது டார்ச் மூலம் உங்கள் வீட்டிலேயே இயங்கும்.



சினிமாக்களில் பார்ப்பதுபோலவே படங்கள் 4'×3' சைஸ்களில் இருக்கும். 35 எம். எம். பிலிம் இதற்கும் பிரயோசனப்படும். இதன் மூலம் ஸ்லைடுகளும் போட முடியும். மூன்றடி படம் இனம். விலை ரூ. 11-8-0. வி. பி. பி. செலவு ரூ. 2-8-0. மேற்கொண்டு தனி பிலிம் கெஜம் விலை 8 அணு.

தானுகவே ஆறு தடவைகள் சுடும் பிஸ்டல்

(லைசென்ஸ் தேவையில்லை)

தானே சுழலும் முறையில் ஆறு முறை சுடக்கூடிய அமெரிக்கன் மாடல் பிஸ்டல்.



சுடும்போதும் நெருப்பும், புகையும் ஏற்பட்டு திருடர்களையும் கொடிய விலங்குகளையும் விரட்ட உதவுவது. நாடகம் சினிமாவுக்கு ஏற்றது. ஆபத்துக் காலத்தில் உங்கள் சிறந்த நண்பன். விலை ரூ. 8-8-0. வி. பி. பி. செலவு ரூ. 1-12-0. 12 தோட்டாக்கள் இனம். மேற்கொண்டு டஜன் தோட்டா விலை ரூ. 1-4-0. பிஸ்டல் கேஸ்ரூ. 2-8-0.

எலக்ட்ரிக், ரேடியோ புத்தகம்

மின்சாரம் இல்லாது வேலை செய்யும் ரேடியோ 15 ரூபாயில் தயாரிக்கலாம். எலக்ட்ரிக் வேலைகள் தெரிந்து கொண்டு மாதம் ரூ. 200 வரை சம்பாதிக்கலாம். விலை ரூ. 4/-. போட்டோ கிராபி போதகர்: ரூ. 3/-, வாஸனைத் திரவியத் தயாரிப்பு: ரூ. 2-8-0. தையல் வேலை ரூ. 3-8-0. சோப் செய்தல் ரூ. 3/-. வி. பி. பி. செலவு 12 அணு.

கடிதங்கள் யாவும் கண்டிப்பாக ஆங்கிலத்தில் எழுதவும்.

MILAP TRADING Co., (G. M. 11.)
Kanwariganj, Aligarh. U. P. (India)

சினிமா உலக சாலிவாகனன்

'குதூகலன்'

அந்தக் காலத்தில் சாலிவாகனன் மண் பொம்மைகளைச் செய்து வைத்து, அவைகளுக்கு உயிரூட்டி, யுத்தம் செய்தானும். இந்தக் காலத்தில், ''சாதாரண 'பொம்மை'களைக்கூட ஜீவன் ததும்ப நடிக்கச் செய்து, நக்ஷத்திரங்களாக்கி விடும் திறமை உடையவர்'' என்று புகழ் பெற்றவர் டைரெக்டர் கே. சுப்ரமண்யம். இந்த ''சினிமா உலக சாலிவாகன''னின் வாழ்க்கை, தொழில் வரலாறுகளை ''குதூகலன்'' ரஸமாக எழுதியிருக்கிறுர். —ஆசிரியர்

இங்கிலாந்து தேச சரித்திரத்தைப் படித்தவர்கள் 'வார்விக்' என்ற சரித்திரப் பிரசித்தி பெற்ற பிரமுகரை மறந்திருக்க முடியாது. அவர் 'ராஜா சிருஷ்டி கர்த்தா' (King Maker) என அழைக்கப்பட்டு வந்தார். அதாவது, அவரது காலத்தில் இங்கிலாந்தின் அரசர்களையே அவர்தான் சிருஷ்டித்தார். வார்விக்கைப் போன்ற ஆசாமி ஒருவர் தமிழ்ப் பட உலகிலும் இருக்கிறுர். அவர்தான் டைரெக்டர் கே, சுப்ரமண்யம். வார்விக் ராஜாக்களை சிருஷ்டித்தார் என்றுல். கே. சுப்ரமண்யம் பட உலகில் நக்ஷத்திரங்களை சிருஷ்டித்தார். இந்த இரண்டு சிருஷ்டி கர்த்தாக்களுக்கும் முக்கியமான—மலைக்கும் மடுவுக்கும் உள்ள பெரிய வித்தியாசம் உண்டு. வார்விக் தனக்கு அடங்கியவர்களை—தனக்கு வேண்டியவர்களை ராஜாக் களாக்கினுர். சுப்ரமண்யமோ வெறுப்பு விருப்பின்றி புது முகங்களைப் தேடிப் பிடித்து அவர்களது திறமையை வெளிப்படுத்தி நக்ஷத்திரங்களாக்கினுர்.

கே. சுப்ரமண்யத்தை நக்ஷத்திர சிருஷ்டி கர்த்தா என்று குறிப்பிடுவதை யாருமே மறுக்கவோ மறக்கவோ முடியாதபடி ஆணித்தரமான அத்தாட்சிகள் உள்ளன. இன்றும் முன்னணி நக்ஷத்திரங்களாக இருந்து வரும் டி. ஆர். ராஜகுமாரியையும், பி, எஸ். சரோஜாவையும் நக்ஷத்திரங்களாக்கி வைத்த பெருமை யாரைச் சார்ந்தது! மற்றும், எம். கே. தியாகராஜ பாகவதர், எஸ். டி. சுப்புலக்ஷ்மி, ஜி. சுப்புலக்ஷ்மி, எம். எஸ். சுப்புலக்ஷ்மி, பேபி சரோஜா இவர்கள்தான் டைரெக்டர் சுப்ரமண்யத்தை என்றென்றும் மறக்க முடியுமா? இவர்களெல்லாம் சினிமா உலகில் பெயரும் புகழும் பெற்றதற்கும், பெற்று வருவதற்கும் மூல காரணம் டைரெக்டர் கே. சுப்ரமண்யம்தான் என்றுல் அது மிகையாகாது.

சினிமா உலகுக்கு நக்ஷத்திரங்களைத் தேடித் தந்ததோடு மட்டும் அவர் நின்றுவிடவில்லை. ஒரு சிறந்த சாஹித்திய கர்த்தாவையும்—பா ப நா சம் சிவன்—அறிமுகப் படுத்திவைத்த பெருமை அவரைச் சார்ந்ததுதான். தமிழ் நாட்டாரின் பெருமையை, திறமையைக் கண்டு வடநாட்டவர் பிரமித்துப் புகழ்கின்றனர் என்றுல் அதற்கும் ஒரு விதத்தில் பொறுப்பாளி அவர்தான். அகில உலகப் புகழ் பெறப்போகும் ஜெமினி வாஸன் வழி காட்டவில்லையென்றுல், இவ்வளவு சீக்கிரம் நம்மவர்க்கு வடநாட்டாருடன் போட்டி போட தைரியமும், துணிவும் ஏற்பட்டிருக்குமா? அந்த வாஸன் இந்தத் துறையில் காலடி வைக்கத் தூண்டுகோலா யிருந்தவர் டைரெக்டர் சுப்ரமண்யம்தான். அலசிப் பார்த்தால், இன்று இத்துறையில் உள்ளவர்களில் நூற்றுக்கு ஐம்பது பேருக்குமேல் சுப்ரமண்யத்தின் உதவியினுல் வந்தவர்கள் தாம். வடநாட்டிலுள்ள சிறந்த ஒலி ஒளிப் பதிவாளர்கள், மேக்கப்-மேன், இப்படிப் பலரும் தமிழ்நாட்டுக்கு வர வழி செய்தவரும் இவரே. இவரைச் சினி

"மாமியார்" படத்தில் மருமகளாகத் தோன்றி எஸ். வரலக்ஷ்மி தாங்க முடியாத கொடுமைகளுக்கு உள்ளாகிறார்போலிருக்கிறது.

மா உலகம் சாலிவாகனன் என்று அழைப்பதே மிகவும் பொருத்தமாகும். அந்தக் காலத்தில் சாலிவாகனன் மண்பொம்மைகளை வைத்து. உயிர் கொடுத்து, போர் தொடுத்தான். சுப்ரமண்யமோ, திறமையற்றவர்களாயினும் சரி, அவர்களைப் சினிமா உலகில் பிரகாசிககச் செய்யும் ஆற்றலைப் பெற்றிருக்கிறார்.

பல பேர்களை இத் துறைக்கு இழுத்த

இந்த மனிதரைப் பட உலகுக்கு இழுத்தவர் 'பட உலக ஜாம்பவான்' என்று அழைக்கப்பட வேண்டிய டைரெக்டர் ஆர். பத்மநாபன் ஆவார். 1929ம் வருஷம் அஸோஸியேட்டட் பில்ம்ஸ் லிமிடெட் என்ற படக் கம்பெனியை சென்னையில் ஆரம்பித்தார் டைரெக்டர் ஆர். பத்மநாபன். அதில், காலஞ்சென்ற டைரெக்டர் ராஜா சாண்டோவும் இருந்தார். அங்குதான் பத்மநாபன் முயற்சியால் கே. சுப்ரமண்யம் பி. ஏ., பி. எல். ஐயாயிரம் ரூபாய் மூலதனம் போட்டு ஒரு பாகஸ்தராகச் சேர்ந்தார்.

1904ம் வருஷம் ஏப்ரல் மாதம் இருபதாம் தேதி பிறந்தவர் சுப்ரமண்யம். கும்பகோணத்தில் பிரபல வக்கீலாக இருந்த ஸி. எஸ். கிருஷ்ணசாமி அய்யர் இவரது தந்தை. சுப்ரமண்யமும் வக்கீல் படிப்புப் படித்து 1928ம் வருஷம் கும்பகோணத்திலேயே வக்கீல் போர்டையும் மாட்டினார்.

பள்ளிக்கூட நாட்களிலிருந்தே சுப்ரமண்யம் ஒரு பொதுஜன ஊழியராக இருந்து வந்திருக்கிறார். அவரது தந்தை, "நீ எங்கேடா படித்து உருப்படப் போகிறாய்; சமையல் காரனாகத்தான் போகப் போகிறாய்"—என்று கடிந்து கொள்ளும் அளவுக்கு பொதுக் காரியங்களில் ஈடுபட்டு வேலை செய்து வந்திருக்கிறார். கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே லண்டன் பத்திரிகைகள் சிலவற்றிற்கு "கேபெஸ்" என்ற புனை பெயரில் சிறுகதைகள் எழுதியிருக்கிறார் சுப்ரமண்யம்.

1929ம் வருஷம் வக்கீல் தொழிலுக்கு முழுக்குப் போட்டுவிட்டு அஸோஸியேட்டட் பில்ம்ஸில் பாகஸ்தராகச் சேர்ந்து, அந்தக் கம்பெனி தயாரித்த நான்கு மௌனப் படங்களுக்கும் கதை எழுதிக் கொடுத்தார். அவர் முதன் முதல் இத்தொழி

வில் பிரவேசித்தது கதாசிரியர் என்ற முறையில்தான். அவர்கள் தயாரித்த நான்குபடங்களில் ஒன்று "ராஜேஸ்வரி". இது "நல்லதங்காள்" கதை. ராஜா சாண்டோ டைரெக்ட் செய்த இப் படத்தில் டி. பி. ராஜலக்ஷ்மி பிரதம பாகத்தில் நடித்தார். அந்த சமயம் பேசும் படங்கள் வர ஆரம்பிக்கவே நஷ்டம் ஏற்பட்டு இக் கம்பெனியை மூட வேண்டியதாகி விட்டது. அதன் பிறகு சுப்ரமண்யம் மீண்டும் கும்பகோணம் திரும்பி, வக்கீல் போர்டைத் தேடிப் பிடித்து துடைத்து மாட்டினர். மேற் கூறிய நான்கு மௌனப் படங்கள் தயாரான சமயம் சுப்ரமண்யம் பரோட்கர் என்பவரிடம் 'எடிட்டிங்' வேலையைக் கற்றுக் கொண்டார்.

1932ம் வருஷம் அவர் மீண்டும் படத் தொழிலுக்குத் திரும்பவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. அந்தச் சமயம் நாடக மேடையில் பிரபலமாக இருந்து வந்த எஸ், டி. சுப்புலக்ஷ்மி—எம். கே. தியாகராஜ பாகவதர் ஜோடியைக் கொண்டு "பவளக்கொடி" பேசும் படத்தை டைரெக்ட் செய்து தயாரித்து முடித்தார். அந்தப் படம் முடிய அவருக்குக் கிடைத்த சம்பளம் எழுநூற்று ஐம்பது ரூபாய்தான்! இதுவே அவர் டைரெக்ட் செய்த முதல் படம். இதன் பிறகுதான், முருகன் டாக்கீஸாரின் "நவீன சாரங்கதரா"வை டைரெக்ட் செய்தார். அந்தக் காலத்தில் பிரமாதமான வசூல் பெற்ற சில படங்களில் இதுவும் ஒன்று.

"மதருஸ் யுனைடெட் ஆர்ட்டிஸ்ட்ஸ்" என்ற படக் கம்பெனியை சொந்தத்தில்—நடிகை எஸ்.டி.சுப்புலக்ஷ்மியை பாகஸ்தராகச் சேர்த்துக் கொண்டு—1935ம் வருஷம் செப்டம்பர் மாதம் 13ம் தேதி ஆரம்பித்தார். அந்தக் கம்பெனியின் தயாரிப்பாகப் பல சிறந்த படங்கள் வெளிவந்தன. "கௌசல்யா பரிணயத்தை"த் தவிர மற்ற படங்கள் யாவுமே சிறப்பாக இருந்தனவென்று சொல்லலாம். பல வருஷங்களுக்குப் பின், டெக்னிக் அம்சம் எவ்வளவோ தூரம் முன்னேறிவிட்ட இப்பொழுது பார்த்தாலும் 'நல்ல படம்' என்று பாராட்டக் கூடியவைகள் அவர் தயாரித்த "பக்த குசே



இனம்! இனம்!! இனம்!!!

எமது நெ. 501 கருப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லா விதமான மயிரும் மைக் கருப்பாகமாறி, பின்னர் எப்பொழுதுமே கருப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும் பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது. புட்டி ஒன்றின் விலை ரூ. 1—15—0;

3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 5—0—0.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்ட்வாட்சும், நியூகோல்டு மோதிரமும் அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்:

AMRIT PHARMACY (G. M.) JULLUNDUR CITY.

லர்'', ''பால யோகினி'', ''கச்ச தேவயானி'' ஆகிய மூன்றும் அவரது படத் தயாரிப்புகளில் குறிப்பிடத் தக்கவை.

புராணப் பட போதையிலேயே மக்களின் மனம் லயித்துப் போயிருந்த அந்தக் காலத்தில், அநேகமாக சிறு குழந்தைகளைக் கொண்டே ''பாலயோகினி'' சமூகப் படத்தைத் தயாரிக்கும் துணிவு அவருக்கு இருந்திருக்கிறது. ஒரு புரட்சியை ஏற்படுத்திய ''தியாக பூமி''யையும் அவர்தான் டைரெக்ட் செய்து தயாரித்தார். உண்மையை மறைக்காது கூற விரும்புகிறேன்; அந்தக் காலத்தில் அவரது டைரெக்ஷனில் தயாரான படங்களில் இருந்த ஒரு விறுவிறுப்பு, கவர்ச்சி, முதலியவை அவரது பிந்திய படங்களில் இல்லவே யில்லை. அவர் தயாரித்த ''பிரஹலாதா'' மலையாளப் படத்தைப் பலர் பார்த்திருக்க மாட்டார்கள். பதிமூவாயிரம் அடிகளுக்குள் சிறந்த முறையில் அப் படத்தைத் தயாரித்திருந்தார். அவர் செய்த ஒரு பெரும் தவறு தமது படங்கள் ஒன்றில்—'' அனந்தசயன''த்தில்—அவர் நடித்ததாகும்.

முதன் முதல் செய்திப் படம் தயாரித்தவரும் சுப்ரமண்யம்தான். 1941ம் வருஷம் ''தென்னிந்தியாவின் மாயாஜால வேலை'' ('மாஜிக் ஆப் தி ஸவுத்') என்ற தலைப்பில் நான்கு விறுவிறுப்பான செய்திப் படங்களை அவர் தயாரித்தார். செய்திப் படங்கள் என்றால் குள்கொட்டி வெறுப்பைக் கக்கும் சில ரஸிகர்கள் கூட இச் செய்திப் படங்களைப் பார்த்திருந்தால்—அம்மாதிரி செய்திப் படங்களை மட்டுமே பார்க்க விரும்புவார்கள். அவ்வளவு நேர்த்தியாகத் தயாரித்திருந்தார் அப்படங்களை. அந்த நான்கு படங்களையும் அவர் திருவாங்கூர் சமஸ்தானத்துக்கே விற்று விட்டார்.

சென்னையில், பல படாதிபதிகளை ஒன்றுகச் சேர்த்து ''மோஷன் பிக்சர் கம்பைன்ஸ்'' என்ற ஸ்டுடியோவை நல்ல முறையில் ஆரம்பித்தார். ஸ்டுடியோவுக்கென வட இந்தியாவிலிருந்து பல முதல்தர டெக்னீஷியன்களை வரவழைத்தார். ஆனால் கூடச் சேர்ந்த சிலரது ஒத்துழைப்பு சரியானபடி கிடைக்காமற் போகவே, அது திவாலாகிவிட்டது. அது தான் — அந்த இடத்தில்தான்—இன்று ஜெமினி ஸ்டுடியோ இயங்கி வருகிறது.

சுப்ரமண்யத்தை ஒரு பட டைரெக்டர் என்று அழைப்பதைவிட ''படஉலக சர்வ வியாபி'' என்று குறிப்பிடுவதே சிலாக்கியமா யிருக்கும். படஉலகில் எந்த விசேஷம் நடந்தாலும் அது சுப்ரமண்யத்துக்குத் தெரியாமல் இருக்க முடியாது. யாருக்கு என்ன இடைஞ்சல் வந்தாலும் சரி, உடனே அவர்கள் கே. சுப்ரமண்யத்தைத்தான் தேடிப்போவார்கள். படத் தொழிலுக்கு ஹானி விளைவிக்கக் கூடிய காரியம் எது நடந்தாலும் சரி, உடனே அதை நீக்கிவிடக் கச்சம் கட்டிக் கொண்டு கிளம்புகிறவர் அவர். தொழிலுக்கு பாதகமான சட்டம் எதையாவது சர்க்கார் கொண்டு வரும்போது தூது கோஷ்டி ஒன்றைச் சேர்த்துக் கொண்டு சம்பந்தப்பட்ட மந்திரியைக் கண்டு வாதாடி, ஓரளவாவது வெற்றி பெற்றுத்தான் திரும்புவார். நாடகத்தின் மீதுள்ள தமாஷா வரி நீக்கப்பட்டதற்கும், டூரிங் சினிமாக் கொட்டகைகளுக்கு லைசென்ஸ் வழங்கப்படுவதற்கான விதிகளை சென்னை சர்க்கார் ஓரளவு தளர்த்தியதற்கும் சுப்ரமண்



வி. ஆர். ராஜகுமாரி கோஷ்டியினர் ஆடும் இந்த நடனம் லிபர்டி பிக்சர்ஸாரின் ''மதன மோகினி''யில் வருகிறது.



அநேகமாக முடிவடைந்துவிட்ட, அவர் இந்தியா பிலிம்ஸாரின் ''என் வீடு'' தமிழ்ப் படத்தில் நாகய்யா, டி. ஆர். ராஜகுமாரி முதலியோர் தோன்றும் இக் காட்சியைக் காணலாம்.

யம் பெருமளவு காரணமாக இருந்திருக்கிறார்.

'திருஷ்டிபோதனை முறை'யைப் பற்றி தீவிரமாக எடுத்து விளக்கினார். திருவாங்கூர் சமஸ்தானத்தில் அதை ஆரம்பித்து வைத்து, கௌரவ ஆலோசகராகவும் இருந்தார். இந்திய சர்க்காருக்கு "பனை மரம்" என்ற டாக்குமென்டரிபடத்தைத் தயாரித்துக் கொடுத்திருக்கிறார். 1949ம் வருஷம், 'இந்திய டாக்குமென்டரி பட விழா' ஒன்றை சென்னையில் வெற்றிகரமாக நடத்தி வைத்தார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் செய்திப் பட ஸ்தாபனத்தின் கன்ட்ரோலராக இருந்து சில அரிய படங்களை அவர் எடுத்துக் கொடுத்திருக்கிறார்.

பட உலகிலுள்ள பலரிடையேயும் ஒற்றுமை நிலவவேண்டும் என்ற நல்ல எண்ணத்தை மனதில் கொண்டு, தென்னிந்திய பிலிம் சேம்பர் ஸ்தாபனத்தை அவர்தான் ஆரம்பித்தார். ஐந்து ஆண்டுகள் அதன் தலைவராகவும் இருந்து, அந்தக் காலத்தில் படத் தொழிலின் முன்னேற்றத்துக்கு எவ்வளவோ பாடுபட்டிருக்கிறார். ஒவ்வொரு துறையிலுள்ளவர்களுக்கும் ஒரு சங்கம் அவசியம் என்பதை வற்புறுத்தி, அவைகளை ஆரம்பித்துக் கொடுத்தும், ஆதரவு அளித்தும், உதவி யிருக்கிறார். காங்கிரஸ் கண்காட்சி சாலையில் கலைப் பகுதியை திறமையுடன் நடத்திக் காட்டியிருக்கிறார்.

நாடகக் கழகம், அகில இந்திய நடனக் கழகம், நாதஸ்வர வித்வான்கள் கழகம், டூரிங் சினிமாக்காரர்கள் சங்கம், ஸ்டுடியோ சொந்தக்காரர்கள் சங்கம், தென்னிந்திய நடிகர்கள் சங்கம்—இப்படி பல சங்கங்களையும் தோற்றுவித்த பெருமை சுப்ரமண்யத்தையே சேர வேண்டும். இன்றுகூட இச்சங்கங்களிலுள்ளவர்கள் அவரது ஆலோசனையைக் கேட்காது எதுவும் செய்வது கிடையாது. அவரும் தமது ஏராளமான வேலைகளுக்கு நடுவே சிறிதும் முகம் சுளிக்காது அவரவர்களுக்கு யோசனையும், புத்திமதிகளையும் கூறத் தயங்குவதே இல்லை.

சுப்ரமண்யம் அவர்களை எனக்கு கடந்த பதினைந்து ஆண்டுகளாகத் தெரியும்.

மதராஸ் யுனைட்டெட் ஆர்ட்டிஸ்ட்ஸ் கார்ப்பொரேஷன் கம்பெனியை அவர் நடத்தி வந்த சமயம் நான் போயிருக்கிறேன். கம்பெனி ஒரு தனிச் சோபையுடன், திருவிழா பட்டபாடு படும். ஒரே கலகலப்பாக இருக்கும். அதன் பிறகு, அந்த மாதிரியான ஒரு சூழ்நிலையை நான் அவரிடம் காண முடியவே யில்லை. மீண்டும் அந்த மாதிரியான உச்ச நிலையை அவர் அடைய வேண்டுமென்பதே என் விருப்பம் — அதுவே என் பிரார்த்தனை. "ஸார் ஸார்!" என்று அழைத்தபடி அவரைச் சுற்றி சதா ஒரு கூட்டம் இருந்து கொண்டே இருக்கும்.

தமிழ்ப் படத் தொழிலில் சம்பந்தப்பட்ட படே படே ஆசாமிகளுக்கெல்லாம் ஒன்று கூற விரும்புகிறேன்: சென்ற இருபது வருஷங்களாக சுப்ரமண்யம் தம் சொந்த நலன்களைக் கூடப் புறக்கணித்துவிட்டு, தமிழ்ப் பட உலகிற்கு பல அரிய சேவைகளைச் செய்து பக்கபலமாக இருந்து வந்திருக்கிறார். எதிர் காலத்திலும் சுப்ரமண்யத்தின் சேவை நம் படத் தொழிலுக்கு இன்றியமையாதது. அவர் அமெரிக்கா, ரஷ்யா போன்ற பல நாட்டுப் படத் தொழிலையும் ஆராய்ந்து வந்தவர். அனுபவத்துடன் கூட விஷய ஞானமும் பெற்ற அவரது சேவையைப் பயன்படுத்திக் கொள்ள நாம் தவறிவிடக் கூடாது—என்பதே.

ஹாலிவுட்டில், படத் தயாரிப்பாளர்களின் நலன்களுக்காக போராடுவதற்கென 'மோஷன் பிக்சர் அஸோஸியேஷன் ஆப் அமெரிக்கா' என்ற ஸ்தாபனம் ஒன்று இருக்கிறது. அதில் பல தயாரிப்பாளர்கள் அங்கத்தினர்களாகச் சேர்ந்து தங்களது நலன்களுக்குப் பாடுபடவென ஒரு பிரமுகரை அமர்த்திக் கொண்டிருக்கிறார்கள். அது மாதிரி ஒரு சங்கத்தை இங்கு ஆரம்பித்து, அதன் தலைவராக சுப்ரமண்யத்தை வைத்துக் கொண்டால் நமது படத் தொழிலின் முன்னேற்றத்துக்கு அது மிக உதவியாயிருக்கும்.

சினிமாத் தொழிலிலிருந்து வரி மூலமாக ஏராளமான வருமானம் பெறும் நமது சர்க்கார், சினிமாத் தொழிலின் விஷயங்களை கவனிக்க ஒரு ஆலோசகராக அவரைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் சினிமா பற்றி நம் சர்க்கார் போக்குதான் நமக்குத் தெரியுமே. ஆகவே படத் தொழிலைச் சேர்ந்தவர்கள் தான் அவரது சேவையைப் பயன்படுத்திக் கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும்.

காம சாஸ்திரம்

★

உலகத்தில் மிக்க அத்தியாவசியமான ஆண்-பெண் சேர்க்கையைப் பற்றிய 84 ஆசனங்களை உடைய, ரகசியக் குறிப்புகளுடன் கூடிய மிகவும் உயர்ந்த புத்தகம். 84 ஆசனங்களின் 200 வகை நிஜ போட்டோப் படங்கள்; தனித்தும், சேர்ந்தும் பல்வகை முறையில் போகம் துய்ப்பதுமானவை. இப்புத்தகம் நீங்கள் இதுவரை அறிந்திராத பல ரகசியங்களையெல்லாம் வெளிப்படுத்துகிறது. கல்யாணம் ஆகாதவர்கள் இப்புத்தகத்திற்கு எழுதற்க. 1 புத்தகம் விலை ரூ. 2-12-0. ரகசிய போட்டோ பலவகை தோற்றத்தில் கிடைக்கும். 25 கார்டுகள் தனித்திருப்பது ரூ. 2-12-0. ஐம்பது கார்டுகள் சேர்ந்திருப்பது விலை ரூ. 5-0-0. ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

விலாசம் :

M/S FRENCH PHOTO SUPPLY COMPANY (G. M.),
JULLUNDUR CITY.

கலையும் கழகங்களும்

"புரட்சிப் பித்தன்"

மனிதன் தோன்றிய காலந் தொட்டு ஒரே விதமான வாழ்க்கை நடத்தி வந்ததில்லை; காலத்தை யொட்டி அவன் வாழ்வில் பற்பல மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன; நிகழ்கின்றன; இனியும் தொடரும். மாறுதலை விரும்பாத மனிதன் மானிலத்தில் இருக்க முடியாது; மாற மறுப்பவன் காலப் போக்கிலே மறைந்து விடுகிறான். முட் புதர்களிலும், குகைகளிலும், வனங்களிலும் கண்டதை—கிடைத்ததை உண்டு, விலங்கென வாழ்ந்த நாளிலிருந்து—அறிவின் வளர்ச்சியால்—ஆராய்ச்சியின் விளைவால் விஞ்ஞான அறிவின் துணை கொண்டு, அணுகுண்டு கண்டு, அகில உலகையும் பெரும் பீதிக்கு உள்ளாக்கிக் கொண்டிருக்கும் இன்று வரை எண்ணிலடங்காதபடி—ஏடுகளிலே குறிப்பிட இயலா வண்ணம் எத்துணையோ பெரிய எதிர்பாரா மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

வாழும் முறையை எளிதாக்கி, வசதிகளை அதிகரித்து, தன் வாழ்வை இன்பமாக்கிக் கொள்ள மனிதன் கண்ட மாபெரும் சாதனங்களில் "சினிமா" குறிப்பிடத் தக்க பெருமை வாய்ந்தது.

சமீப காலம் வரை கேளிக்கை சாதனமாகவும், பொழுது போக்குக்காகவும் பயன் பட்டு வந்த சினிமா, தற்போது ஒரு சிறந்த அறிவுப் பிரசாரக் கருவியாகத் திகழ்கிறது. ஒரு காலத்திலே சினிமா என்றாலே சிறி விழுந்தனர் சீமான்களும், பெரிய மனிதர்களும், பிரமுகர்கள் எனப்படுவோரும். ஆனால் எந்த கனவான்களால் இழிவாகக் கருதப் பட்டதோ, யாரால் "கூலிக்கு மாரடிப்பவர்கள்", "கூத்தாடிகள்" என நடிகர்கள் ஏளனப் படுத்தப் பட்டார்களோ, அவர்களே இன்று பொது மேடை யேறி, 'கலைஞர்கள்' என்றும், 'சமுதாயத்தை உருவாக்கும் சிந்தனைச் சிற்பிகள்' என்றும் நடிகர்களை அடை மொழிகளால் போற்றிப் புகழத் தலைப்பட்டுள்ளனர். தூற்றல் மொழிகளைத் தாங்கியவர்கள் போற்றப் பட்டு பாராட்டுரைகள் பெறுகின்றனர்; பரிசளிக்கப் படுகின்றனர்.

கலையின் உதவியால்—திரைப் படங்கள், நாடகங்கள், இசைக் கச்சேரிகள் இவற்றின் மூலம் வேறெந்த வழிகளாலும் (சாதனங்களாலும்) சாதிக்க முடியாததை மிகத் துரிதமாகவும், பன்மடங்கு பலன் தரத்தக்க வகையிலும் செய்து முடிக்கலாம்.

நாட்டின் தலை சிறந்த எழுத்தாளர்களும், பேச்சுத் திறனுள்ள பேரறிஞர்களும்—மேடைப் பிரசாரங்கள்—பத்திரிகைகள் மூலம் செய்யும் பணியை விட, மனிதன் 'மனிதனா'க வாழ வழி வகுக்கும் சிறந்த கருத்துக்களும், சீரிய நோக்கங்களும், நீதிகள் அடங்கிய கதையைக் கொண்டு தயாரிக்கப் பட்ட படங்களும், நாடகங்களும் மிக எளிதில்—ஆனால் வன்மையாக அறிவொளியைப் பரப்பி பகுத்தறிவுப் பணியை வளர்க்கும். சுய முயற்சியும், சொந்த சிந்தனையும், தன்னம்பிக்கையும் இல்லாத—அறியாமை இருளில் உழலும் பாமர மக்கள் நிறைந்த சமுதாயத்தை மாற்றி யமைக்க 'தனிப்பட்ட' மனிதன் முயற்சிக்கும் போது அதற்குக் காலமும், சக்தியும் அதிக அளவு தேவைப் படுகின்றன. ஆனால் அந்தத் தனி மனிதனின் கருத்துக்கள் சுவை மிக்க சம்பவங்களால் இணைக்கப்பட்டு, கருத்துச் செறிவுள்ள பாடல்களுடன், திறமை மிக்க நடிப்புடன் இதயத்தைத் தொடும் இனிமை நிறைந்த இசையமைப்புடன், திரைப் படமாகத் திகழும் போது அல்லது நாடகமாக உருவாக்கப் படும் போது, அது அளிக்கும் பலன் உண்மை

[தொடர்ச்சி 50-ம் பக்கத்தில்]

மதராஸ் பிக்சர்ஸ்
அளிக்கும்
பணம்

என். எஸ். கிருஷ்ணன் டைரெக்ஷனில் தயாராகும் ''பணம்'' தமிழ்ப்படத்தில் டி. கே. ராமச்சந்திரன், வி. கே. ராமசாமி, கணேசன், பத்மினி, டி. ஏ. மதுரம் ஆகியோர் நடிக்கின்றனர்.



பரணி பிக்சர்ஸின் ''சண்டிராணி'' படத்தின் ஷூட்டிங்கின்போது எடுக்கப்பட்ட படம் இது. படத்தில் பானுமதியைக் காணலாம்.

யிலேயே மிக்க வியக்கத் தக்கபடி அமையும். இத்தகைய பலம் பொருந்திய இலட்சியங்களிலே எழுந்த திரைப்படம் ஒரே நேரத்தில் நாட்டின் எல்லா பாகங்களிலும் வெளியிடப் படும் போது இலட்சக் கணக்கான மக்களிடையே அந்தக் கதாசிரியரின் கருத்துக்கள் இடம் பெறுகின்றன. மக்கள் மீண்டும் மீண்டும் இப் படத்தைப் பார்க்கும்போதும், படத்தின் பாடல்களைக் கேட்கும்போதும் அவருடைய இலட்சியங்கள் (கருத்துகள்) தானாகவே ஆழப் புதிந்து மக்களிடையே வலுப்பெறுகின்றன. எனவே, மனிதன் சிந்திக்க ஆரம்பிக்கிறான் அதைப் பற்றி; ஆகவே சிந்திக்கும் ஆற்றலை வளர்த்திருக்கிறது சினிமா. ஆனாலும், தற்போது தயாரிக்கப்படும் திரைப் படங்கள் எல்லாம், சில தவிர, இக் குறிக்கோளைக் கொண்டவை எனக் கூறுவதற்கில்லை. இன்றைய 'சினிமா' கலையாக இல்லை. வர்த்தகப் பொருளாக—வாணிபக் கருவியாக உலகிலுள்ள பிற 'தொழில்க'ளைப் போல பணம் பறிக்கும் சாதனமாகத்தான் பயன்படுத்தப்படுகிறது.

ஆம்; இன்றைய சூழ்நிலையில் அரசாங்கம் முன் வந்து சிரத்தை யெடுத்து உதவினலொழிய இன்னும் பல ஆண்டுகளுக்கு—நம் நாட்டைப் பொறுத்த வரையில் சினிமாக் கலை வர்த்தகக் கருவியாகவேதான் இருக்கும்!

இந் நிலை மாற—மாற்றப் படுவதற்கு மக்கள் (ரஸிகர்கள்) தங்கள் ஒத்துழைப்பையும் ஆதரவையும் தந்து உழைக்க முன்வரவேண்டும். இன்றைய சினிமாவுலகில் உழைப்பின் பெருமையை உணர்த்தி, மக்களிடையே அறிவு, ஆராய்ச்சி, சிந்தனையின் சிறப்பு—இவற்றை எடுத்தியம்பி—நலிந்த வாழ்வில் நல்லதொரு மறுமலர்ச்சி காண உதவும் ''இலட்சியப் படங்களை''த் தயாரிக்க முற்படுபவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. இங்ஙனம் சமுதாய முன்னேற்றம் கருதி திரைமூலம் பணி புரியும் குறைந்த எண்ணிக்கையுள்ள கலைஞர்களின் தொகையை விரிவு படுத்த ரஸிகர்கள் கலைஞர்களைப் பாராட்ட வேண்டும்; பாராட்டக் கடமைப் பட்டவர்கள். கலைஞர்கள் தங்கள் பணியைத் தொடர்ந்து நடத்த அவர்களுக்கு உற்சாகமூட்டி ஊக்கமளிப்பதுடன், அவர்களுடன் ஒத்துழைத்து 'சினிமா' மூலம் பிற நாடுகளிடையே நம் நாட்டின் பெருமையை—கலாச்சாரத்தை—பாரதப் பண்பாட்டை—வீரத்தை நிலைநாட்ட வேண்டும். ரஸிகர்கள் அளிக்கும் பாராட்டுகள் மூலம்தான் கலை செழித்து வளர முடியும். ஆனால் அதே சமயத்தில் ரஸிகர்கள், பயனற்ற கதைகள் படமாக்கப் படும் போது அவற்றை பகிஷ்கரிக்கவும் தயங்கக் கூடாது. நமது ரஸனைக்குத் தகுந்தவாறு தான் படங்கள் தயாரிக்கப் பட வேண்டுமே தவிர, தயாரிப்பாளர்கள் அளிக்கும் படங்களுக்கேற்ப நமது கலா ரஸனையை மாற்றிக் கொள்ளக் கூடாது. இவை யனைத்தும் நடைபெற ரஸிகர்கள் தனித்து நின்று எதுவும் சாதிக்க இயலாது. கலையை அபிமானிக்கும் ரஸிகர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு கழகம்—ஊருக்கு ஒன்று நிறுவுவதின் மூலம் தான் உண்மையான—எதிர்பார்க்கும் பலனை அடைய முடியும்.

ஆகவே நாடெங்கும், நகர் தோறும் கலை ரஸிகர்கள் கழகங்களைத் தோற்றுவித்து, அதனை வலுப்படுத்தி கலைவளர்ச்சிக்கும், ரஸனை உயர்விற்கும் நாட்டின் பெருமைக்கும் பாடுபடுதல் இன்றியமையாதது!

பொதுஜனம் பேசுகிறார்

*ஏன் யோசிக்கவில்லை ?

ஆகஸ்டு மாத குண்டூசியில், 'புரட்சிப் பித்தன்' என்பவர் எழுதியிருக்கும் கடிதத்தைக் கண்டேன். அவர், ''தற்பொழுதெல்லாம் வெளிவரும் தமிழ்ப் படங்களில், பெண்கள் கல்லூரியில் படித்த பின்பு, இல்லறத்தை மேற்கொண்டு கணவனுக்கு அடங்கி நடக்காமலும், தங்கள் பெற்றோர், பெரியோர் முதலியவர்களது நல்லுரையைக் கேட்காமல் மாதர் சங்கத்தில் சேர்ந்தும், குடும்பத்தைக் கவனிக்காமல் தங்கள் இஷ்டப்படியெல்லாம் அலைந்து திரிந்தும் வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்வதாக''க் காட்டப்படுகிறதென்றும், இதனால் ரசிகர்கள் மனதில் தவறான எண்ணங்கள் ஏற்பட்டுவிடும் என்றும் குறை கூறியிருக்கிறார். ஆனால், நம் தமிழ் நாட்டில் கல்லூரியில் படிக்கும் பெண்கள் எல்லோரும் இப்படிக் கெட்டு சீரழிந்து விடுவதில்லை. ஒரு சிலர் அப்படித் தவறான வழியில் செல்லலாம்; சென்றும் இருக்கலாம். ஆனால் இதற்கெல்லாம் காரணம் சினிமாவில் வரும் அத்தகைய காட்சிகள் என்று சொல்லிவிட முடியாது. படங்களில் அத்தகைய காட்சிகள் காண்பித்தாலும் எவருக்கும் அடங்காமல் தான்தோன்றிகளாகத் திரியும் பெண்கள் இறுதியில் இன்பமடைவதில்லை. அவர்களது வாழ்வு சீரழிந்து மண்ணோடு மண்ணாவதைத் தான் காட்டுகிறார்கள். ஆகையால், இப்படிப்பட்ட படங்களைப் பார்க்கும் பேதைப் பெண்களது மனதில், தாங்கள் தீய வழியில் சென்றால் படத்தில் தோன்றியுள்ள பாத்திரம் அடைந்திருக்கும் கதியையே தாங்களும் அடைய நேரிடும் என்ற அச்சம் தோன்றி, பிறகு தவறான முறையில் செல்ல மாட்டார்கள். இப்படிப்பட்ட காட்சிகள் சினிமாவில் காட்டுவது ஜனங்களுக்கு ஒரு படிப்பினை என்று அவர் ஏன் யோசிக்கவில்லை !

இ. கே. ராஜலக்ஷ்மி, சென்னை.

படங்களில் திருட்டு

சில படங்களில், பிறரின் பொருள்களைத் தந்திரமாகக் கவர்ந்து செல்லுதலும், ஒருவன் ஜேபியில் இருக்கும் பர்ஸ் மற்றவன் ஜேபுக்கு மாறுவதுமான பல திருட்டுச் செயல்கள் காட்டபடுகின்றன. இந்தத் திரு(ட்டு)க் கைங்கரியம் உள்ள படங்களுக்கு உதாரணமாக "கிஸ்மத்'' "ஆவாரா'' முதலியவைகளைச் சொல்லலாம். அந்த ஜேப்படி வேலைகள் திரையில் தோன்றத் தொடங்கியதுமே ரஸிகர்களிடமிருந்து அலையோசை போன்ற ஆரவாரம் எழும்புகிறது. இதில் சிறுவர்களே பெரும்பாலும் பங்குகொள்கிறார்கள். அந்தக் காட்சிகள் அவர்கள் மனதில் ஆழமாக வேரூன்றி விடுகின்றன. அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகி, வறுமையின் கொடுமையினாலோ அல்லது வேலையின்றி அல்லல்படும்போதோ அந்தக் காட்சிகள் அவர்கள் மனதில் ஒருமுறை பளிச்சிடுகின்றன. "நாமும் அதுபோல் செய்தால் என்ன?'' என்று எண்ணுகிறார்கள். சிலர் எண்ணுவதோடு அதைக் காரியத்திலும் அமுல் நடத்த ஆரம்பித்து விடுகிறார்கள். இதனால் அவர்கள் போலீஸார் கையில் அகப்படுவதோடு அல்லாமல் அவர்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கே முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விடுகிறது. இது போன்ற காட்சிகளுள்ள படங்களை சிறுவர்கள் பார்க்கக் கூடாதென தடை செய்து, அதை நடைமுறையில் கொண்டு வர கடுமையாகச் சட்டம் இயற்ற வேண்டும். இல்லாவிடில் தணிக்கை போர்டா

* பரிசு பெற்ற கடிதம் எழுதியவர் : இ. கே. ராஜலக்ஷ்மி, சென்னை.

134137

"ஹரிதாஸி"ல் பேபியாக இருந்த ஹரிணி இப்பொழுது குமாரியாக மாறி, மைசூர் நவஜோதி ஸ்டுடியோவில் தயாராகி வரும் "ஜகன்மோஹினி" (தமிழ், தெலுங்கு, கன்னடப்) படங்களில் இப்படி அழகாக ஆடுகிருர்.

ராவது இந்த மாதிரிக் காட்சிகளில் தயங்காமல் கத்திரிக் கோலைப் பிரயோகித்து வெட்டித் தள்ள வேண்டும்.

எஸ். எம். ஏ. ஹுசன்,
அதிராம்பட்டினம்.

குரலெழுப்புக!

திரைப்பட இசைத் தட்டுக்களை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்து அறவே நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக வேறு பல நிகழ்ச்சிகளை இணைக்க அகில இந்திய வானொலி நிலையத்தார் முடிவு செய்துள்ளது என் போன்ற திரைப்பட இசைத்தட்டு ரசிகர்களுக்கு ஆழ்ந்த வருத்தத்தையும் அரசாங்கத்தின்மீது ஆத்திரத்தையும் உண்டாக்கி இருக்குமென்பதில் ஐயமில்லை. கேடான சூழ்நிலையை திரைப்பட இசைத் தட்டுக்கள் உண்டாக்குவதாக, வருடக் கணக்காக இசைத் தட்டுக்களை உபயோகித்த இவர்கள் இப்போது கண்டு பிடித்திருப்பது விந்தையாய் இருக்கிறது. கேடான சூழ்நிலையை உண்டாக்குவது எது என்பது அவர்களால் உணரப் படவில்லை. மேனாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் திரைப் படங்களைவிட, காமக் களஞ்சியங்களான ஆபாச நூல்களைவிட திரைப்பட இசைத்தட்டுக்கள் எந்த விதத்தில் கேடான சூழ்நிலையை உண்டாக்கிவிடும் என்று அவர்கள் அறியாதது ஏனே. மேலும், இவர்களால் நிறுத்தப்பட வேண்டிய மோசமான இசைத் தட்டுக்களுக்கு மூல காரணமானது திரைப்படம். ஆனல், அதிகாரமுள்ள இவர்கள் அதைச் செய்யாமல் இப்படி "இசைக்கொலை"யில் இறங்குவது ஏனே? எழுத்திலிருந்து, காட்சி அமைப்பு, வசனம், பாட்டு உட்பட அனைத்தையும் "சென்ஸார்" செய்து அவர்களால் அனுமதிக்கப் பட்டுள்ள பாட்டுக்கள் கேடான சூழ்நிலையை உருவாக்க உதவுகிறது என்ருல் சென்ஸார் போர்டை என்னென்பது! அநேகர் திரைப்பட இசைத் தட்டுகளுக்கென்றே ரேடியோ வாங்கியிருப்பவர்கள். அவர்கள் அதிருப்திக்கு ஆளாவதோடு, சோர்ந்த உள்ளத்தின் சோர்வை அகற்றி இனிமையான குரல் மூலம் இதயத்திற்கு இங்கிதமளிக்கும் திரைப்பட இசைத்

தட்டு நிகழ்ச்சிகளால் சிறிது நேரமாவது "ஆனந்தப் பொழுதை"க் கழிக்கும் என் போன்ற ரஸிகர்களின் வெறுப்பை சம்பாதிப்பதோடு, இசைக் கலையை வளர்க்க வேண்டிய இவர்கள் இசைக்குள் பேதம் பிரித்து அதைக் கொலை செய்ய முற்பட்டுள்ளது வருந்தத் தக்கதே. 'இந்திய சர்க்கார் தங்களது தீர்மானத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். இசை நிகழ்ச்சி இருக்க வேண்டு'மென்று ரஸிகர்கள் சர்க்காருக்கு தங்கள் முழக்கத்தைக் கடித மூலமாகத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மு. தருமன், மாகாளிப்பட்டி,

சினிமா சங்கீதம்

இந்திய சர்க்காரின் 'சினிமா சங்கீதம்' பற்றிய முடிவு அர்த்தமற்றது. அதற்கு பதில் வேறு சங்கீத நிகழ்ச்சிகளை ஏற்படுத்தப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். அதற்கான காரணங்களையும் வெளியிட்டிருக்கிறார்கள். அதாவது, சினிமா சங்கீதம் கேட்பதற்கு ஆபாசமாக இருக்கிறதாம். அவரவர்கள் ஆபீஸ் வேலைகளை முடித்துக்கொண்டு, களைப்புடன் வீட்டிற்கு வந்து, ரேடியோவைத் திருப்பினால், ஏதோ முகாரி ராகப் பாட்டுகள் இளம்பினால் அவர்களுக்கு ஆத்திரம் வராமல் இருக்குமா? அரசாங்கத்தார் கூறும் காரணமும் நம்ப முடியாததாய் இருக்கிறது. சினிமா சங்கீதம் மோசமாய் இருந்தால் அந்த சங்கீதம் உள்ள படத்தையே ஏன் சென்ஸார் போர்டு தடை செய்யக் கூடாது? மேலும் எல்லா சினிமா சங்கீதமும் மோசமாய் இருப்பதில்லை. ஆதலால் ரேடியோவிலிருந்து கிடைக்கும் சினிமா சங்கீதத்தை தயவுசெய்து அரசாங்கத்தார் நிறுத்திவிடாமல் இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஏ. வி. துரைசாமி, திருப்பூர்.

தவறாகுமா ?

ஜூன் மாத "குண்டூசி"யில், 'பொதுஜனம் பேசுகிறார்' பகுதியில் பரிசு பெற்ற கடிதத்தை எழுதியிருந்த சகோதரரைப் பாராட்டுகிறேன். அவர் கூறுவதுபோல பல்வேறு பகுதி மக்களின் நாகரீகத்தை எடுத்துக் காட்டும் படங்கள் நாட்டிற்குத் தேவை என்பதை யாருமே மறுக்க முடியாது. அதற்காக, மேல் அங்கியின்றி வசிக்கும், நாகரீகம் அடையா மக்களை அப்படியே படம்பிடித்துக் காட்டவேண்டும்; அதற்குப் போட்ட முதலைத் திரும்ப

அடைய எண்ணி ஆபாசமான போர்டுகளைத் தியேட்டர் வாயிலில் மாட்டவேண்டும்—என்ற அவசியம் இல்லையே! கரூர் நண்பர் அந்தப் படத்தின் விளம்பரப் போர்டை எங்கள் ஊரில் பார்க்காதது மிகவும் வருந்தத்தக்கது. 'பிளாட்டிங் பேப்பரை ஒத்த நம் நாட்டு மக்களுடைய நடை உடை பாவனைகளை உயர்த்தும் படங்கள்தான் இந்நாட்களில் மிக அவசியம். ஆபாச விளம்பரங்களைக் காட்டி மக்களை அழைக்கும் படங்கள் அல்ல. படத்தைப் பார்க்காது அதனைப் பற்றி அபிப்பிராயம் கூறுவது வருந்தக்கூடிய விஷயம்' என்கிறார் நண்பர். ஆனால், **தியேட்டரின் முகப்பிலேயே ஒழுக்கத்தைக் கெடுக்கும் விளம்பரப் பலகைகளைக்** கண்டு **ஒரு மாணவன்** ஓடிவந்தது வருத்தப்படக் கூடிய செய்தியா? அல்லது தவறான செய்கையா? 'மேல் நாடுகளைப் பின்பற்றும் நம் படமுதலாளிகள், (தியேட்டர் முதலாளிகளும்கூட) **ஆபாசமான விளம்பரங்களைக் காட்டி**, மக்கள் மனதைத் தீய வழிகளில் செலுத்தி, பணம் பறிக்க வேண்டாம். அப்படிப்பட்ட அருவருக்கத்தக்க முறைகளில் தமிழ் நடிகைகள் ஈடுபடக்கூடாது. இவைகளைக் குறிப்பிடவே ஏப்ரல் மாத குண்டூசியில் 'நடிகை அலங்காரம்!' என்ற கடிதம் எழுதப்பட்டதே தவிர, நண்பர் நினைப்பதுபோல் ஆங்கிலப் படத்தில் தப்பபிப்பிராயம் ஏற்படுத்துவதற்கு அல்ல!

ஆர். தங்கவேலன், திருச்சி.

சிறந்த சேவை!!

நம் தமிழ்ப் படங்களிலே சின்னஞ் சிறு பையன்களும், பெண்களும் நடிக்கும்படி செய்யப் படுகிறார்கள். அவர்கள் பேசும் பேச்சையும், நடிக்கும் நடிப்பையும், பாடும் பாட்டையும் பார்த்தால், நம் நாட்டுக் குழந்தைகள் பிறக்கும் போதே தவறான வழியில் அழைத்துச் செல்லப் பட்டவர்களோ என்ற சந்தேகம் நமக்கு ஏற்படுகிறது. சின்னஞ் சிறு குழந்தைகள் இப்படிப் பிஞ்சிலே பழுத்து விட்டால் என்ன ஆகும்! ஒரு சினிமாவிலே 'அண்ணிமேலே அண்ணு சொக்கி......சொக்கி......... ஒன்றும் ஒன்றும் சேர்ந்து இரண்டாச்சு.........இரண்டும் ஒன்றும் மூன்றாகும்... ...'' என்று ஒரு சிறுமி பாடுகிறாள். மற்றொரு சினிமாப் படத்தில் ஒரு சிறுவன் 'வீட்டிலே அம்மாவுக்கு எலுமிச்சம் பழம் தின்னு வாந்தி வருகிறது. எனக்கு வரவில்லை' என்று பேசுகிறான். மற்றொன்றில் 'உன் பெண்ணை நான் மேய்த்துக் கொள்ளுகிறேன்' என்று பிதற்றுகிறான். இன்னும் எத்தனை எத்தனையோ......

லிபர்ட்டி பிக்சர்ஸின் ''மதன மோஹினி'' தமிழ்ப் படத்தில் வி. ஆர். ராஜகுமாரியின் நடனம், நடிப்பு இரண்டையும் கண்டு களிப்படையலாமாம்.

இவையெல்லாம் பார்க்கும்போது இப்படித்தான் பிதற்றவேண்டும் என்று நம் சிறுவர்களிடையே ஒரு "பேஷன்" ஏற்பட்டாலும் ஆச்சர்யப் படுவதற்கில்லை. குழந்தைகள் குறும்புடையவர்கள் ஆனாலும், ஒழுக்கம் தவறிப் பேசக் கூடாது என்பதைப் பட முதலாளிகள் படமெடுத்து வற்புறுத்தினால் அதுவே பட முதலாளிகள் நாட்டுக்குச் செய்யும் சிறந்த சேவையாகும்.

"சந்திரா", சென்னை.

வேண்டுகிறேன் !

உணவுக கண்ட்ரோல் ரத்து, என். ஜி. ஓக்களில் குழந்தைகள் பள்ளிக்கூடச் சம்பளச் சலுகை முதலிய அரிய பெரிய செயல்களை சாதித்த ராஜாஜி, பல்லாயிரக் கணக்கான மக்களின் பொழுது போக்குச் சாதனமான சினிமா விஷயத்தில் மட்டும் பிடிவாதமாயிருப்பது ஏனோ தெரியவில்லை. "சினிமா பார்க்காதீர்கள்" என்று மக்களிடையே பிரசாரம் செய்து வருகிறார். ராஜாஜி அவர்களுக்கு சினிமாவில் பிடித்தமில்லாமலிருக்கலாம். அதற்காக மக்களையும் பார்க்க விடாது செய்தல் சரியல்ல. வீட்டில் படும் அல்லல்களை சிறிது மறந்து உல்லாசமாய் பொழுது போக்குவதற்கு இன்றியமையாதது சினிமா. இன்று மக்களில் தொண்ணூறு சத விகிதம் சினிமாப் பார்க்கிறார்கள். ஆகையினால், மக்களை சினிமாப் பார்க்காதே என்று தடுப்பது மிகவும் துர்லபம் என்பது ராஜாஜிக்குத் தெரியாததல்ல. படத் தொழிலில் எவ்வளவோ மக்கள் ஈடுபட்டு வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தவிர்த்து வருகின்றனர். இத் தொழில் அற்றுப் போனால் வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டில் மிகுதியாகப் பெருகும் என்பதில் ஐயமில்லை. ஆகையால், படத் தொழில் மீதுள்ள பிடிவாதத்தைத் தளர்த்தி அதன்மீதுள்ள அதிக வரிச் சுமையைக் குறைத்து, அத் தொழில் மேன்மேலும் வளர வழி செய்ய வேண்டுமாய் சர்க்காரை (குறிப்பாகப் பிரதம மந்திரியை) சினிமா அபிமானிகள் சார்பாக தலைகுனிந்து வேண்டுகிறோம்.

வி. நாகராஜன், மருதூர்.

சினிமா ஒழிக ! ஆனால் வேண்டும்?

சமீப காலமாக 'சினிமாப் பார்க்காதே' என்று ராஜாஜி பொதுக் கூட்டத்தில்

பொம்மைப் புலியல்ல; நிஜப் புலி தான். அதனுடன் சண்டை யிடுபவர் நம் 'சூராப்புலி' ரஞ்சன்தான்! அவர் நடித்து வரும் ஒரு ஹிந்திப் படத்திற்காக இச் சண்டைக் காட்சி தயாரிக்கப்பட்டது. அன்றைய தினம் சாயந்திரம் இதே சண்டையை ஹுப்ளி அருகிலுள்ள ''கடேயி'' என்ற ஊரில் அசல் சர்க்கஸ் கூடாரத்தில் ஐயாயிரம் மக்கள் முன் செய்துகாட்டினர்.

கூறி வருவது பட உலகப் பிரமுகர்களை ஒரு கலக்குக் கலக்கி யிருக்கிறதென்றே கூறவேண்டும். ஆளுக் கொருவராக ஆச்சாரியார் மீது சொற்போர் தொடுக்கக் கிளம்பி விட்டனர். ராஜாஜி அப்படிச் சொல்லி யிருக்கக் கூடாதுதான்! ஆதி காலத்தில் வெளிவந்த படங்களுள் அநேகமாக பெரும்பான்மையானவை நற்கருத்துக்கள் கொண்டதாகவே இருந்தன. ஆனால், சமீப காலத்தில் வெளிவந்த சில படங்களில் சீர்த்திருத்தம் என்ற பெயரால் மக்கள் மனதில் இனவெறியை கிளப்பக்கூடிய வசனங்கள் கையாளப் பட்டிருக்கின்றன. இவைகளைப் பார்வை யிடுகையில்—ராஜாஜி கூற்றை—சினிமா வேண்டாம் என்று கூறியதை—ஆதரிக்கத் தோன்றுகிறது. ஆனால் ''மல்லேஸ்வரி'' போன்ற கலையம்சம் பொருந்திய படங்களைப் பார்வை யிடுகையில் 'ராஜாஜி ஏன் ''மல்லேஸ்வரி'' போன்ற படங்களைப் பார்க்கவில்லை? பார்த்திருந்தால 'சினிமாப் பார்க்காதே' என்று கூறியிருக்க மாட்டார்' என்றுதான் தோன்றுகிறது.

சினிமாவினால்தான் மக்கள் கெடுகின்றனர் என்று கூறுவது முற்றிலும் உண்மையல்ல! அவ்விதம் சினிமாவினால்தான் மக்கள் கெடுகின்றனர் என்று வைத்துக் கொண்டாலும் அதற்கு முக்கிய காரணம் 'சென்ஸார் போர்டு' என்றுதான் நான் கூறுவேன். தணிக்கை போர்டாரின் விதிப் பிரகாரம் இன்று வெளிவரும் ஒவ்வொரு படமும் இருக்குமாகில் ராஜாஜி கூற்றை நாம் முழு மனதுடன் தைரியமாக எதிர்க்கலாம்.

ராஜாஜி 'சினிமாப் பார்க்காதே என்று பொதுக் கூட்டத்தில் பேசி நேரத்தை வீணாக்குவதை விட 'சென்ஸார் போர்டில்' பிறரின் உதவியை எதிர்பார்க்காத நபர்களை—அதிகாரபூர்வமாக நியமித்தால் தமிழ்ப் படங்கள் யாவராலும் ஒருங்கே போற்றப்படும் என்பது உறுதி.

'' கலாராஜன் '', மதுரை

புஸ்தகப் பொழுது

சென்னையிலுள்ள அமெரிக்க செய்தி ஸ்தாபனத்தாரின் முயற்சியில் சில அருமையான புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன. அமெரிக்க சர்க்கார் பற்றிப் பிரசாரம் செய்ய அந்தப் புத்தகங்கள் ஓரளவு உதவுகின்றன. என்றாலும், அதே சமயத்தில் ஒவ்வொரு புத்தகமும் விஷயம் பொதிந்ததாகவும், எளிய நடையிலும் இருக்கின்றன. நல்ல புத்தகங்களைப் பிரசுரித்து விட்டால் மட்டும் போதுமா? அவைகளைப் பலரும் வாங்கிப் படிக்க வேண்டும் என்ற கருத்தை மனதில் கொண்டு அவர்கள் வெளியிட்டுள்ள புத்தகங்கள் அனைத்தின் விலையையும் ஆச்சரியப் படும் அளவுக்குக் குறைவாக வைத்திருக்கிறார்கள். பன்னிரண்டு புத்தகங்கள் மதிப்புரைக்கு வந்துள்ளன. ஒரு புத்தகத்தின் அதிக விலை (320 பக்கங்கள் கொண்டது) பன்னிரண்டே அணாதான் என்றால் நம்ப முடியத்தான் முடியாது. ஆனால் அது உண்மை.

விவசாய முன்னேற்றம்

அமெரிக்காவில் விவசாயத் தொழில் எவ்வாறு அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்பதை விரிவாக விளக்குகிறது இப் புத்தகம். நம் நாட்டில் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள பலரும் படிக்கத் தகுந்த, படிக்க வேண்டிய புத்தகம் இது.

நீக்ரோ

அமெரிக்காவில் நீக்ரோ ஜாதியினர் வாழ்க்கை பற்றிய புத்தகம் இது. அங்கு நீக்ரோக்கள் 'அநீதியுடன் நடத்தப் படுகின்றனர், கொடுமைப் படுத்தப் படுகின்றனர் என்பதெல்லாம் பொய்' என்று கூறி அவர்களுக்கு அங்கு அளிக்கப்படும் சௌகரியங்களை விளக்குகிறது இந்தப் புத்தகம்.

அமெரிக்கா— சில உண்மைகள்

அமெரிக்கா பற்றிய சில விஷயங்கள் — அவர்கள் சொல்கிறபடி உண்மையானவை—இந்தப் புத்தகத்தில் கொடுக்கப் பட்டுள்ளன. அமெரிக்க மக்கள், அவர்களுடைய பொழுது போக்கு, கலை, அரசாங்கம் இப்படிப் பல விஷயங்களைப் பற்றியும் ரஸமான விஷயங்கள் இருக்கின்றன.

நான்காம் அம்சம்

1949ம் வருஷம் அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன் பிரகடனப்படுத்திய "நான்காம் அம்சம்" பற்றிய புத்தகம் இது. மக்கள் ஒருவருக் கொருவர் உதவி செய்து உயர்வு பெறும் திட்டமே நான்காம் அம்சத் திட்டம் என்பதை விளக்கி எழுதப் பட்டிருக்கிறது.

மேற்கூறிய நான்கு புத்தகங்களும் ஒவ்வொன்றும் விலை இரண்டணா.

மக்கள் ஆளும் ஆட்சி

அமெரிக்காவின் குடியரசாட்சியைப் பற்றியது இப் புத்தகம். அவர்களது குடியரசின் அடிப்படை, அரசியலமைப்பு, ஜனாதிபதி பதவி இப்படியாகப் பல விஷயங்களும் விளக்கப் பட்டுள்ளன. இப் புத்தகத்தின் விலை 4 அணா.

ரூஸ்வெல்ட்

காலஞ் சென்ற அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் பற்றிய ஒரு ஆராய்ச்சிப் புத்தகம் இது. அவரது வாழ்க்கை வரலாறு, அவரிடம் காணப்பட்ட குறைகள், அதற்கான காரணம், இப்படிப் பல விஷயங்களை ஆசிரியர் கொடுத்திருக்கிறார்.

துணிச்சலான புதிய திட்டம்

இதுவும் ட்ரூமன் வெளியிட்ட நாலாம் அம்ச திட்டம் பற்றிய ஒரு புத்தகம் தான். இதில் அந்த அம்சம் எவ்வாறு வெற்றிகரமாகக் கையாளப் பட்டு பயனளித்திருக்கிறது என்பது விவரிக்கப் பட்டிருக்கிறது.

எல்லோரும் ஓர் குலம்

காலஞ் சென்ற ஜனாதிபதி ரூஸ்வெல்டின் மனைவியார் எழுதியுள்ள புத்தகம் இது. திக்கற்ற சிறுவர்களுக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு, ஐ. நா. சபையின் பல்வேறு ஸ்தாபனங்கள் செய்து கொண்டிருக்கும் வேலைகள் இவைகள் பற்றி விவரித்திருக்கிறார்.

ஐக்கிய நாடுகள் இயங்கும் முறை

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் என்று அடிக்கடி நாம் படிக்கிறேம். அது எப்படி ஆரம்பமாயிற்று; எவ்வாறு இயங்கி வருகிறது; அதில் எந்தெந்த நாடுகள் அங்கம் வகிக்கின்றன என்றெல்லாம் விவரிக்கப் பட்டுள்ளது இப் புத்தகத்தில்.

வர்க்கமற்ற சமூகம்

அமெரிக்காவிலுள்ள முதலாளித்துவம் பற்றி விவரிக்கும் புத்தகம் இது. 1776ம் ஆண்டில் நடைபெற்ற அரசியல்—சமூகப் புரட்சி, அதனுல் ஏற்பட்ட பலாபலன்கள், தொழிற் சங்கம், நீக்ரோ பிரச்னை இப்படிப் பல விஷயங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

பாடுபட்டால் சமாதானம் கிட்டுவது உறுதி

அமெரிக்காவின் லட்சியம் சமாதானமே என்பது வலியுறுத்தப் படுகிறது இப் புத்தகத்தின் மூலம். சமாதானம் நிலவ, புரிய வேண்டிய பல காரியங்களும் விளக்கப்பட்டுள்ளன.

அமெரிக்கா

அமெரிக்காவைப் பற்றி பல விஷயங்களைக் கூறும் ஒரு கதம்பப் புத்தகம் இது. பிரமிப்படையும் பல விஷயங்களை நாம் அறிய முடிகிறது. பொதுவில் அமெரிக்கா பற்றி அறிய எளிய நடையில் எழுதப் பட்டுள்ள ஒரு புத்தகம் இதுவென குறிப்பிடலாம்.

மேற்கூறிய ஏழு புத்தகங்களும் ஒவ்வொன்றும் விலை பன்னிரண்டு அணுக்கள். எல்லாப் புத்தகங்களும் ஆங்கிலத்தி லிருந்து தமிழாக்கப் பட்டவை. படங்களுடன் கூட நேர்த்தியாகவும் கவர்ச்சிகரமாகவும் தயாரிக்கப் பட்டிருக்கின்றன.

மேற்கூறிய புத்தகங்கள் அனைத்தும் கிடைக்கும் இடம்:
ஹிக்கின்பாதம்ஸ், சென்னை—2.

ஜோதி (பூஜா மலர் '52)

(ஆசிரியர்: பி. என். தியாகராஜன்; விலை: ரூ. 1; கிடைக்குமிடம்: 351, அப்பர் சித்தூர் ரோடு, கல்கத்தா—6)

ஒரு ரூபாய் விலையில் படிக்க நிறைய விஷயங்களுடன் ஒரு மலரை வெளியிட்டிருக்கிறுர்கள். ஜகத் குரு, சுவாமி சிவானந்தா, இருவரும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியுள்ளனர். மாணிக்க வாசகர் காலத்தைப் பற்றிக் 'கவிமணி' ஒரு கட்டுரை எழுதியிருக்கிறுர். மற்றும் பல கவிதைகளும், கதைகளும், கட்டுரைகளும் இதில் இடம் பெற்றுள்ளன.

மறுமலர்ச்சி

வெள்ளி தோறும் வெளி வரும் அரசியல், சமுதாய வார வெளியீடு இது. தனிப் பிரதி விலை இரண்டரை அணு. திருச்சி, பாலக்கரையிலிருந்து வெளி வருகிறது இந்தப் பத்திரிகை.

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL / 688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். விலை ரூ. 8-8-0 சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) ரூ. 10-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவருது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்ப்ரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (த. செ. தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638. (R) MADRAS-1.
பிராஞ்ச்: 134 SERANGOON ROAD. சிங்கப்பூர்.
சிலோன் ஏஜண்ட் NEW COLOMBO MEDICAL STORES, 82. MAIN St.. கொழும்பு-11



அஞ்சலி தேவி

சமீபத்தில் வெளிவந்து ஓடிக் கொண்டிருக்கும் "ஏழை உழவன்" தமிழ்ப் படத்தில் இவ் விதம் காட்சியளிக்கிறார் குமாரி துளஸி.

அபர்ணாவின் அவதி

ஸி. ஆர். ராஜம்மா

சிறுகதை

அன்றையத் தம்முடைய முயற்சியும் பலன் அளிக்கவில்லை என்று கண்டு கொண்டபோது, டைரெக்டருக்கு அளவிட முடியாத வருத்தமும் கோபமும் உண்டாயின. "அபர்ணாதேவி! உங்களுக்குப் பலமுறையும் சொல்லியாகிவிட்டது. உங்களுடைய நடிப்பைப்பற்றி சினிமா அபிமானிகளின் புகழ்ச் சொற்கள் சதா எங்கும் கேட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், தாங்களோ இந்தப் படத்தில் வேண்டுமென்றேதான் இப்படிச் செய்கிறீர்கள் போலிருக்கிறது. நடிப்பு என்பது சிறிதளவேனும் உங்களிடம் காணப்படவில்லையே! புதிதாக வந்தவர்தான் ஸ்ரீதர்; அவர் எவ்வளவு இயற்கையாக நடிக்கிறார் பார்த்தீர்களா? இம்மாதிரி உங்களிடம் சொல்ல வருத்தமாகத்தான் இருக்கிறது. ஆனாலும் என்னசெய்ய? படம் வெற்றி பெற வேண்டாமா?" என்று ஆத்திரத்தோடு பேசத் துவக்கிய டைரெக்டர் கடைசியில் நிதானமாக, குழைவுடன் பேச்சை முடித்தார். அத்துடன் ஷூட்டிங்கையும் ஒத்திப் போட்டார்.

மேக்கப்புடன் 'ஸெட்'டில் நின்று கொண்டிருந்த அபர்ணாவுக்கு சொல்ல முடியாத வருத்தமும் அவமானமும் உண்டாயின. டைரெக்டருடைய ஒவ்வொரு பேச்சும் அவள் நெஞ்சை ஈட்டிகொண்டு குத்துவது போலிருந்தது. நொந்த புண்ணைக் கோல் கொண்டு கிளறுவது போல் வேதனையடைந்திருந்த அவளுடைய உள்ளத்தை டைரெக்டர் இன்னும் அதிகமான வேதனைக்குள்ளாக்கினார். எத்தனை படங்களில் நடித்து ரசிகர்களின் உள்ளங்களை ஆகர்ஷித்துக் கொண்டவள் அபர்ணா. நடிக்க அவளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டாம். தானாகவே அது அவளிடம் அமைந்திருந்தது. அப்படிப்பட்ட அபர்ணாவுக்கு இன்று சோதனை காலம் போலிருந்கிறது. "அந்தத் துரோகி ஸ்ரீதர் இந்த விஷயத்திலுமா குறுக்கே நிற்கவேண்டும்" என்று எண்ணித் தன்னுடைய அறைக்குச் சென்று உட்கார்ந்து கொண்ட அபர்ணாவின் சிந்தனை அடி நாட்களில் நடந்துபோன பல விஷயங்களுக்குத் தாவியது.

குப்பமேட்டுக் குப்பம்மாளாக இருந்து இன்று சினிமா நக்ஷத்திரமாகி அபர்ணா என்ற பெயருடன் ஜொலிக்கவில்லை அவள். பெற்றோர்கள் அருமையாக அவளுக்கு இட்டபெயரே அது அபர்ணாவை நன்றாகப் படிக்க வைக்கவேண்டுமென்றுதான் அவளுடைய பெற்றோர்கள் திட்டம் போட்டார்கள். அவர்களுக்கு இந்த விஷயத்தில் அளவுகடந்த ஆர்வமுண்டு. அவர்களுடைய அந்த எண்ணத்தை அபர்ணா மட்டுமல்ல, அவளுடைய தங்கை ஆனந்தியால் கூட நிறைவேற்றி வைக்கமுடியவில்லை. இரண்டு கண்களைப்போல இரண்டு பெண் குழந்தைகளைப் பெற்ற அவர்களுக்கு இது பெரும் குறையாகவே இருந்தது. ஆனால், அவர்கள் நினைக்காத இன்னொரு விஷயத்தில் அபர்ணாவின் புத்தி சென்று கொண்டிருந்தது. ஆடல் பாடல்களில் அவள் தன்னை மறந்து ஈடுபடத் தொடங்கினாள். தனக்கு நாட்டியம் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தாள். அவளுடைய இந்த ஆசையை விட்டுவிடும்படி தகப்பனார் கண்டித்தார். "நீ நாட்டியம் கற்றுக்கொண்டு எந்த மேடையில் போய் ஆடப்போகிறாய்? அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்" என்றார் அவர். தாயாருக்கும் அதில் இஷ்டமில்லை. என்றாலும், பெண்ணின் ஆசையைக் கெடுக்க விரும்பவில்லை அவள். "கொஞ்ச நாட்கள் கற்றுக்கொள்ளட்டும். அப்புறம் நிறுத்திக் கொண்டால் போகிறது" என்றாள் அவள். தந்தை அரை மனதுடன் சம்மதித்தார். ஏற்கெனவே தான் கற்றுக் கொண்டு வந்த சங்கீதத்துடன் கூட

"திருடன் கையில் அகப்பட்டிருந்தால்கூட சந்தோஷமே அடைவேன், ஸ்ரீதரே உன்னைக் காப்பாற்றட்டும். போ, வெளியே!" என்று அவளைப் பிடித்து வெளியே தள்ளினன்.

நாட்டியமும் கற்கத் துவங்கினுள் அபர்ணு.

ஆனந்தி, அபர்ணுவைவிட அழகில் கொஞ்சமும் குறைவானவள் என்று சொல்லிவிட முடியாது. அனுல் அபர்ணுவிடமுள்ள வசீகர சக்தி அவளிடம் கிடையாது என்பதை மட்டும் நிச்சியமாகச் சொல்லலாம். கணீரென்ற சிரிப்பு, கலகலப்பான பேச்சு, மின்வெட்டுப் பார்வை, இவைகள் ஒன்றையும் அவளிடம் காணமுடியாது. சதா சாந்தம் குடிகொண்டிருக்கும் அவள் முகத்தில். நடையுடை பாவனையும் அப்படித்தான். வீட்டு வேலைகளைப் பாங்காகச் செய்வதில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தாள் அவள்.

அபர்ணுவுக்கும், ஆனந்திக்கும் இரண்டு வயதுதான் வித்தியாசம். ஆகவே, இருவருக்கும் ஒன்ருகவே கல்யாணத்தைப் பண்ணி விடுவது என்று முயற்சி செய்தார்கள் பெற்ருேர்கள். அவர்களுக்கு இதில் அதிகக் கஷ்டம் ஒன்றும் இருக்கவில்லை. அபர்ணுவுக்குக் கல்யாணம் நிச்சயமாகி நான்கு நாளைக்கெல்லாம் ஆனந்தியைப் பெண் பார்க்க வந்தான் ஸ்ரீதர். அப்பொழுது ஏதோ வேலை நிமித்தம் குறுக்கும் நெடுக்குமாகப் போன அபர்ணுவை அவன் கவனித்தான். அவளுடைய அழகு அவனை மயங்க வைத்தது. அவளுக்குக் கல்யாணம் நிச்சயமாகா திருந்தால் அவளையே தான் மணந்துகொள்வதாகச் சொல்லியிருப்பான். அக்காவைப் போலத்தானே தங்கையும் இருக்கவேண்

டும் என்று எண்ணினான். அந்த எண்ண மயக்கத்தில் தன்னை வந்து நமஸ்காரம் செய்த ஆனந்தியை அவன் சரியாகக் கூடப் பார்க்கவில்லை.

விதி மிகவும் விசித்திரத்தைச் செய்ய வல்லது என்பதை கல்யாணமான சில நாட்களுக்கெல்லாம் புரிந்துகொண்டாள் அபர்ணா. அவளுடைய அழகுக்கேற்றவன்தான் சேகா. ஆனால், குணத்தில் இருவருக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம் இருந்தது. அபர்ணா யாரிடமும் கலகலபபாகப் பேசி சிரிபபது அவனுக்குப் பிடிக்காது. சேகர் அதிகமாக அவளை எங்குமே வெளியில் அனுப்ப மாட்டான். தானும் அழைத்துச் செல்ல மாட்டான். அப்படியே எங்கேயாவது சென்றாலும், அபர்ணா ஆடம்பரமாக அலங்காரம் செய்து கொள்ளக்கூடாது என்று கண்டித்து வைத்திருந்தான். அலங்காரப் பிரியையான அபர்ணாவுக்கு இதெல்லாம் மிகவும் கஷ்டமாக இருந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக அவன் விதித்திருந்த ஒரு கண்டிப்பு மிகவும் கொடியதாகத் தோன்றியது அவளுக்கு. 'தங்கை ஆனந்தியின் வீட்டுக்குப் போகக் கூடாது. அவர்களுடன் எவ்வித உறவும் வைத்துக்கொள்ளக் கூடாது' என்பதுதான் அது. அபர்ணாவும், ஆனந்தியும் ஒரே ஊரில் அடுத்தடுத்த தெருக்களில் தான் குடித்தனம் நடத்தி வந்தார்கள். அந்தஸ்திலும் இருவரும் சமதையானவர்கள்தான். அப்படியிருந்தும் அபர்ணாவை ஆனந்தியின் வீட்டுக்குப் போக அனுமதிக்கவில்லை சேகர்.

ஆனந்தியைப் பெண் பார்க்க வந்த ஸ்ரீதர், "அபர்ணாவுக்குக் கல்யாணம் நிச்சயமாகியிராவிட்டால் நான் அவளையே மணந்து கொள்வேன்" என்று தன் சிநேகிதனிடம் ரகஸியமாய் சொன்ன விஷயம் எப்படியோ அம்பலமாகி. பல பேர் காதிலும் விழுந்திருந்தது. சேகருக்கும் அது தெரிந்து போயிருந்தது. சாதாரணமாகவே சந்தேகப் பிரகிருதியான அவனுக்கு இந்த வார்த்தை இன்னும் அதிக வெறுப்பையும் சந்தேகத்தையும் உண்டாக்கியிருந்தது. அவனுடைய இந்த மனப்போக்கைக் கண்டுகொண்ட ஆனந்தி எப்பொழுதுதோ ஒரு தடவை வந்து சிறிது நேரம் தங்கிவிட்டுப்போய் விடுவாள். ஸ்ரீதர் அந்தப் பக்கம் எட்டிக் கூடப் பார்க்க மாட்டான். கட்டுப்பாடுகள் நிறைந்த இந்தத் தனிமையான வாழ்வு அபர்ணாவுக்கு வெறுத்துத்தான் போயிற்றென்றாலும், என்ன செய்வது!

ஆபீஸ் விஷயமாக வெளியூர் போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது சேகருக்கு. ஒரு வாரம் பொறுத்தான் திரும்புவான். 'அவரில்லாத இந்த சமயத்தை உபயோகப் படுத்திக் கொண்டு ஆனந்தியைப் போய்ப் பார்த்து வரலாமா என்று எண்ணினாள் அபர்ணா. ஆனால் அவளுக்கு அவ்வளவு துணிச்சலில்லை. ஒரு வாரம் வரை தனிமையில் எப்படிப் பொழுதைக் கழிப்பது என்பதே அவள் பெரும் கவலையாக இருந்தது. ஆனால், சேகர் புறப்பட்



டுப் போன நான்காம் நாளே அபர்ணு வுக்கு ஒரு கடிதம் அவன் எழுதி யிருந் தான். அதில் தான், வந்த ஊரில் திடீரென்று தனக்கு தேக அசௌகரியம் ஏற் பட்டதால்தான் உடனே புறப்பட்டு வரு வதாகவும், தன்னை ஸ்டேஷனுக்கு வந்து அழைத்துப் போக வேண்டும் என்றும் அவன் குறிப்பிட்டிருந்தான். அபர்ணு வுக்கு இப்பொழுது பழைய கவலைபோய் புதிதாக ஒன்று தலை எடுத்தது.

'தன்னை அவரே தனிமையாக ஸ்டேஷ னுக்கு வரச் சொல்லி யிருக்கிருர் என் ருல் உடல் நலம் மிகவும் மோசமாகத் தான் இருக்க வேண்டும். அப்படி என்ன அவருக்கு வந்து விட்டது'—இவ்வாறு அவள் கவலைப்பட ஆரம்பித்தாள்.

மறுநாள் காலை ஆறு மணிக்கு வண்டி வருகிறது ஸ்டேஷனுக்கு. அதற்குள் அங்கே போய் நாம் தயாராக இருக்க வேண்டும். அவரை 'டாக்ஸி'யில் வீட் டுக்கு அழைத்துக் கொண்டுவந்து தகுந்த டாக்டரைக் கொண்டு கவனிக்க வேண் டும். இவ்வாறெல்லாம் அவள் சிந்தனை சென்றது. மன உளைச்சலிலும், உடல் அசதியிலும் இரவில் அபர்ணு படுத்த வுடன் தூங்கிப் போய் விட்டாள்.

ஏதோ கனவு கண்டு, பரபரப்புடன் விழித்துக் கொண்டாள் அவள். "ஐயய் யோ! என்ன அசட்டுத்தனம். இப்படித் தூங்கி விட்டேனே. ரயில் ஸ்டேஷ னுக்கு வந்திருந்து அவர் என்னைக் காணு விட்டால் என்ன நினைப்பார்." அவள் பரபரப்பாக தன் சேலையை ஒழுங்கு படுத்திக் கொண்டே மணியைப் பார்த் தாள். அந்த அலாரம் கடியாரம், மணி ஐந்தடித்து இருபத்தி ஐந்து நிமிஷம் என்பதைக் காட்டியது. 'பரவாயில்லை. ரயில் வருவதற்குள்ளாக ஸ்டேஷனை அடைந்து விடலாம்' என்று எண்ணி, கதவைப் பூட்டிக்கொண்டு வாசலில் இறங்கினுள் அபர்ணு. வழக்கத்துக்கு விரோதமாக ஒரு வண்டிகூடத் தென் படவில்லை. வானம் இருண்டிருந்தது. மேகங்களுக்கு இடையில் எங்கோ ஒரு நக்ஷத்திரம் பளிச்சிட்டது. அந்த இருட் டும் தனிமையும் சேர்ந்து அவளுக்குக் கொஞ்சம் அச்சத்தை விளைவித்தன. எனி னும் 'கணவனுடைய சொல்படி கேட்க வேண்டும்' என்ற கடமை அவளை முன்னே உந்திச் சென்றது. போகும் வழியில் வண்டிகள் எத்தனையோ கிடைக்

கும். ஏதாவது ஒன்றில் ஏறிக் கொண்டால் போகிறது என்று எண்ணி வேகமாக நடந்தாள் அவள்.

இரு பக்கமும் மரங்களடர்ந்த சாலையை வந்தடைந்தாள் அபர்ணா. 'என்ன ஆச்சரியம்! இன்னும் இருள் பிரிய வில்லையே' என்று எண்ணினாள். வண்டிகள் ஒன்றுகூட தென்படவில்லை. திகைத்தாள் அவள். திரும்பிப் போய் விடலாமா என்று கூடத் தோன்றியது. ஆனால் அதற்குள் வேறொரு விஷயம் நடந்தது. மரத்து மறைவிலிருந்து ஆஜானுபாகுவான ஒரு உருவம் அவள் முன்னே வந்து நின்று வழி மறித்தது. அது பேயோ, பிசாசோ என்று பயந்தாள் அபர்ணா. "இந்த நடு ராவிலே எங்கேம்மா புறப்பட்டே!'' என்று ஏளனமாகப் பேசிக் கொண்டே அந்த உருவம் அவளை நெருங்கியது. அவள் நினைத்தது போல் பேயும் இல்லை, பிசாசும் இல்லை. கொடுமைத் தொழிலை நடத்தி வரும் மனித இனத்தின் ஒரு சாராரைச் சேர்ந்தவன் அவன். தான் பெரியதொரு ஆபத்தில் சிக்கிக் கொண்டதை உணர்ந்தாள் அபர்ணா.

சலிங்...சலிங்...சலிங்...ஒரு குதிரை வண்டி அதிவேகமாக ஓடி வந்து கொண்டிருந்தது, அந்த வழியாக. குதிரை வண்டியின் சப்தமும், குதிரையின் கழுத்தில் கட்டியிருந்த மணியின் சப்தமும் அபர்ணாவுக்கு தைரியத்தை அளித்தன. அந்த மனித உருவம் சற்று மரத்தின் பின்னால் மறைந்து கொண்டது. வண்டி சமீபத்தில் வந்ததும் வண்டியிலிருந்த வெளிச்சம் அவள் மேல் விழுந்தது. ''வண்டியில் ஏறிக் கொள்ளுங்கள்'' இரண்டு குரல்கள்—அவளுக்குப் பழக்கப்பட்ட குரல்கள் சேர்ந்தாற் போல் ஒலித்தன.

வண்டி நின்றது. அபர்ணா வண்டியில் ஏறிக் கொண்டாள். வண்டி காற்றாய்ப் பறந்தது.

வண்டி செல்லும் போதுதான், "அபர்ணா! இந்த வேளையில் நீ எங்கே இப்படிப் புறப்பட்டாய்'' என்று ஆச்சரியத்துடன் வண்டிக்குள்ளிருந்த ஸ்ரீதர் கேட்டபோது திகைத்துப் போனாள் அபர்ணா.

அபர்ணா துணிச்சலை வரவழைத்துக் கொண்டு நடந்த விவரங்களைத் தலை குனிந்தபடியே கூறினாள். கடைசியாக, 'மணி இப்பொழுது என்ன இருக்கலாம்'' என்று கேட்டாள். ஸ்ரீதர் தன் கைக் கடிகாரத்தை வண்டியின் விளக்கு வெளிச்சத்தில் பார்த்தான். "இரண்டரை ஆகிறது, அபர்ணா'' என்றான் சாவதானமாக. "ஐயோ மணிகூட என்னை ஏமாற்றி விட்டதே. ஐந்தரை ஆகப் போகிறது என்றல்லவா பரபரப்புடன் வந்தேன்'' என்று அங்கலாய்த்தாள் அவள். சிறிது நேரம் யோசிப்பது போலிருந்தான் ஸ்ரீதர். பிறகு, "மணியின்மேல் பழி போடாதே அபர்ணா. உனக்கிருக்கும் கவலையில் நீ கடிகாரத்திற்கு சாவி கொடுக்கத் தவறியிருப்பாய்'' என்றான் அவன்.

சுமார் மூன்று மைல் தூலைவிலுள்ள ஒரு கிராமத்தில், தியேட்டர் ஒன்றில் ஒரு நல்ல படம் நடப்பதை அறிந்திருந்தான் ஸ்ரீதர். வண்டிக்கார முனுசாமியைப் போக வர வாடகை பேசிக்கொண்டு அவன் படம் பார்த்து விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தான். வழியில்தான் இந்த சம்பவம் நடந்தது. முனுசாமி அபர்ணாவுக்கும் பழக்கப்பட்டவன்தான். அபர்ணா கணவன் வீட்டுக்கு வந்த புதிதில் அவன்தான் அவர்கள் வீட்டு வேலைக்காரனாக இருந்தான். அப்புறம் சிறுகச் சிறுக பணம் சேர்த்து ஒரு வண்டியும் குதிரையும் வாங்கிக் கொண்டு சொந்தமாகத் தொழில் நடத்தி வந்தான்.

வண்டி நின்றது. முதலில் ஸ்ரீதர்தான் இறங்கிக் கதவைத் திறந்தான். அப்புறம் தான் அபர்ணா உள்ளே நுழைந்தாள். உள்ளே நுழைந்த அவளுக்குப் பெரிய ஆச்சரியம் காத்திருந்தது. "ஆனந்தி எங்கே?" என்றாள் முதல் கேள்வியாக.

வண்டியை அனுப்பி விட்டு, உள்ளே நுழைந்த ஸ்ரீதர் அவளைப் பரிதாபமாகப் பார்த்தபடி, "அபர்ணா! நானும், உன் தங்கையும்தான் உன் கணவருக்கு விரோதிகள். உன் பெற்றோர்கள் என்ன செய்தார்கள், பாவம். அவர்களுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளக்கூட உன் கணவர் உன்னை அனுமதிப்பதில்லை போலிருக்கிறது. இல்லாவிட்டால் உனக்கு விஷயம் தெரிந்திருக்க வேண்டுமே'' என்றான் அவன்.

தன் கணவன் எவ்வளவு பொல்லாதவனாக இருந்தாலும், தனக்கு முன்னால் ஒருவர் அவனைப் பற்றிக் குறைவாகப் பேசுவதை அபர்ணாவால் பொறுக்க முடியவில்லை. ஆனாலும், அதை அந்த

வேளையில் ஆக்ஷேபிக்க விரும்பவில்லை அவள். "ஆனந்தி இல்லாத வீட்டிற்கு என்னை எதற்காக அழைத்து வந்தீர்கள்!" என்றுள் துக்கம் மேலிட.

ஸ்ரீதர் முன்போலவே அவளைப் பார்த்துச் சிரித்தான். "ஆனந்தி கர்ப்பவதி. பிரசவத்திற்காகப் பிறந்தகம் போய்க் கிட்டத்தட்ட ஒரு மாதம் ஆகிறது. நீ அதோ அந்த அறையில் பயமின்றிப் படுத்துக் கொள். விடிந்ததும் ஸ்டேஷனுக்குச் சென்று உன் கணவரை அழைத்துக் கொண்டு வீட்டிற்குப் போகலாம்" என்ற ஸ்ரீதர் ஒரு அறையைச் சுட்டிக் காண்பித்தான். அதிவேகமாக அந்த அறைக்குள் சென்ற அபர்ணு கதவைப் படீரெனச் சாத்தித் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டாள்.

அலை கடல் துரும்புபோல் அவள் நெஞ்சம் தவித்துத் தத்தளித்தது. "எப்பேர்ப்பட்ட கஷ்டங்களை எல்லாம் அடைய வேண்டி வந்தது. கடைசியில் இப்பொழுது இருக்குமிடமே பெரிய இடைஞ்சலான இடம்தானே. ஸ்ரீதரின் நடத்தையைப் பற்றி அவளால் ஒன்றுமே கண்டு கொள்ள முடியவில்லை. 'அவன் நல்லவனு? அல்லது கெட்டவனு? 'கொஞ்சம் விட்டுப் பிடிக்க வேண்டும்' என்ற நோக்கத்துடன் நல்லவன்போல அவன் நடந்து கொள்ள முயற்சித்திருக்கலாம். ஏன், அப்படி இருக்க முடியாது.' இவ்வாறெல்லாம் அவளுடைய சிந்தனை சென்றது. விடிவதற்காக இருந்த மீதிப் பொழுதை அவள் அழுது கொண்டே கழித்தாள்.

சரியாக ஐந்தரை மணிக்கு ஸ்ரீதர் வந்து அவளை அழைத்தான். அவன் அமர்த்திக் கொடுத்த வண்டியில் ஏறிக் கொண்ட அபர்ணு குனிந்த தலை நிமிராமல் அவனிடம் விடை பெற்றுக் கொண்டாள். ஸ்டேஷனுக்குச் சென்று தன் கணவனை அழைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தாள். அபர்ணு எண்ணியது போல சேகருக்கு அவ்வளவு மோசமாக இல்லை தேக நிலை. நடக்கும்போது கால் பிசகியதால் சுளுக்கிக் கொண்டுவிட்டது. ஆகவே அவனுல் நடக்க முடியவில்லை. லேசாக ஜுரமும் அடித்துக் கொண்டிருந்தது. அபர்ணுவின் தகுந்த வைத்திய சிகிச்சையினுல் இரண்டு நாட்களுக்கெல்லாம் அவன் பழய நிலைமை அடைந்து வேலைக்குப் போகவும் துவங்கி விட்டான்.

சேகர் ஊரில்லாத சமயத்தில் நடந்த விஷயத்தை அபர்ணு அவனிடம் கூற வில்லை. அது தனக்கு இன்னும் தீங்கை உண்டாக்கும் என்பதை உணர்ந்து மௌனமாயிருந்தாள். ஆனுல், வண்டிக்கார முனுசாமி சேகரைத் தேடிக் கொண்டு வந்து விஷயங்களை சாங்கோபாங்கமாகக் கூறி விட்டான். தன் வண்டியும், அதில் ஸ்ரீதரும் அன்று இருந்திருக்கா விட்டால் அபர்ணு அன்று பிழைத்திருக்கவே முடியாது என்பதையும் எடுத்துச் சொன்னுன்.

அபர்ணு மும்முரமாக ஏதோ வேலையில் ஈடுபட்டிருந்தாள். அவள் தலை மயிரைப் பிடித்து கரகர வென்று இழுத்துக் கொண்டு வந்து சேகர் அவளைக் கீழே தள்ளிக் காலால் உதைத்தான். கோபத்தினுல் அவனுடைய கண்களும், முகமும் கோவைப் பழம் போல் சிவந்திருந்தன.

"எனக்கு உடம்பு சரியில்லை என்று எழுதியவுடன் நான் இறந்து விடுவேன் என்று எண்ணினுய் அல்லவா? அதனுல்தான் உன் ஆசை நாயகன் ஸ்ரீதரை காணச் சென்று விட்டாய் போலும். உன் கள்ளத் தனத்தை என்னிடம் மறைக்கப் பார்த்தால் முடியுமா?" என்று உறுமினுன் சேகர்.

"நான் உண்மையை முன் கூட்டியே உங்களிடம் சொல்லி யிருந்தாலும் நீங்கள் என்னை நம்பப் போகிறீர்களா, என்ன? அந்த சமயத்தில் அவர் வந்து என்னைக் காப்பாற்றி யிராவிட்டால்..." அபர்ணு பேச்சை முடிக்கு முன், தன் பலம் கொண்ட மட்டும் அவளை அடித்தான் சேகர்.

"திருடன் கையில் நீ அகப்பட்டிருந்தால்கூட நான் சந்தோஷம்தான் அடைவேன். ஆனுல், என் விரோதியின் வீட்டில் போய் தங்கியதைத்தான் என்னுல் சகிக்க முடியவில்லை. அன்று உன்னைக் காப்பாற்றிய ஸ்ரீதரே இனிமேலும் உன்னைக் காப்பாற்றட்டும்" என்று கோபாவேசமாக மொழிந்த சேகர், அபர்ணுவை வெளியே தள்ளிக் கதவைச் சாத்தினுன். மேலும், அந்த இடத்திலேயே இருந்து கொண்டிருப்பதில் எவ்விதப் பிரயோசனமும் இல்லை என்று கண்ட அபர்ணு மேற்கொண்டு நடக்க வேண்டியதைச் சிந்தித்தாள்.

தன்னிடமுள்ள ஒன்றிரண்டு நகைகளை விற்றுப் பணமாக்கிக்கொண்டு ரயிலேறி

பிறந்தகம் வந்தாள். ஆனால் அங்கு அபர்ணாவுக்கு சரியான வரவேற்புக் கிடைக்கவில்லை.

அந்தக் குடும்ப நிலைமை ரொம்பவும் கஷ்டமானதாகவே இருந்தது. மகள் இப்படி வந்துவிட்ட துக்கத்தில் அபர்ணா வந்த ஆறு மாதங்களில் தந்தை காலமாகிவிட்டார். அவருக்குப் பயந்துகொண்டு தன் எண்ணத்தை வெளியிடாதிருந்த அவள் துணிச்சலாக செயலில் இறங்கினாள். தாய் அவளுடைய செய்கையை தடுக்கவோ, ஆதரிக்கவோ இல்லை. தனக்கு முன்பு நாட்டியம் சொல்லிக் கொடுத்தவரைத் தேடிப் பிடித்து அறைகுறையாக விட்ட சிக்ஷையைத் தொடர்ந்தாள். அவருடைய செல்வாக்கினாலேயே சினிமாவிலும் சேர்ந்து, இன்று பெரியதொரு ஜொலிக்கும் நக்ஷத்திரமாக விளங்குகிறாள். துணிவு வந்துவிட்டால் எந்தக் கார்யத்தையும் சாதித்துவிடலாம் என்பதற்கு அபர்ணா ஒரு எடுத்துக்காட்டாக விளங்கினாள். ஆனால்......அபர்ணாவின் சிந்தனை மறுபடியும் ஸ்ரீதரின் பக்கம் வெறுப்பாகத் திரும்பியது.

ஸ்ரீதர்தான் தன் வாழ்க்கைக்கு அடி நாளிலிருந்தே விரோதி என்ற எண்ணம் அபர்ணாவுக்கு உண்டு. அவனை நினைத்த போதெல்லாம் அவள் நெஞ்சு துயரத்தினாலும், கோபத்தினாலும் துடிக்கும். அப்பேர்ப்பட்ட ஸ்ரீதர் தன்னுடைய இந்த சினிமா வாழ்விலும் புகுந்து தன்னை நாசம் செய்யக் கிளம்பி யுள்ளான் என்று அவள் எண்ணினாள். ஸ்ரீதருடன் சேர்ந்துதான் அவள் நடிக்க முயன்றாள். ஆனால் மனச் சஞ்சலம் இடம் கொடுக்கவில்லை. படமுதலாளியும், டைரெக்டரும் அவளுடைய நடிப்பில் தங்களுடைய அதிருப்தியைக் காண்பித்தார்கள். தான் அடைந்துள்ள புகழெல்லாம் எங்கே இந்தப் படத்தின் மூலம் பறந்து போய் விடுமோ என்று கவலையே உருவாக உட்கார்ந்திருந்தாள் அபர்ணா.

பழைய சம்பவங்களைச் சிந்தித்து அதிலேயே மூழ்கிப் போயிருந்த அவளுடைய சிந்தனை டிரைவர் பேச்சால் தடைப்பட்டது. ''வீட்டுக்குப் போக கார் தயாராக இருக்கம்மா'' என்றான் அவன். அபர்ணா அவசர அவசரமாகக் காரில் போய் உட்கார்ந்துகொண்டு படீரென்று கதவைச் சாத்திக் கொண்டாள். கார் சென்று கொண்டிருந்தது; அவள் மனம் ஸ்ரீதரைத் திட்டிக் கொண்டிருந்தது.

அபர்ணா தன் பங்களாவை அடைந்த போது, ஸ்ரீதர் தன் வேலையாளின் மூலம் கொடுத்தனுப்பிய கடிதம் அவளை வரவேற்றது. அவளுடைய ஆத்திரம் எல்லை மீறியது. ''அவன் தன்னை அவமானப் படுத்தியோ, கிண்டல் செய்தோ தான் அந்தக் கடிதத்தை எழுதியிருக்க வேண்டும். இல்லாவிட்டால், 'சினிமாவில் நடிக்கக்கூடியவள்தானே, தன்னுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்துகொள்ள இது தான் சமய'மென்று எழுதியிருப்பானா! சாதாரணமாக, பலபேரிடையே இந்த துர் எண்ணம் பரவி யிருக்கும் போது கெட்ட எண்ணமே உருவான ஸ்ரீதர் ஏன் அப்படி எழுதியிருக்கமாட்டான்'' என்று தான் தோன்றியது அபர்ணாவுக்கு. அவள் கடிதத்தைப் பிரித்தாள்:

''அன்பார்ந்த அபர்ணா!

பள்ளி நாட்களிலேயே எனக்கு நடிக்க வேண்டும் என்ற ஆர்வம் அளவுக்கு மிஞ்சி உண்டு. பள்ளி நாடகங்கள் பலவற்றில் நடித்துப் பரிசுகளும் பெற்றிருக்கிறேன். சினிமாவில் சேர்ந்து என்னுடைய முழுத் திறமையையும் வெளிப்படுத்த எண்ணி இத்தனை நாட்களாக முயன்று வந்தேன். இப்பொழுது ஒரு அரிய சந்தர்ப்பம் கிடைத்தது. நீ என்னுடன் சேர்ந்து நடிக்கும் சமயங்களில் ஏற்படும் உன்னுடைய மனக் கஷ்டத்தை அறிந்துகொண்டேன். என்னால் உன் புகழுக்கு பங்கம் விளையலாம்—விளையக்கூடும்—என்று தோன்றுகிறது. அபர்ணா! நீ என்னை விரோதியாக பாவிக்கலாம். ஆனால் அன்றுமுதல்இன்று வரை உன்னிடம் எனக்குப் பரிதாப உணர்ச்சிதான் தோன்றிக்கொண்டு வந்திருக்கிறது. இரண்டுமுறை உன் வாழ்வில் என்னையும் அறியாமலே குறிக்கிட்டு விட்டேன். இனிமேலும் குறிக்கிட விரும்பவில்லை. என்னுடைய ஒப்பந்ததை நான் ரத்து செய்து விட்டேன். இனிமேல் நீ கவலைப்பட வேண்டாம்.

இப்படிக்கு, ஸ்ரீதர்.''

அபர்ணா இந்தக் கடிதத்தைப் பலமுறை படித்தாள்- ''ஸ்ரீதர்! உன்னை பற்றி எவ்வளவு தவருக எண்ணிக் கொண்டிருந்தேன். உன் பெருந்தன்மையே பெருந்தன்மை. உன்னைப்போன்ற உள்ளமுள்ளவர்கள் ஆண் வர்க்கத்தில் இருந்தால் பெண்களின் நிலைமை எவ்வளவோ மேன்மையடையுமே!'' அபர்ணாவின் கண்களிலிருந்து இரு சொட்டுக் கண்ணீர் கீழே விழுந்து சிதறியது.

இது செய்தி

சினிமா கோஷ்டியினர் திரும்பினர்

அமெரிக்காவுக்குப் போயிருந்த, இந்திய சினிமா கோஷ்டியின் சென்னைப் பிரதிநிதிகளான டைரெக்டர் கே. சுப்ரமண்யமும், நடிகை டி. சூர்யகுமாரியும் சென்ற மாதம் 24ம் தேதி சென்னை திரும்பினர். விமான நிலையத்தில் பலர் கூடி வரவேற்றனர். இவர்களுக்கு சென்ற மாதம் 26ம் தேதி, தென்னிந்திய பிலிம் சேம்பர் உட்லண்ட்ஸிலும், நாடகக் கழகத்தினர் சுகுணவிலாஸ் சபையில் சென்ற மாதம் 29ம் தேதியும் வரவேற்பளித்தனர். இருவரும் தங்களுக்களித்த வரவேற்புக்கு பதிலளிக்கையில் தங்களது விஜயத்தின் போது தாங்கள் கண்டு, கேட்ட பல ரஸமான தகவல்களைக் கூறினார்கள்.

பாகிஸ்தான் தடையுத்தரவு

இந்தியப் படங்களை, மேற்கு பாகிஸ்தானில் இறக்குமதி செய்வதை உடனடியாகத் தடை செய்ய பாகிஸ்தான் சர்க்கார் தீர்மானித்துள்ளது. 'இந்தியப் படங்களின் போட்டா போட்டியினின்று பாதுகாப்பு அளித்தால், சீக்கிரத்தில் பாக் சினிமாத் தொழில் வளர்ச்சி பெற இடமுண்டு' என்று பாகிஸ்தான் பிலிம் ஆலோசனைக் கமிட்டி கூறியதன் பேரிலேயே இந்தத் தடை விதிக்கப்பட்டதாம். கிழக்குப் பாகிஸ்தானிலும் இன்னும் கொஞ்ச காலத்திற்கே இந்தியப் படங்கள் இறக்குமதி அனுமதிக்கப்படுமாம்; பிறகு அங்கும் தடை செய்யப்படுமாம்.

கட்டணம் குறைக்கப்பட்டது

இம்மாதம் முதல் வாரத்தில் பம்பாய் மாகாணத்திலுள்ள பல தியேட்டர்களில் கட்டண விகிதம் குறைக்கப் பட்டிருக்கிறது. ஷோலாப்பூரில் 4 தியேட்டர்களில் குறைந்த கட்டணம் ஒரு அணாவாகக் குறைக்கப் பட்டிருக்கிறது. பம்பாய் நகரில் சில தியேட்டர்களில், ஏற்கெனவே பத்தரை அணா வாங்கப்பட்ட வகுப்புகளுக்கு ஐந்தணாவாகக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. சிறிது காலமாக சினிமாக் கொட்டகைகளில் வசூல் குறைந்து வருவதைப் பார்த்தே தியேட்டர்காரர்கள் கட்டணத்தைக் குறைத்து வருகிறார்கள்.

டெலிவிஷனில் இந்தியப் படம்

இம்மாதம் முதல் வாரத்தில் பம்பாயில் டெலிவிஷன் படம் எடுக்கப்பட்டது. இந்தியாவில் இதுவே முதல் முயற்சி. முப்பது நிமிஷ நேரம் நடக்கக்கூடிய இந்த டெலிவிஷன் படத்தில் பம்பாயின் பல்வேறு பகுதிகள் படமாக்கப்பட்டுள்ளனவாம். இது அமெரிக்க டெலிவிஷன் ரேடியோவில் காட்டப்படுவதற்காக எடுக்கப்பட்டுள்ள படம்.

சலனப்பட சங்கத் தீர்மானம்

இம்மாதம் முதல் தேதி, பம்பாயில் சலனப்பட சங்கக் கூட்டம் ஒன்று நடந்தது. ரேடியோவில் சினிமாப் பாட்டுகள் ஒலி பரப்புவது சம்பந்தமாக அகில இந்திய ரேடியோவுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை ரத்து செய்ய நோட்டீஸ் கொடுக்க சங்கம் தீர்மானித்தது. பிரதான நடிகர், நடிகைகள், சங்கீத டைரெக்டர் இவர்கள் நியமனத்தை ஒழுங்குபடுத்துவது, விளம்பரச் செலவுகளைக் குறைத்து அவைகளை ஒழுங்குபடுத்துவது இப்படிப் பல விஷயங்களைப் பற்றி விவாதம் நடைபெற்றது. சங்கத்தினர், பாகிஸ்தான் படங்களை இந்திய சர்க்கார் உடனடியாக தடை செய்ய வேண்டுமெனவும் வற்புறுத்தி ஒரு தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

அகர்வாலா கண்டனம்

'இன உணர்ச்சிகளைத் தூண்டும் காட்சிகள் ஹிந்திப் படங்களில் அதிகமாக உள்ளன' என்று, மத்திய பிலிம் தணிக்கை போர்டு தலைவர் அகர்வாலா ஒரு அறிக்கையில் கூறியிருக்கிறார். வாழ்க்கையைச் சித்தரிக்கும் படங்களில் **ஆண் பெண்**

உறவைக் காட்டாமல் இருக்க முடியா தென்றும், ஆனால், கண்யமான முறையில் அதுகாட்டப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார். வயது வந்தோர் மட்டும் பார்க்கும் படம் என்ற பாகுபாட்டை நீக்கிவிடுமாறு தணிக்கை போர்டு சிபார்சு செய்திருப்பதாகவும், இந்தப் பாகுபாடு தான் இப் படங்களைப் பார்க்க சிறுவர் களைத் தூண்டுகிறதெனவும் அவர் தெரிவித்துள்ளார். ஏராளமான பணத்தை அள்ளிவிட வேண்டுமென்ற நோக்கத்துடனேயே சில படத் தயாரிப்பாளர்கள் இன உணர்ச்சிக் காட்சிகளைப் படங்களில் சேர்க்கிறார்கள் என்று அவர் குறை கூறியிருக்கிறார்.

அண்ணாமலை மண்டபம்

தமிழ் இசைச் சங்கத்திற்கென, சென்னையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள மண்டபத்திற்கு, காலஞ்சென்ற ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியாரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. அந்த மண்டபத்தின் கிரகப்பிரவேச விழா சென்ற மாதம் 31ம் தேதி வெகு விமரிசையாக நடைபெற்றது. வைதீக முறைப்படி கிரகப் பிரவேச விழா நடந்தது குறிப்பிடத் தக்கது. விழாவிற்கு, முதன் மந்திரி ராஜாஜி, ஆர். கே. ஷண்முகம் செட்டியார், மற்றும் பல பிரபல பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தனர். தமிழ் இசைப் பள்ளி மாணவர்களின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது. சுமார் ஏழரை லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இம் மண்டபத்தில் இந்த வருஷம் தமிழ் இசைச் சங்கக் கச்சேரிகள் நடைபெறுமெனத் தெரிகிறது.

"பராசக்தி"க்குக் கண்டனம்

சென்ற மாதம் 18ம் தேதி, தேவ கோட்டையில் பல ஆஸ்திகர்கள், குன்றக்குடி ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பராமாசாரிய சுவாமிகள் தலைமையில் கூடி "பராசக்தி" படத்தைப்பற்றிக் கண்டித்திருக்கிறார்கள். 'இப் படம் சமயத்திற்கும், பண்பாட்டிற்கும் கேடு தரும் முறையில் இருக்கிறதென்றும், சர்க்கார் இப்படத்தை உடனே தடைசெய்ய வேண்டுமென்றும்' தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

சர்வதேச கலைப்பட விழா

இம்மாதம் 28, 29, 30ம் தேதிகளில் நியூயார்க் நகரில் சர்வதேச திரைப்பட கலை விழா நடைபெற விருக்கிறது. இந்த விழாவை, மத்திய அமெரிக்கக் கலைக் கழகம், கலைச்சங்கம் ஆகியவைகள் நடத்துகின்றன. இதில் பல தேசத்தினர் கலந்து கொள்ளுகின்றனர். இந்த விழாவில் "பழங்கால இந்தியக் கலைகள்", "மறைந்த சாம்ராஜ்யம்" "மஹாபலிபுரத்து ஏழு கற்கோயில்கள்" ஆகிய மூன்று இந்தியப் படங்களும் கலந்து கொள்ளப் போகின்றன.

நாடக நிகழ்ச்சிகள்

சென்ற மாதம் 12, 13 ஆகிய இரு தினங்களிலும், மயிலை ரஸிக ரஞ்சனி சபாவில் "மிஸ். ஜானகி" என்ற நாடகம் நடை பெற்றது. 'ஆனந்த விகடன்' "தேவன்" அவர்கள் எழுதிய நாடகம் இது. விறுவிறுப்பான கதை. சம்பாஷணைகள் மிகவும் ஹாஸ்யமாக எழுதப்பட்டிருந்தன. நாடகத்தை, திருவல்லிக்கேணி பைன் ஆர்ட்ஸ் அங்கத்தினர்கள் திறம்பட நடித்தார்கள்.

இதே இடத்தில், சென்ற மாதம் 18ம் தேதி, க்ருபா அமெச்சூர்ஸ் நடித்த "துர்க்காதாஸ்" நாடகம் நடைபெற்றது. வி. ஸி. கோபால்ரத்னம் எழுதிய நாடகம் இது. நாடகத்தில் பங்கெடுத்துக்கொண்ட டாக்டர் வி. ராமமூர்த்தி, ஸி. வரதராஜன் மற்றும் அனைவரும் உணர்ந்து நடித்தார்கள்.

சென்ற மாதம் 19ம் தேதி, "கருணை" என்ற சமூக நாடகம், செயின்ட்மேரீஸ் ஹாலில் நடைபெற்றது. இந்த சமூக நாடகத்தை நாடகக் கலை மன்றத்தினர் நடித்தார்கள். நன்கு நடிககப்பட்ட இந்த நாடகத்தில் நந்தினியாக பாத்திரமேற்ற எஸ். செல்லத்தின் நடிப்பு குறிப்பிடும்படி சிறப்பாக இருந்தது.

இம்மாதம் 2ம் தேதி, மயிலை, ரஸிக ரஞ்சனி ஸபாவில் "செகரட்டரி" என்ற சமூக நாடகம் நடைபெற்றது. அமெச்சூர் நடிகர்கள் குழுவினர் நாடகத்தை நடித்தார்கள். அன்றைய நாடகத்திற்கு டி. கே. ஷண்முகம் தலைமை வகித்தார்.

ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி சபா

ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி ஸபாவின் ஆதரவில், சென்ற மாதம் 19ம் தேதி ரங்கநாயகியின் இன்னிசைக் கச்சேரியும், 26ம் தேதி செம்மங்குடி ஸ்ரீனிவாஸ அய்யரின் இன்னிசைக் கச்சேரியும் தக்க பக்க வாத்தியங்களுடன் நடைபெற்றன.

சினிமா ரஸிகர் சங்கம்

நேருஜி சென்ற மாதம் சென்னைக்கு விஜயம் செய்திருந்தபோது, ராஜ்பவனில் பல்வேறு ஸ்தாபனங்கள் ஏற்பாடு செய்திருந்த ஸ்டால்களைப் பார்வையிட்டார். சினிமா ரஸிகர்கள் சங்கத்தினர் ஏற்பாடு செய்திருந்த ஸ்டாலுக்கும் அவர் விஜயம் செய்தார். சென்ற மாதம் 14ம் தேதி, இச் சங்கத்தினர், சமீபத்தில் திருமணமான நடிகர்—டைரெக்டர் எஸ். பாலச்சந்தரை கௌரவித்து, ஆசிகூற ஒரு வரப்வேற்பளித்தனர். சங்கத்தின் தலைவர் பாலச்சந்தரது திறமைகளைப் பாராட்டினர். 'ஆனந்த விகடன்' உதவி ஆசிரியர் ஜி. சதாசிவம் பாலச்சந்தர் விசிறிகளை கௌரவிப்பதைக் குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார். பாலச்சந்தர் தமக்கு அளித்த வரவேற்புக்கு பதிலளித்து வந்தனம் தெரிவித்தார்.

பில்ம் சென்டர்

அருணு பில்ம்ஸாரின் சொந்த ஸ்டியோவான பில்ம் சென்டர், செப்டம்பர் மாதம் 27ம் தேதி ஆரம்பிக்கப்பட்டது. அன்று டைரெக்டர் கே. ராம்னுத் தலைமையில் ஆரம்ப பூஜை விழா நடந்தது.

வாழ்த்துகிறேம்

ஏவி. எம். ஸ்டுடியோவில் பணியாற்றி வரும் சிரஞ்சீவி எஸ். பி. அர்ஜுனன் இம்மாதம் 5ம் தேதி செங்கோட்டையில் சௌ. லக்ஷ்மியை மணந்து கிருஹஸ்தரானுர்.

மதுரை, ரதி பதிப்பகத்தின் பதிப்பாசிரியர் ரதிமோஹன் தமது இளைய சகோதரியின் திருமணத்தை சிறப்பாக, மதுரையில், இம்மாதம் 7ம் தேதி நடத்தினர். மணமகன் அண்ணுமலை.

தம்பதிகளுக்கு 'குண்டூசி'யின் மனமார்ந்த வாழ்த்துகள்.

வருந்துகிறேம்

பிரபல புகையிலை வியாபாரிகளான இ. எஸ். மைதின் கம்பெனியின் முதலாளியான இ. எஸ். மைதின் சென்ற மாதம் 31ம் தேதி காலமான செய்தி கேட்டு வருந்துகிறேம். அவர் தர்ம சிந்தனைமிக்க உத்தமராக இருந்து வந்தார். அவரது பிரிவால் வருந்தி நிற்கும் குடும்பத்தாருக்கும், அநேக நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த அனுதாபம்.

இம்மாதம் 3ம் தேதி, சினிமா நடிகை எம். எம். ராதாபாய், காஞ்சீபுரத்தில் தமது இல்லத்தில், தமது 35 வயதில் காலமான செய்தி கேட்டு வருந்துகிறேம். இவர் "பதிபக்தி", "ராஜமோஹன்", "ஹரிதாஸ்", "வேலைக்காரி" மற்றும் பல படங்களில் நடித்திருக்கிறுர்.

பாட்டே இல்லாத படம்

சென்ற மாதம் 16ம் தேதி பம்பாயில், நடிகர்—டைரெக்டர் கிஷோர் சாஹு தமது பத்தாவது படத்தின் ஆரம்ப பூஜையை நடத்தினுர். "கூன்-ஏ-நஹாக்" என்ற இந்த ஹிந்திப் படத்தில் பாட்டுகளே இருக்காதாம். இந்த விழாவுக்கு பில்ம் விசாரணைக் கமிட்டியின் தலைவராக இருந்த, எஸ். கே. பாட்டில் தலைமை வகித்தார். அவர் தற்பொழுது நாட்டிலுள்ள தணிக்கை முறையின் அடிப்படையே தவருனது என்று குறிப்பிட்டார். படத் தயாரிப்பு பற்றி ஒன்றுமே தெரியாதவர்களும், பண்பாடுபற்றி விபரீதமான கருத்துகள் கொண்டவர்களுமே தணிக்கை செய்கின்றனர் என்று குறை கூறினுர்.

பொது விவகார கௌன்ஸில்

சென்ற மாதம் 23ம் தேதி, பொது விவகார கௌன்ஸில் என்ற ஒரு ஸ்தாபனத்தை ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் ஆரம்பித்து வைத்தார். கௌன்ஸில் பொதுக்காரியதரிசியான, ஜெமினி விளம்பர அதிகாரி, வி. கே. என். சாரி, கௌன்ஸின் நோக்கங்களை விளக்கிக் கூறினுர்.

"இந்தியப் புதல்வன்"

ஹாலிவுட் படமுதலாளி அலெக்ஸாண்டர் மார்க்கி, பம்பாயில் "இந்தியப் புதல்வன்" என்ற ஆங்கிலப் படத்தைத் தயாரிக்கும் பூர்வாங்க முயற்சியில் முனைந்திருக்கிறுர். இந்தியர்களிடமிருந்து மேனுட்டினர் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் பல உள்ளன என்றும், அதை விளக்குவதே இப் படத்தின் பிரதான நோக்கமென்றும் அவர் தெரிவித்தார்.

அரங்கேற்றம்

பேபி ஜயலக்ஷ்மியின், நடன அரங்கேற்றம், சென்ற மாதம் 18ம் தேதி கோகுலே ஹாலில் நடைபெற்றது. இந்த பேபி, டி. கே. எஸ். பிரதர்ஸைச் சேர்ந்த டி. வி. சௌந்தரராஜனின் சிஷ்யை.

பிரம்மலோகம்

"கல்கி"யின் "பொய் மான் கரடு" கதையைப் படமாக்கி வரும் ஜெயந்தி புரொடக்ஷன்ஸார் தங்களது படத்திற்கு "பொன் வயல்" என்று பெயரிட்டு மும்முறமாக படப்பிடிப்பை நடத்தி வருகிறார்கள். ஏ. டி. கே. டைரெக்ஷனில் வாஹினி ஸ்டுடியோவில் படம் தயாராகி வருகிறது. டி. ஆர். ராமச்சந்திரன் செங்கோடனாகவும், அஞ்சலிதேவி செம்பவளவல்லியாகவும் அசல் பட்டிக்காடுகளாக நடித்துவருகின்றனர். மனோஹர் அசல் காலடியாகவும், சாரங்கபாணி போலீஸ் ஜவானாகவும் வந்து அமர்க்களப்படுத்துகிறார்களாம். மற்றும் மைனவதி என்ற புது முகத்தை இப் படத்தில் மூலம் அறிமுகப் படுத்தப் போகிறார்கள்.

என் வீடு

அடுத்த மாதம் 29ம் தேதி, தங்களது "என் வீடு" தமிழ்—தெலுங்குப் படங்களை ஒரே சமயத்தில் வெளியிடத் தேதி கொடுத்துவிட்டார்களாம் அவர் இந்தியா பில்ம்ஸார். வாஹினி ஸ்டுடியோவில் வி. நாகய்யா டைரெக்ஷனில் படப் பிடிப்பு முடிவடைந்து வருகிறது. உள்ளம் உருக்கும் பல சம்பவங்களைக் கொண்ட கதையாக இருக்குமாம் படக் கதை. வி. நாகய்யா, டி. ஆர். ராஜகுமாரி, டி. எஸ். பாலய்யா, கோபாலகிருஷ்ணன் ஆகியோருடன் வித்யாவதி என்ற புது நடிகையும் பிரதம பாகங்களில் நடித்து வரும் படம் இது. இப்படத்தில் பல அமெச்சூர் நடிகர்களுக்கு சந்தர்ப்பம் அளித்திருக்கிறாராம் நாகய்யா.

மனிதன்

"மனிதன்"—பொங்கலன்று வெளிக்கிளம்பிவிடத் தீர்மானமாகி விட்டது. அடுத்த ஜுபிடரின் வெளியீடு இப்படமாகவே இருக்கும். ஜுபிடர்—லாவண்யா கூட்டுத் தயாரிப்பான இப்படத்தை ராம்னாத் சிறந்த முறையில் டைரெக்ட் செய்து வருகிறாராம். டாக்டராக டி. கே. பகவதியும், சைத்ரீகனாக டி. கே. ஷண்முகமும் உணர்ச்சியுடன் நடித்திருக்கிறார்களாம். மாதுரிதேவி, கிருஷ்ணகுமாரி, பிரண்ட் ராமசாமி, ஸி. வி. வி. பந்துலு ஆகியோரும் நடித்து வருகின்றனர். நாடகமாகப் பிரபலமான இக் கதை படமாக வரும்போது ரஸிகர்களிடை அமோக வரவேற்புக் கிடைக்கும் என்றே தெரிகிறது.

பணம்

டிஸம்பர் மாதம் திரைக்கு வரக்கூடிய படங்களில் மதராஸ் பிக்சர்ஸாரின் "பணம்" ஒன்றாக இருக்கும். என். எஸ். கிருஷ்ணன் டைரெக்ஷனில் இப்படம் வாஹினி ஸ்டுடியோவில் முற்றுப் பெற்று வருகிறது. டி. ஏ. மதுரம் இப்படத்தில் ஒரு லேடி டாக்டராக வருகிறாராம். பத்மினி, வி. கே. ராமசாமி, டி. கே. ராமச்சந்திரன், எஸ். டி. சுப்புலக்ஷ்மி, டி.வி. சேதுராமன் ஆகியோர் நடிக்கின்றனர். சமீபத்தில் குடைதைக்கும் சாயபு (டி. வி. சேதுராமன்) சம்பந்தப்பட்ட காக்ஷி ஒன்று படமாகியது.

குமாஸ்தா

அருணா பில்ம்ஸாரின் இரண்டாவது தயாரிப்பான "குமாஸ்தா" தமிழ்—தெலுங்கு இரு மொழிகளிலும் அவர்களது சொந்த ஸ்டுடியோவான பில்ம் சென்டரில் ஜரூராகப் படமாகி வருகிறது. நாகய்யா, மனோஹர், நரசிம்மபாரதி, கே. ராமசாமி, சிவதாணு, ஸி. வி. வி. பந்துலு, பண்டரிபாய், ஜெயம்மா, எம். சரோஜா இப்படிப் பலர் நடிக்கும் இரு படங்களையும் ஆர். எம். கிருஷ்ணஸ்வாமி டைரெக்ட் செய்து வருகிறார்.

மதன மோஹினி

லிபர்ட்டி பிக்சர்ஸாரது "மதன மோஹினி" எம். எல். பதியின் டைரெக்ஷனில் உருப்பெற்று வரும் சுறுசுறுப்பிலிருந்து படம் ஜனவரியில் திரைக்குவந்துவிடக் கூடுமெனத் தெரிகிறது. ஸி. ஆர். ராஜகுமாரி, பொள்ளாச்சி கமலா, நரசிம்ம பாரதி, வீரப்பா, புளிமூட்டை ராமசாமி மற்றும் பலர் நடிக்கும் படம் இது.

மனைவியின் மகன்

ஜம்புபுரொடக்ஷன்ஸாரது "மனைவியின் மகன்" ரேவதி ஸ்டுடியோவில் சுறுசுறுப்பாக உருப்பெற்று வருகிறது. இப்படத்தின் கதை-வசனங்களை ராவே (ரா. வெங்கடாசலம்) மிகச் சிறப்பாக எழுதியிருக்கிறாராம். எம். வி. ராஜம்மா, கண்ணப்பன், கே. சாரங்கபாணி, கணேசன், ஸி. வி. வி. பந்துலு ஆகப் பலர் நடிக்கும் இப் படத்தை எம். வி. ராமன் டைரெக்ட் செய்து வருகி

ளூர். இதே படத்தை "ஸ்வாகன்" என்ற பெயரில் ஹிந்திப் படமாகவும் தயாரித்து வருகிருர்கள். மனைவி (எம்.வி. ராஜம்மா) மறு மணம் புரிந்து கொள்ள வேண்டுமென வாக்குறுதி பெற்றுக் கொண்டு கணவன் (கண்ணப்பன்) மரண மடையும் ஆஸ்பத்திரிக் காட்சி ஒன்று சமீபத்தில் படமாகியது.

உலகம்

வெகு நாட்களாகவே தயாராகிவரும் தங்கள் படத்திற்கு ஸொஸைடி பிக்சர்ஸார் இப்பொழுது தான், தமிழ்ப் படத்திற்கு "உலகம்" என்றும், தெலுங்குப் படத்திற்கு "பிரபஞ்சம்" என்றும் பெயரிட்டுவெளியிட்டிருக்கிருர்கள். எம். வி. ராஜம்மா, வி. நாகய்யா, பி. கே. சரஸ்வதி, டி. கே. பகவதி, டி. வி. சேதுராமன் மற்றும் பல நக்ஷத்திர நடிகர்கள் நடிக்கும்இப்படத்தின் கதையை பட முதலாளி மூனுஸே எழுதியிருக்கிருராம். ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோவில் எல். எஸ். ராமச்சந்திரன் டைரெக்ஷனில் படப் பிடிப்பு முடிவடையும் நிலையிலிருக்கிறதென்றும், சீக்கிரமே இப்படங்கள் திரையிடப்படுமெனவும் தெரிகிறது.

அனுதை

"அனுதை" என்று ஒரு தமிழ்ப் படம் மைசூர் நவ ஜோதி ஸ்டுடியோவில் தயாராகி வருகிறதாம். இது ஸ்ரீ ஷண்முகா பிலிம் கம்பெனியாரது தயாரிப்பென்றும், பிரதம பாகங்களில் குமரேசன், சரஸ்வதி, சம்பங்கி, டி. வி. சேதுராமன், சுலோசனு ஆகியோர் நடிப்பதாகவும் தெரிய வருகிறது.

புதுப் படங்கள்

"ஜமீன்தாரை"த் தயாரித்த சங்கீத பிக்சர்ஸார் அடுத்தபடி "அதிருப சிந்தாமணி" என்ற படத்தைத் தயாரிக்க பூஜை காட்டிருக்கிருர்கள். இப்படம் கோவை, சென்ட்ரல் ஸ்டுடியோவில் தயாராகும்.

புது கம்பெனியான ஓம் பிலிம்ஸார், "நம் குழந்தைகள்" என்ற படத்தைத் தயாரிக்க திட்டமிட் டிருக்கிருர்கள். இப்படம் நர்ஸு ஸ்டுடியோவில் தயாரிக்கப்படும். வி. நாகய்யா, எஸ். பாலசந்தர், லலிதா, பத்மினி, ராகினி ஆகியோர் இப்படத்தில் நடிப்பார்களாம்.

"சிங்காரி", "மாப்பிள்ளை" ஆகிய இரு படங்களைத் தயாரித்து வெற்றி கண்ட நாஷனல் பிக்சர்ஸார் அடுத்தபடி "உலகம் பலவிதம்" என்ற படத்தைத் தயாரிக்கப் போகிருர்கள். இப் படத்தின் ஆரம்பவிழா கோலாகலமாக, சென்ற மாதம் 8ம் தேதி நியூடோனில் நடைபெற்றது. விழாவுக்கு என். எஸ். கிருஷ்ணன் தலைமை வகித்தார். ராஜா ஸர் எம். ஏ. முத்தய்யா செட்டியார் காமிராவை ஓடவிட்டார். ராஜா சந்திரசேகர் எழுதியதாம் இக்கதை. டி. ஆர். ரகுநாத் டைரெக்ஷனில் உருவாகப் போகும் இப்படத்தில் பல நக்ஷத்திர நடிகர்கள் நடிப்பார்களாம். மதருஸ் பிக்சர்ஸ் சர்க்யூட், ஏ. எல். எஸ். ஸ்ரீனிவாஸன் இப் படத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ளார்.

அஸோஸியேட் புரொடக்ஷன்ஸார்—அடுத்தபடி ஒரு படத்தை, தமிழ்—மலையாளம் இரு மொழிகளிலும் தயாரிப்பதில் முனைந்துவிட்டிருக்கின்றனர். மூன்றே மாதங்களில் படங்களைத் தயாரித்துத் திரையிடத் தீர்மானித்து மும்முறமாக இருக்கிருர்களாம். படங்களில் பி. எஸ். சரோஜா, கிரிஜா, பொன்னம்மா, கணேசன், பாலய்யா, கே. ராமஸ்வாமி பிரதம பாகங்களில் நடிக்கிருர்களாம்.

சேலம் அசோகா புரொடக்ஷன்ஸார் "பத்மினி" என்ற சமூகப்படத்தைத் தயாரிக்கப் போவதாகத் தெரிவித்திருக்கிருர்கள். தமிழ்—தெலுங்கு—மலையாளம்—ஹிந்தி நான்கு பாஷைகளிலும் இப்படம் தயாரிக்கப்படுமாம்.

பட விநியோகஸ்தர்களான பெல் பிக்சர்ஸார், மாடர்ன் தியேட்டர்ஸிலிருந்து விலகிவிட்ட கோடக் ஸ்ரீனிவாஸன் கூட்டுறவில் ஒரு படம் தயாரிக்கப் போகிருர்கள். இப்படத்திற்கான கதையை ஜாவர் சீதாராமன் எழுதியிருக்கிருர். பிரதம பாகத்தில் சீதாராமன்—நாகய்யா இருவரில் ஒருவர் நடிப்பாரெனத் தெரிகிறது. படத்தை 'முருகதாஸா' டைரெக்ட் செய்யலாமென்றும் தெரிகிறது.

வாழ்க்கை வர்ணனை

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

களைப் படங்களில் நம் நடிகர்கள் நடித்துள்ளதை நாங்கள் பார்த்திருக்கிறோம்'' என்று கூறுகிறீர்களாக்கும்? "அவையெல்லாம் கற்பனைக் கதைகள்; வெறும் நடிப்பு. ஆனால் மேலே சொன்ன சம்பவமோ என் வாழ்க்கையில் உண்மையாகவே நிகழ்ந்தது'' என்று ஆணித்தரமாக உங்களுக்குப் பதிலளிக்கிறார், பிரபல நடிகர் ஸி. வி. வி. பந்துலு! இப்பொழுது நீங்கள் உண்மையிலேயே ஆச்சரியப்படுகிறீர்கள் அல்லவா?

இராமநாதபுரம் ஜில்லாவில் குருந்தமடம் என்றோர் கிராமம் உள்ளது. அதுதான் நம் பந்துலுவின் சொந்த ஊர். 1901ம் வருஷம் ஜூலை மாதம் 8ந் தேதியன்று ஸ்ரீ. பு. வெ. வெங்கடகிருஷ்ணய்யரின் மூத்த புதல்வராய் பிறந்த இவர், வளர்ந்து வந்தது தம் தயாரின் பிறந்த இடமான (திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த) சிந்தாமணி கிராமத்தில். பள்ளியில் சேர்க்கப்பட்டாரே தவிர, 'அதற்கும் தமக்கும் வெகுதூரம்' என்பதை சீக்கிரமே வெளிப்படுத்திவிட்டார்.

இதைத் தெரிந்துகொண்ட தகப்பனர், புத்திசாலித்தனமாக பந்துலுவுக்கு ஸ்ரீ. ராமகிருஷ்ண பாகவதர் என்பவரிடம் சங்கீத சிக்ஷைக்கு ஏற்பாடு செய்தார். மூன்று வருஷ சிக்ஷைக்குள் பந்துலு பலகீர்த்தனங்களை ஒழுங்காகப்பாடவும், ஹார்மோனியத்தில் அவற்றை வாசிக்கவும் கற்றுக்கொண்டு விட்டார். பிறகு அவர் சிந்தாமணி காமேஸ்வர பாகவதரின் சிஷ்யராகச் சேர்ந்து, அந்த பாகவதரின் காலக்ஷேபங்களில் பின்பாட்டுப் பாடி வரலானர். பிரபல ஹார்மோனிய வித்வானன காலஞ்சென்ற கே. எஸ். தேவுடு ஐயர்கூட இந்த பாகவதரிடம் அச்சமயம் பின்பாட்டுப் பாடி வந்தார்.

காமேஸ்வர பாகவதர், ஒரு சமயம், போடி நாய்க்கனூரில் காலக்ஷேபங்கள் செய்துவந்தார். பந்துலுவும் அவருடன் தானிருந்தார். இதே சமயத்தில் பிரபல சின்னசாமா ஐயரின் நாடகக் கம்பெனி அந்த ஊரில் நாடகங்களை நடத்தி வந்தது. ஸ்ரீ. ஐயரும், நாடகச் சக்கரவர்த்தியாய் விளங்கிய பி. எஸ். வேலுநாயரும் பிரதம பாகங்களில் நடித்து வந்தனர். இவர்களின் நாடகங்களைப் பார்த்ததின் பலனாக கதா காலக்ஷேபங்கள் அவருக்குச் சப்பிட்டு விட்டது; அவரை நாடகப் பைத்தியம் பிடித்துக் கொண்டது.

கையிலோ காலணாக்கூடக் கிடையாது; மனதிலோ பிரமாதமான நாடகப் பைத்தியம்; ஆனால் அதில் ஈடுபடுதற்கான சரியான மார்க்கமோ தெரியவில்லை —இப்படியாக குற்றாலத்தை அடைந்த பந்துலு ஆண்டிப்பட்டி ஜமீன்தார் ஸ்ரீ. பெத்தாச்சி செட்டியாரிடம் சரண் புகுந்தார். அவர் ஸ்ரீ. முத்தய்யா பாகவதரிடம் பந்துலுவை சிஷ்யராக அமர்த்தினர்.

கொஞ்ச காலத்திற்குப் பிறகு பந்துலு பூச்சி ஐயங்கார் அவர்களிடம் சிஷ்யராய் அமர்ந்தார். ஒருமுறை பூச்சி ஐயங்காருடன் கூட பந்துலுவும் சென்னைக்கு வந்தார். வந்த இடத்தில், பிரசித்தி வாய்ந்த கல்கத்தா பியாரா சாஹேபின் ஹிந்துஸ்தானி சங்கீதக் கச்சேரியைக் கேட்டார். அதுமுதல் பந்துலுவுக்கு ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் நாட்டம் ஏற்பட்டுவிட்டது. ஊர் திரும்பிய பின், குருவிடம் தம் விருப்பத்தைத் தெரிவித்து, அவருடைய ஆசி பெற்று, சென்னையை அடைந்தார்.

சென்னையில் அப்போது பத்மாஸனி பாய் என்பவர் காலக்ஷேபங்கள் செய்வதில் பிரமாதப் புகழுடன் விளங்கினர். தம் நோக்கம் நிறைவேறுவதற்கான பணத்தைச் சேர்த்துக்கொள்ளும் எண்ணத்துடன் இவரிடம் பின்பாட்டுப் பாடுவதற்கு அமர்ந்தார் பந்துலு. போதிய பணம் சேர்ந்ததும் பந்துலு கல்கத்தாவுக்குப் புறப்பட்டுச் சென்றார். பிறகு அவர் அங்கிருந்து காசியை அடைந்தார்.

காசியில் சிவமடம் ஒன்றுள்ளது. மஹா கவி பாரதியாரது சகோதரியின் மாப்பிள்ளையான ஸ்ரீ. கேதாரிநாத் சிவம் என்பவர்தான் இந்த மடத்தின் அதிபதி. ஸ்ரீ. சிவம் ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் வித்வத்துவம் உடையவர். அதோடுகூட அபாரமாய் ஹார்மோனியம் வாசிக்கக் கூடியவர். இவர் நம் பந்துலுவுக்கு முன்பே அறிமுகம் உடையவராய் இருந்தது நல்லதாகிவிட்டது. பந்துலு சிவம் அவர்களிடம் ஹிந்துஸ்தானி சங்கீதத்தைப் பயிலத் தொடங்கினர். இந்த சமயத்தில்

''மனிதன்'' படத்தில் வி. வி. வி பந்துலு

தான்—இவ்வர்ணனையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ள ஆச்சரியமான சம்பவம் நிகழ்ந்தது.

மேற்படி சம்பவத்திற்குப்பிறகு பந்துலு காசியில் இருக்க விரும்பவில்லை. ஆதலால் அங்கிருந்து கிளம்பி, தம் சொந்த ஊருக்குப் போய்ச் சேர்ந்தார். பையன் வந்தது தான் தாமதம்; தகப்பனார் அவனுக்கு ஒரு பெண்ணைக் (1918ல்) கல்யாணம் செய்து வைத்து விட்டார். ஆனால், இரண்டே மாதங்களுக்குள் அவர் மனைவி இறந்து விட்டாள். இதனால் வருத்தம் மேலிட்ட பந்துலு சொந்த ஊரை விட்டு வெளியேறினார்.

திருப்பாணம் பஞ்சாபகேச பாகவதர், நீலித நல்லூர் சேஷய்யங்கார், லேடி பாகவதர் திருகோகர்ணம் கனகாம்புஜம் ஆகியோரது காலக்ஷேபங்களில் பந்துலு கொஞ்ச கொஞ்ச காலம் பின்பாட்டுப் பாடி வந்தார். ஆனால், அவருக்கு வர வர பின்பாட்டுப் பாடும் வேலையில் மிகச் சலிப்பேற்பட்டு விட்டது. ஆகவே, நாடக உலகில் எப்படியும் புகுந்து விடுவது என்ற தீர்மானத்துடன் அவர் வி.

வி. கிருஷ்ணய்யர் என்ற நாடக நடிகருடன் சென்னைக்கு வந்தார். ராயல் தியேட்டரில் அப்போது நாடகம் நடத்தி வந்த வேலு நாயர் கம்பெனி இவ்விருவருக்கும் இடம் அளித்தது.

ஸ்ரீ. கிருஷ்ணய்யர், நாயர் கம்பெனியை விட்டு விலகியதும் எர்ணாகுளத்திற்குச் சென்று ''பாரத பூஷண கான சபா'' என்ற கம்பெனியை ஆரம்பித்தார். பந்துலுவும் அவருடன் சென்று இக் கம்பெனியில் சேர்ந்தார். இவர்கள் நடத்திய ''விக்ரம ஸ்திரீ சாகஸம்'' நாடகத்தில் பந்துலு பெண் வேஷம் தரித்து மிகப் புகழ் பெற்றார்!

கொஞ்ச காலத்திற்கு பிறகு, பந்துலு இந்தக் கம்பெனியிலிருந்து விலகி, ஆரிய கான சபையில் நடிகராகவும், பிரபல ஸ்ரீ ரங்கம் சடகோபாச்சாரி யாரிடம் பின்பாட்டுக் காரராகவும் சிற்சில மாதங்கள் இருந்து வந்தார். இந்த சமயத்தில் அவருக்கு இரண்டாவது முறை திருமணம் நடந்தேறியது.

நாடக உலகில் ஒரு 'மேடையோடி' யாக இருந்து வந்த பந்துலுவின் தொழில் இரண்டாவது திருமணத்திற்கு பிறகு ஒரு உருவான முறையில் அமையத் தொடங்கியது. திருநெல்வேலியில் நாடகம் ஆடிக் கொண்டிருந்த கன்னையா கம்பெனியில் பந்துலு சேர்த்துக் கொள்ளப் பட்டார். இக் கம்பெனியாரின் மிகப் புகழ்பெற்ற ''தசாவதாரம்'' நாடகத்தில் முதன் முதலாக நாரதர் வேஷத்தில் தோன்றி ஜமாய்த்து விட்டார். அவரது பாட்டையும், நடிப்பையும் ஜனங்கள் ஒருங்கே புகழத் தொடங்கினார்கள். இதனால் கன்னையா நாளுக்கு நாள் பந்தலுக்கு அதிக மதிப்பு அளித்து அவருக்கு பிரதம பாத்திரங்களையும் தரலானார்.

பந்துலு கம்பெனியில் சேர்ந்த காலத்தில் அக் கம்பெனியில் எஸ். ஜி. கிட்டப்பா பிரதம நடிகராக விளங்கி வந்தார். பின்னர், பி. பி. ரங்காச்சாரியும், காலஞ் சென்ற எம். ஆர். கிருஷ்ணமூர்த்தியும் கம்பெனியில் சேர்ந்தனர். பந்துலு இக் கம்பெனியில் ஒன்பது வருஷ காலம் இருந்து வந்தார். 'அவர் பெற்ற நாட

கப் புகழ் எல்லாம் இந்த ஒரே கம்பெனி மூலமே பெற்றதுதான்' என்று கூடச் சொல்லி விடலாம். ஸ்ரீ. கன்னையா 1933ல் காலமானர். சிறிது காலத்திற்குப் பின் பந்துலு இக் கம்பெனியிலிருந்து விலகினர்.

இந்த சமயத்தில் கும்பகோணத்தில்—மஹாமஹ வைபவத்தை முன்னிட்டு—குப்பி வீரண்ணாவின் கம்பெனி முகாமிட்டிருந்தது. பந்துலு இக் கம்பெனியில் சேர்ந்தார். ஒரு வருஷ காலத்திற்குப் பிறகு அதனின்றும் விலகி, சுப்பய்யா பாகவதர், வேலம்மாள், தேவுடு ஐயர் இவர்களுடன் இலங்கைக்குச் சென்று நாடகங்களில் நடித்து விட்டு வந்தார்.

பந்துலு இந்தியா திரும்பியவுடன் அவரது தொழில் விஷயத்தில் ஒரு அதிர்ஷ்டகரமான மாறுதல் ஏற்பட்டது. "கிருஷ்ண லீலா" தமிழ்ப் படத்தைத் தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்த சேலம் ஏஞ்சல் பில்ம்ஸார் அவரை வஸுதேவரின் வேஷத்திற்கு ஒப்பந்தம் செய்து கொண்டனர். இந்தப் படத்தில் அவரது நடிப்பையும், பாட்டையும் ரஸிகர்கள் புகழத் தொடங்கினர்கள். அதன் விளைவாக அவருக்கு சினிமா வுலகில் எடுத்த எடுப்பிலேயே நல்ல கிராக்கி ஏற்பட்டு விட்டது. அவர் ஒன்றன்பின்னென்ருய் மளமள வென்று பல படங்களில் நடிக்கத் தொடங்கினர். அந்தக் காலத்தில் பிரபலமாய் விளங்கிய சொற்ப கதாநாயகர்களுள் பந்துலுவே முதல் ஸ்தானம் வகித்தார்.

"பால யோகினி" உள்பட பந்துலு தம் முதல் ஒன்பது படங்களில் நடித்து விட்டு, மலேயா, பினங்கு, சிங்கப்பூர், கோலாலம்பூர் முதலிய இடங்களுக்கு 'டிரியோ' சாரதாம்பாளுடன் சென்று பல நாடகங்களில் நடித்து விட்டு வந்தார். இந்தியா திரும்பியதும் பந்துலு "நந்த குமார்" படத்தில் நந்த கோபனக நடித்தார்.

பந்துலு இதுவரையில் 36 படங்களில் நடித்திருக்கிருர். தற்போது ஐந்து படங்களில் அவர் ஏககாலத்தில் நடிக்கிருர்.

பந்துலு, புராணம், சமூகம்—இவை தவிர பழங்கதைப் படங்கள், சரிதைப் படங்கள், ஸ்டன்ட் படங்கள் முதலிய வற்றிலும் தோன்றி யிருக்கிருர். வேலைக்காரன் முதல் ராஜாவரையில் — ஏன், கடவுள்கள் வரையில் — அவர் சினிமா

ஸி. வி. வி. பந்துலு

நடித்த படங்கள்

1. கிருஷ்ண லீலா
2. திரௌபதி வஸ்திராபஹரணம்
3. சீதா வனவாசம்
4. தூக்குத் தூக்கி
5. ஞானசௌந்தரி (ஸௌண்ட் லீடி)
6. ராஜாம்பாள் (ஸௌண்ட் லீடி)
7. மீரா (ஸௌண்ட் லீடி)
8. உஷா கல்யாணம்
9. பாலயோகினி
10. நந்த குமார்
11. ஆனந்தாஸ்ரமம்
12. மாணிக்கவாசகர்
13. ஊர்வசியின் காதல்
14. உத்தம புத்திரன்
15. சதி மஹானந்தா
16. பக்த கௌரி
17. ஹரிஹரமாயா
18. காளமேகம்
19. கங்காவதாரம்
20. கிருஷ்ண பிடாரன்
21. உத்தமி
22. பக்த ஹனுமான்
23. மோஹினி ருக்மாங்கதா
24. யோகி வேமனு (தெலுங்கு)
25. இதய கீதம்
26. கன்னியின் காதலி
27. கிருஷ்ண விஜயம்
28. நவ ஜீவனம்
29. மச்சரேகை
30. வன சுந்தரி
31. மோஹன சுந்தரம்
32. சௌதாமினி
33. தர்ம தேவதா
34. தாய் உள்ளம்
35. கல்யாணம் பண்ணிப் பார்
36. ஏழை உழவன்

தற்போது நடித்துவரும் படங்கள்

1. ஔவை
2. மனிதன்
3. பணக்காரி
4. குமாஸ்தா (அருணா)
5. நம் குழந்தைகள்
6. மனைவியின் மகன்

நடனம் ஆடினர்

சென்ற மாதம் 12ம் தேதியன்று தாம்பரம் சங்கீத சபையின் ஆதரவில் நேஷனல் ஸ்கூல் ஹாலில் குமாரி தங்கமணியின் நடனக் கச்சேரி நடை பெற்றது. அன்று, "ஸ்வரம்", "வர்ணம்" முதலிய சாஸ்திரீய தொகுப்புகளைவிட, கச்சேரியின் பிற்பகுதியில் இருந்த "ஸ்லோகம்", "குறத்தி", "பிளேட் டான்ஸ்" முதலிய நிகழ்ச்சிகள் ஸ்வாரஸ்யமாக இருந்தன. "காளிய மர்த்தன" நடனம் இன்னும் சற்று பாவ விஸ்தாரமாக அமைந்திருக்கலாம். பதாபிநயங்களுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட பதங்களில் விரிவாக இல்லாதது குறைபாடாகவே இருந்தது. பதங்களில் அநுபாவங்களின் சேர்க்கையில் லாகவம் குறைந்து துண்டு துண்டாக இருப்பதுபோல் காணப்பட்டது. "யாரென்று" என்ற யதுகுல காம்போதி பதத்தில் நல்ல விறு விறுப்பும் ரஸனையும் மிகுந்திருந்தன. குறத்தி நடனத்தில் 'துடிப்பை உண்டாக்கும் சொடுக்கான வெட்டுகள்' என்று சொல்லுவார்களே அதுபோன்ற அசைவுகளைச் சேர்த்தால் பிரமாதமாக இருக்கும். "நாதர் முடிமேல்" (பாம்பாட்டி) நடனத்தில், உடலை எவ்வளவு தூரம் அசாதாரணமாக வளைக்க முடியும் என்று சபையினருக்கு அறிவிப்பதற்கு எடுத்துக் கொண்ட கஷ்டமான பிரயாசைகள் இன்றியே நடனம் நன்றாக இருந்திருக்கும்.

முத்திரைகளின் உபயோகங்களில் அநேக இடங்களில் கவனக் குறைவு காணப்பட்டது. முக்கியமாக, தெய்வங்களுக்கு ஏற்ற முத்திரைகள் நூல்களில் விரிவாக உள்ளன. ஒரு சிலையைப் பார்த்த உடன் அதன் ஹஸ்த முத்திரைகளையும் நிலையையும் கொண்டு, அது எந்த தெய்வத்தின் சிலை என்று சுலபமாக சொல்ல முடிகிறதோ, அதுபோலவே ஏற்ற முத்திரைகளைப் பொருத்தமான நிலைபுடன் உபயோகித்தால் ஆட்டத்திலேயே ஒரு அழகும் தெளிவும் தோன்றும். கச்சேரி முழுதும் சுத்தமான தாளக் கட்டுடன் இருந்ததற்கு குமாரி தங்கமணியின் திறமையும் அநுபவமும் காரணம் எனச் சொல்லலாம்.

அன்றையக் கச்சேரியில் பின்னணி இசையின் பொருத்தத்தோடு நட்டுவனர் பி. எஸ். ராமஸ்வாமியின் வாசிக இனிமையும் சேர்ந்து கச்சேரியைக் கன ஜோராக செய்து விட்டது.

வில் நடிக்காத வேஷமே இல்லையென்று கூடச் சொல்லி விடலாம். பொதுவாகப் பார்த்தால், அவருக்கு நல்ல வேஷங்களைக் கொடுப்பதிலோ, அசாத்தியமான கவனம் செலுத்துவதிலோ நம் படாதிபதிகள் அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை என்றுதான் கூற வேண்டும். இதற்கு பந்துலு என்ன செய்யக் கூடும்? ஏதோ கொடுத்த வேஷத்தை முடிந்த வரையில் நன்கு நடித்துவிட்டு, கிடைத்த பணத்தை வாங்கிக் கொள்ளுவதோடு அவர் இருந்து விட்டார். சமீப காலத்தில் வெளிவந்திருக்கும் ("கல்யாணம் பண்ணிப் பார்" போன்ற,சில படங்களில் தான் நம் படாதிபதிகள் அவருக்கு நல்ல வேஷங்களைக் கொடுத்து, சரிவரப் பயன் படுத்திக் கொள்ளத் தொடங்கி யிருக்கின்றனர்.

சுமார் ஐந்தே முக்கால் அடி உயரமும், சிவந்த அழகான தோற்றமும் உள்ள பந்துலு ஒரு தமிழ்நாட்டுத் தெலுங்கர். ஆகவே, தாய் பாஷை தெலுங்குதான் என்றாலும், அவர் பள்ளியில் கற்றது தமிழ் பாஷைதான். இவை தவிர, கன்னடம், மலையாளம், ஹிந்துஸ்தானி, ஆகிய பாஷைகளை நன்கு பேசும் திறமையையும் அவர்பெற்றிருக்கிறார்.

பந்துலுவுடன் பிறந்தவர்கள் இரண்டு இளைய சகோதரர்களும் இரண்டு இளைய சகோதரிகளும் ஆவர். தம்பிகளில் ஒருவரான ஸி. வி. ராமச்சந்திரனும் ஒரு சினிமா நடிகராக இருக்கிறார். பந்துலுவுக்கு இரு குழந்தைகள் பிறந்து இறந்து விட்டன.

பந்துலு சதா தமாஷாக நண்பர்களுடன் அன்புடன் பழகும் சுபாவம் உடையவர். தற்போது அவருக்கு 51 வயது பூர்த்தி ஆகி விட்டதென்றாலும் அவர் ஒரு வாலிபருக்குரிய துறுதுறுப் புடனும், நடை யுடை பாவனைகளுடனும் காணப்படுகிறார்.

Printed by S. Sriraman at Commercial Printing & Publishing House,
46, Armenian Street, Madras—1. Edited and Published by
P. R. S. Gopal (Gundoosi) at 26, Godown St., Madras—1.

134137

பலஹீனர்களுக்கு

போர்டிஸ் (FORTIS): மிகவும் ஆச்சரியமான புது தயாரிப்பு. மனித உடலின் சகல சக்திகளுக்கும் புத்துயிரளிக்க உத்திரவாதமளிப்பது. புதிய ரத்தம் உற்பத்தியாவதுடன், 5 முதல் 10 பவுண்டு எடை அதிகரிக்கிறது. முகத்திற்கு தேஜஸையும் அழகையும் அளிக்கிறது. இரவில் இந்திரிய ஸ்கலிதம், சகலமான பலஹீனங்கள், முதுகு வலி, இருமல், சளி, நீரிழிவு, நரம்புத் தளர்ச்சி, மலச் சிக்கல், அஜீரணம் இவைகளுக்கு நிச்சயமான நிவாரணம் அளிப்பது. இது ஒரு ஆச்சரியமான டானிக். உபயோகிப்பவர்களுக்கு பிரமிக்கத் தக்க ஆண் தன்மையை அளிக்கிறது. ஒரு புட்டி மருந்தை உபயோகிப்பதன் மூலம் 10 முதல் 15 வயது வரை இளமையாய் காணப்படுவார். இதை உபயோகிப்பவர் இந்த டானிக்கின் குணத்தையும், அது உடலில் செய்யும் குறிப்பிடத்தக்க மாறுதலையும் கண்டு பிரமிப்பார். இது மனிதத் தன்மையை அடையும்படிச் செய்து, வாழ்க்கையை இன்பமாக அனுபவிப்பதற்கு மிக உதவுகிறது. விலை: புட்டி ஒன்று ரூ. 2. தபால் செலவு அணு 14.

போர்டிஸ் 'டலா' (FORTIS 'TALA') இது இரண்டாவது தயாரிப்பு. மர்மஸ்தானங்களில் பூசினதும் மின்சாரம்போல் பலன் அளித்து, அதற்கு இரும்புபோன்ற வலுவை அளிக்கிறது. இதில் சிறிதளவு ஒரு இறைச்சித் துண்டு மீது ஊற்றப்பட்டால், அது ஜீவன் பெறுவதுபோல் அசைந்து கொடுக்கும். இது நபும்ஸகத்திற்கு சிறந்த நிவாரணி என்பதற்கு இதுவே சான்று. இந்த 'டலா' மூலம், வாலிப சேஷ்டைகளால் ஏற்பட்ட தவறுகள் நீக்கப்படும். பாட்டில் ஒன்று ரூ. 2. தபால் செலவு அணு 12. இரண்டு மருந்தையும் சேர்த்து வாங்குவோருக்கு தபால் செலவு இனும். இவைகளை மழை, குளிர், கோடை, எந்தக் காலத்திலும் உபயோகிக்கலாம்.

Sole Distributors:

M/s. BAGH SINGH SIDHU & SONS, (G.M)

CHEMISTS AND DRUGGISTS

BAZAR BHAIRON :: JULLUNDUR CITY

7. VELLORE—3

பீடிச்சக்கரவர்த்தி
த.பி.சொக்கலால்
ராம்சேட் பீடி
TRADE MARK
REGISTERED
RAMSAIT BEEDI
த.பி.சொக்கலால்
முக்கூடல்
INDIA No.5901
CEYLON No.5929
ஸ்தாபகர்
PROP:- T.P.S. HARIRAM SAIT.